
Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



மழைக்கான சாத்தியம் உண்டு.

27.°C 26.°C

பக்கம் 24 ■ சுடர்: 28 ■ கதிர்: 342 ■ வள்ளுவர் ஆண்டு: 2044 | ஐப்பசி 18, திங்கள் 04.11.2013

## வலி.வடக்கு வீடழிப்பு: நீதிமன்ற அவமதிப்பு

### சட்டத்தரணிகள் சங்கம் விரைவில் முறைப்பாடு

கொழும்பு, நவ.04

வலி.வடக்கு காணி அபகரிப்பு தொடர்பாக நீதிமன்றத்தில் சுமார் 2000 வழக்குகள் இன்னமும் தீர்க்கப்படாமல் நிலுவையில் இருக்கின்றன. இந்த நிலையில் வலி.வடக்கில் தம்வசமுள்ள காணிகளில் படையினர் மக்களின் வீடுகளை உடைத்து நொருக்குகின்றனர். அந்த இடங்களில் புதிய கட்டடங்களை நிர்மாணிக்கின்றனர். உண்மையில் ஒரு காணிபற்றிய வழக்கு நிலுவையில் இருக்கும் போது இவ்வாறு செய்வது நீதிமன்றத்தை அவமதிக்கும் செயலாகும். எனவே இது குறித்து உயர்நீதிமன்றில் முறைப்பாடு ஒன்றைச் செய்யவுள்ளோம்.

- இவ்வாறு தெரிவித்துள்ளது இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்.

இது தொடர்பில் சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரான குணரட்ண வன்னி நாயக்க தெரிவித்தார்.

நீதிமன்றச் செயற்பாடுகளுக்கு மாறாக இராணுவம் செயற்பட்டுவருவது தொடர்பான ஊடக அறிக்கைகள், வரைபடங்கள் என்பவற்றை நீதி மன்றில் அடுத்த அமர்வின் போது

24

## ஐ.தே.க. செயற்குழு இன்று கூடுகின்றது

கொழும்பு, நவ.04

ஐக்கிய தேசியக் கட்சியைத் தொடர் தோல்விகளிலிருந்து மீட்டெடுப்பதற்காகவும், புதிய பொறிமுறையை வகுப்பதற்காகவும் பலத்த நெருக்கடிகளுக்கு மத்தியில் இன்று மாலை 4 மணிக்கு கட்சியின் செயற்குழு கூடுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் இடம் பெறவிருக்கும் இக்கூட்டத்தில் கட்சியின் தலைமைத்துவம் சம்பந்தமான சில முக்கிய முடிவுகளும் எடுக்கப்படும் என தெரிய வருகிறது.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கருஜயசூரிய

24

ரயில் மோதி 10 பேர் சாவு வதந்தியால் ஆந்திராவில் அவலம் 06

பற்றிக்ஸ் கல்லூரிக்கு நேற்று வந்தார் சங்ககார 22

கென்யாவை வென்றது இலங்கை 23

### இறுதிப்போரில் நடந்தேறிய கொடூர நிகழ்வுகளை

# இனியும் இலங்கை மறைக்க முடியாது

### உடன்நடவடிக்கை தேவை என்கிறார் இந்திய இணையமைச்சர் நாராயணசாமி

கொழும்பு, நவம்பர் 4

இறுதிப்போரில் இசைப் பிரியா உயிரோடு பிடிக்கப்பட்டு படுகொலை செய்யப் பட்டமையானது மன்னிக்க முடியாத மாபெரும் குற்றமாகும். இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளன என்பதற்கு இதுதொடர்பான சனல்-4 காணொலி வலிமையான ஆதாரமாகும். இனியும் இப்படியான நிகழ்வுகள் நடக்கவில்லை என்று இலங்கை மறைக்க முடியாது. இத்தகைய கொடூரங்களைப் புரிந்தவர்கள் மீது இலங்கை அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழகம் மற்றும் ஈழத் தமிழர் களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தே பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்வதான இறுதிமுடிவை இந்தியப் பிரதமர் எடுப்பார்."



இவ்வாறு இந்தியப் பிரதமர் அலுவலக இணை அமைச்சர் வி.நாராயணசாமி நேற்று வலியுறுத்தினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

"இசைப்பிரியா உயிருடன் பிடிக்கப்பட்டு பின்னர் கொல்லப்படுவதை காண்பிக்கும் வகையிலான காணொலியை சனல்-4 தொலைக்

24

## வடக்கே செல்ல எந்த நாடும் கோரவில்லை

### வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, நவ.4

பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனும்,நியூஸிலாந்துவெளிவிவகார அமைச்சர் முரேமக்கெல்லியும் வடக்குக்குச்சென்று நிலைமைகளைப் பார்வையிட வுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், பொது

24

## காணொலியைக் காரணமாக்கி மாநாட்டைப் புறக்கணிக்காதீர்

### இந்தியாவிடம் அமைச்சர் வாசுதேவ கோரிக்கை

கொழும்பு,நவ.4

"இறுதிப்போரில் இசைப்பிரியா உயிரோடு பிடிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டது தொடர்பான சனல் - 4 தொலைக்காட்சியின் காணொலியை காரணம்காட்டி கொழும்



பில் நடைபெறவுள்ள பொது நலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்கக் கூடாது. தெற்காசிய நாடுகளுடன் ஒன்றித்துச் செயற் பட்டாலே இந்தியாவின் பலம் அதிகரிக்கும் என்பதை டில்லி புரிந்து கொள்ள வேண்டும்."

இவ்வாறு ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும், அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார நேற்று தெரிவித்தார்.

இசைப்பிரியாவீடியோ

24

## இசைப்பிரியா தொடர்பில் விசாரணை தேவையாம்

### தேர்தலுக்குப்பின்னர் வந்த சுடலைஞானம்

யாழ்ப்பாணம்,நவ.4

விடுதலைப் புலிகள் அமைப்பில் ஊடகவியலாளராக அறியப்பட்ட இசைப்பிரியா விவகாரத்தில் சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஈ.பி.டி.பி. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த கோரிக்கை தொடர்பில் தமிழ் மக்கள் சார்பாக ஈ.பி.டி.பி ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளதாக அக்கட்சி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

பொதுநலவாய மாநாட்டில் பங்குபற்ற உலக நாடுகளின் தலைவர்கள் இலங்கைக்கு வரவுள்ளனர். இந்த நிலையில் சனல்-4 தொலைக்காட்சி போர்க் குற்றம் தொடர்பாக வெளியிட்டிருக்கும் இசைப்பிரியா படுகொலை தொடர்பான ஒளிப்படக் காட்சிகள் உலக நாடுகளை மட்டுமல்ல உலக நாடுகளெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களை அதிர்சிக்குள்ளாகியுள்ளது.

இசைப்பிரியாவை உயிருடன் இராணுவத்தினர் கைது செய்த காட்சியை ஒளிபரப்பு செய்துள்ளமை தமிழ் மக்களை எரிச்சலடையச் செய்துள்ளது. நம்பிக்கைகளை தகர்ந்து போகச் செய்துள்ளது. மனித நேயமுள்ளவர்களை உலுப்பியுள்ளது.

24

## இசைப்பிரியா பற்றிய காணொலி கேள்விக்கணை தொடுக்கும் பிரிட்டன்

### இமானுவேல் அடிகளார் நம்பிக்கை

கொழும்பு, நவம்பர் 4

"இனப்படுகொலை தொடர்பில் இலங்கை மீது சர்வதேச விசாரணை நடத்தப்பட்டு தமிழர்களுக்கு நீதி கிடைக்கும் வரை - புலம்பெயர் தமிழர்களின் போராட்டம் ஓயாது. இசைப்பிரியா வின் படுகொலை தொடர்பான வீடியோ, போராட்டங்களை மேலும் கூர்மையாக்கும்."

இவ்வாறு உலகத் தமிழர் பேரவையில் தலைவர் வண. இமானுவேல் அடிகளார் நேற்று தெரிவித்தார்.

பொதுநலவாய மாநாட்டில் பிரிட்டனின் பிரசன்னம்

24



## போலி ஆவணம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு

“போலியான உறுதி மற்றும் ஆவணங்களை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் தயாரித்துள் ளார்

யாழ்ப்பாணம், நவ.4
யாழ்ப்பாணத்தில் உள்ள ஒருவரது காணியை விற்கும் பொருட்டு போலியான உறுதி மற்றும் ஆவணங்களை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் தயாரித்துள்ளார் என கொழும்பு, வெள்ளவத்தையைச் சேர்ந்த ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். குறித்த காணி தொடர்பில் போலி ஆவணங்களைத் தயாரித்து விற்க முற்பட்டவேளை, சம்பவம் தொடர்பாக காணி உரிமையாளருக்கு தகவல் கிடைத்துள்ளது. இதன் அடிப்படையிலேயே காணி உரிமையாளர் இந்த முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார்.

இதேவேளை, யாழ்.நக்கா வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றை அடித்து உடைத்து சேதம் விளைவித்தமை தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து சந்தேகத்தின் பேரில் கொக்குவிலைச் சேர்ந்த இரண்டுபேரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-4-86)

### பொது நலவாய மாநாட்டை புறக்கணிக்கக் கோரி

# விடுதலைச் சிறுத்தைகள் நாளை ஆர்ப்பாட்டம்

சென்னை, நவ.4
இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்து கொள்வது தொடர்பில் நடத்தப்பட்ட காங்கிரஸ் உயர் மட்டக் குழு முடிவைக் கைவிடுமாறு வலியுறுத்தி நாளை செவ்வாய்க் கிழமை விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளது.

இது குறித்து அந்தக் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

"காங்கிரஸ் கட்சியின் உயர் மட்டக் குழு கடந்த 30 ஆம் திகதி டில்லியில் கூடியது. அந்தக் குழுவில் இலங்கையில் நடைபெறவுள்ள பொது நலவாய மாநாட்டில் இந்திய அரசு பங்கேற்க வேண்டும் என்ற முடிவை மேற்கொண்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

காங்கிரஸ் உயர்மட்டக் குழுவின் இந்த முடிவு தமிழ் மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்திய அரசு பொது நலவாய மாநாட்டில் பங்கேற்கக் கூடாது என்று தமிழகத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் தமிழ்த் தேசிய அமைப்புகளும் ஒட்டு மொத்தமாக ஒரு மித்த குரலில் வலியுறுத்தி வரும் நிலையில் காங்கிரஸ் கட்சி இவ்வாறான தொரு முடிவை எடுத்திருப்பது மிகுந்த வேதனையளிப்பதாக உள்ளது.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர்களில் ஒருவரும் மத்திய அமைச்சருமான ஜி.கே.வாசன் உடனடியாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து இது குறித்து தமது அதிருப்தியை வெளிப்படுத்தியிருப்பது ஆறுதல் அளிக்கிறது.

இந்திய அரசு பொதுநலவாய மாநாடு புறக்கணிக்க வேண்டுமெனக் கோரி தமிழக சட்டசபையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஏற்கனவே தி.மு.க. தலைவர் கலைஞருக்கு பிரதமர் மன்மோகன் சிங் எழுதியுள்ள ஒரு கடிதத்தில் தமிழ் நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து முடிவெடுக்கப்படும் என்று உறுதியளித்தார்.

தமிழக சட்டசபைத் தீர்மானம் மற்றும் பிரதமர் மன்மோகன்சிங்கின் வாக்குறுதி ஆகியவற்றின் அடிப்படையில் இந்திய அரசு பொது நலவாய மாநாட்டில் பங்கேற்காது என்று நம்பிக் கொண்டிருந்த வேளையில், இந்தத் தகவல் ஏமாற்றத்தை அளிக்கிறது. காங்கிரஸ் கட்சியின் இந்த நிலைப்பாடு தமிழ் மக்களை வஞ்சிக்கும் வகையில் அமைந்துள்ளது.

பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்காமல் இந்திய அரசு புறக்கணித்து விட் டால் இரு நாடுகளுக்கும் இடையிலான அரச உறவுகள் கடுமையாகப் பாதிக்கப்படும் என்பது நொண்டிச் சாட்டாகும்.

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் அடுத்த இரண்டு வருடங்களுக்குரிய தலை வரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலில், பொதுநலவாய நாடுகள் மஹிந்தவுக்கு வாக்களிக்கக் கூடாது என்று விடுதலைச் சிறுத்தைகள் கேட்டுக்கொள்கிறது. இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்களுக்கு மின்னஞ்சல் மூலமாக வேண்டுகோள் விடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம் - என்றுள்ளது. (சி)

## நடனத்துறை இன்று வழமைக்கு

வலி வடக்கு, நவ. 4
யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நுண்கலைப் பீட நடனத்துறை மாணவிகள் கடந்த எட்டு நாள்களாக தொடர்ந்து வந்த வகுப்பு புறக்கணிப்பு போராட்டம் முடிவுக்குவந்துள்ளது. இதன்படி இன்று வழமைபோல வகுப்புக்களுக்கு மாணவிகள் செல்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி வி.பி. சிவநாதனால் அமைக்கப்பட்ட விசேட குழுவினர் மாணவிகளுடன் கலந்துரையாடியதை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை இந்த குழுவினர் நடனத்துறை மாணவிகளைச் சந்தித்து பிரச்சினைகளைக் கேட்டறிந்தனர்.

இதன்போது மாணவிகளின் கோரிக்கைளையும் ஏற்று ஒரு தீர்வை எட்டியதன் அடிப்படையில் இன்று முதல் நடனத்துறை மாணவிகள் வழமைபோன்று வுகுப்புகளுக்கு செல்லவுள்ளதாக தொவிக்கப்பட்டுள்ளது. (ஐ-86)

## கருத்தாடல் நிகழ்வு

ஊடகவியலாளர் என். வித்தியாதரனின் பணிகளைப் பாராட்டி திசைகாட்டி நிறுவனம் கௌரவிப்பு நிகழ்வொன்றை நடத்தவுள்ளது. இந்த நிகழ்வு நாளை மாலை 5.30 மணிக்கு ஆனைப்பந்தியிலுள்ள திசைகாட்டி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது. இதில் ஊடகவியலாளர் வித்தியாதரன் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளார். (ஐ-400)

## தேசிய மருந்துக் கொள்கையை நடைமுறைப்படுத்த அரசுக்கு உதவி

தேசிய மருந்துக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாக இலங்கை மருந்துப் பொருள் வர்த்தக நுகர்வோர் சம்மேளனத் தலைவர் ஸ்ருவர்ட் பெப்மன் தெரிவித்துள்ளார்.

நோயாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதற்கு தேசிய மருந்துக் கொள்கை அவசியமானது. மகிந்த சிந்தனையின் அடிப்படையில் சுகாதார அமைச்சினால் முன்னெடுக்கப்படும் திட்டங்களுக்கு உதவுவதன் மூலம் மக்களுக்கு சிறந்த சேவையை வழங்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

தரம் குறைந்த மருந்து வகைகள் வழங்குபவர்களை முற்றாக அகற்றுவதற்கு அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவோம். உள்ளூர் உற்பத்தியாளர்கள், இறக்கு மதியாளர்கள், விநியோகிப் போர் மற்றும் வர்த்தகர்கள் அனைவரையும் உள்ளடக்கியதே எமது சம்மேளனமாகும்.

தேசிய மருந்து கொள்கைகள் மூலம் மக்களின் விருப்பங்களை மாத்திரமின்றி தரமான மருந்து வகைகளை அரச துறையினருக்கும், தனியார் துறையினருக்கும் வழங்க முடியும் - என்றார். (ஐ-400)

## விபத்தில் யுவதி காயம்

யாழ்ப்பாணம், நவ.4
மீசாலை வடக்கு இராமாவில் பகுதியில் ஏ9 வீதியில் இடம்பெற்ற ரிப்பர், மோட்டார் சைக்கிள் விபத்தில் இளம் பெண் ஒருவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் இடம்பெற்றுள்ளது.

மீசாலை மேற்கைச் சேர்ந்த ஞானேஸ்வரன் அமிர்தா (வயது - 17) என்ற யுவதியே பாதிக்கப்பட்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார். (ஐ-9)

# மகேஸ்வரி நிதியத்துக்குச் செலுத்திய அங்கத்துவ பணத்தை மீளக் கோருவோம்

### யாழ்.மாவட்ட பார ஊர்திகள் சங்கம் முடிவு



வலி.வடக்கு, நவ.4
மகேஸ்வரி நிதியத்தின் மூலம் மணலைப் பெற்றுக்கொள்வதற்கு பார ஊர்தி உரிமையாளர்களால் வழங்கப்பட்ட நிதியை மீளக் கையளிக்குமாறு கோரிக்கை விடுக்கவுள்ளதாக யாழ்.மாவட்ட பாரவூர்திகள் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

மணலைப் பெற்றுக் கொள்வதற்காக கட்டாயத்தின் பெயரில் 5 ஆயிரம் ரூபாவும், சங்கத்தின் சேம நிதியாக குறிப்பிட்ட தொகை பணமும் மகேஸ்வரி நிதியத்தால் அறவிடப்பட்டது. அந்த நிதியையே கடிதம் மூலம் கோரிப் பெறவுள்ளதாகப் பார ஊர்திகள் சங்கத்தின் தலைவர் செ.ஜெயக்குமார் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட பார ஊர்திகள் சங்கத்தின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று ஞாயிற்றுக் கிழமை கோண்டாவில் அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

மகேஸ்வரி நிதியம் கடந்த 28ஆம் திகதி வெளியிட்ட ஊடக அறிக்கையில் உண்மைக்குப் புறம்பான விடயங்கள் வெளியிடப்பட்டுள்ளன. மணல் ஏற்றுவதற்கென நாம் ஆயிரம் பார ஊர்திகளுக்கு அனுமதி கோரவில்லை. அவர்கள் நூறு லொறிகளில் மணல் ஏற்றுவதற்கு அனுமதி வழங்கவும் இல்லை.

கடந்த காலத்தில் எமது சங்க நிர்வாகிகளுக்கும் பாரம்பரிய கைத்தொழில் அமைச்சருக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் அடிப்படையில் மணல் ஏற்றி இறக்கும் பணிகளை மேற்கொள்வதற்காக 5 ஆயிரம் ரூபா பணத்தை மகேஸ்வரி நிதியத்தில் செலுத்தி பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இந்த அடிப்படையில் பார ஊர்தி உரிமையாளர்களும் தமது பதிவுகளை மேற்கொண்டிருந்தனர்.

ஆனால், கடந்த ஒரு வருடமாக மணல் ஏற்றுவதற்கு எவ்வித அனுமதிகளும் வழங்கப்படவில்லை. மாறாக கடந்த ஏப்ரல் மாதம் 20 பார ஊர்திகளுக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டு பின்னர் அதுவும் நிறுத்தப்பட்டு விட்டது. தொடர்ந்து அனுமதி கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புக்களுடன் இருந்த போதும் ஏமாற்றமே கிடைத்தது.

எமது சங்கத்தில் தற்போது சுமார் ஐந்நூறு முதல் அறுநூறு வரையான பாரவூர்திகள் பதிவு செய்வதற்குத் தயாராகவுள்ளன. ஆனால் அனுமதி கிடைக்காததால் அவர்களும் தொழிலை இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

மகேஸ்வரி நிதியம் தற்போது தமது 12 வாகனத்தைக் கொண்டு மணல் ஏற்றி வருவதுடன், தமக்கு வேண்டிய சில பார ஊர்திகள் மூலமும் மணல் ஏற்றுகின்றனர்.

அவர்களுடைய வாகனத்துக்குப் பதிலாக எமக்கு அனுமதி வழங்கப்படுமானால் எமது சங்கத்தைச் சேர்ந்த மூன்று பயனாளிகள் பயனடைவர்.

எனவே எமக்கு மணல் ஏற்றுவதற்கான அனுமதியை வழங்குவதன் மூலம் நாமும் தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றார். (ஐ-400-86-7)



'அம்மா கடை' நன்னீர் கிணறு

# இராணுவப் பிடியில் இருந்து விடுவிப்பு

கொடிகாமம், நவ.4

இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த பொதுக் கிணறு மீண்டும் மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளதால் வரணி பிரதேச மக்கள் நல்ல தண்ணீரை அசௌகரியங்கள் இன்றிப் பெற்று வருகின்றனர்.

100 ஆண்டுகள் பழைமை வாய்ந்த வரணி 'அம்மா கடை' நல்ல தண் ணீர்க் கிணறு கடந்த காலங்களில் இடம்பெற்ற இடப்பெயர்வால் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது.

இதனால் வர ணிப் பிரதேச மக்கள் நல்ல தண்ணீரைப் பெறுவதற்கு நீண்ட தூரங்கள் அலைய வேண்டிய நிலை இருந் தது.

எனினும் மீண்டும் இந்தக் கிணறு மக்கள் பாவனைக்கு விடுவிக்கப்பட்டது. இந்தக் கிணறு தனியார் காணியில் இருக்கின்றபோதும் நல்லதண்ணீர்த் தேவைக்கென அந்தப் பிரதேச மக்கள் குறித்த கிணற்றையே பாவித்து வந்தனர். தற்போது காணி உரிமையாளர் கிணற்றை வேறாக்கி வேலி போட்டு மக்களின் பயன்பாட்டுக்குத் தொடர்ந்து விட்டுக்கொடுத்துள்ளார்.

அவரின் பெருந்தன்மையால் மக்கள் அசௌ கரியங்கள் இன்றி நல்ல தண்ணீரைப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-14-122)

பால் பதனிடல் நிலையத்தை பூநகரியில் திறந்து வைத்தார் அமைச்சர்



புலம் பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனத்தின் (ஐ.ஓ.எம்) உதவியுடன் பூநகரியில் அமைக்கப்பட்ட பால் சேகரிப்பு, பதனிடல் மற்றும் விற்பனை நிலையம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இதனை வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் 'ஐ.ஓ.எம்.' நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி ஜோசேபி குறோசெற்றி, வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் யூ.எல்.எம். நால்டீன், வடக்கு மாகாண கால்நடைத் திணைக்களத்தின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.வசீகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-5)

## அதிவேக தபால் சேவை பரீட்சார்த்தமாக நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.4

யாழ்.மாவட்டத்தில் இருந்து அதிவேக தபால் சேவை நாளை செவ்வாய்க் கிழமை தொடக்கம் பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்படவுள்ளதுஎன்று இலங்கை தபால் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் அதிகாரி வீரசிங்கம் குமரகுரு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

தபால் சேவையை மேலும் விரிவுபடுத்தும் நோக்குடன் அதிவேக தபால் சேவையை நாடளாவிய ரீதியில் நடத்துவதற்கு 9 விசேட வாகனங்கள் தபால் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளன. யாழ். மாவட்டத்தில் இருந்து சேவையை வழங்க ஒரு வாகனம் வழங்கப்பட்டுள்ளது.

24 மணி நேரத்தில் மக்களுக்கு பொதிகள் கிடைக்கக் கூடியதான சேவையை இந்த அதிவேக தபால் சேவையூடாகப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (ஒ-14)

# அரச உத்தியோகத்தர்களுக்கு விசேட வீட்டுத் திட்ட கடனுதவி

## மத்திய வங்கி வழங்கியது அனுமதி

யாழ்ப்பாணம், நவ.4

அரச உத்தியோகத்தர்களுக்கு விசேட வீட்டுத் திட்டக் கடனுதவியை வழங்குவதற்கு மீண்டும் இலங்கை மத்திய வங்கி நிதி ஒதுக்கீடு செய்து அனுமதி வழங்கியுள்ளது என்று அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் யாழ். கிளை முகாமையாளர் கே. நடராஜமூர்த்தி தெரிவித்துள்ளார்.

போரினால் பாதிப்படைந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர்களுக்கு வீட்டுத் திட்டக் கடனுதவியை அரச ஈட்டு முதலீட்டு வங்கியூடாக வழங்க இலங்கை மத்திய வங்கி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

கடந்த வருடம் ஒதுக்கப்பட்ட நிதியில் கடனுக்காக விண்ணப்பித்த அரச உத்தியோகத்தர்களுக்குக் கடன் உதவிகள் வழங்கப்பட்டன. எனினும் விண்ணப்பம் செய்தவர்களில் குறிப்பிட்ட சிலருக்கு நிதி ஒதுக்கீடு முடிவடைந்தமையால் கடன் உதவிகள் வழங்கப்படவில்லை.

எனினும் தற்போது இதற்கான அனுமதியை மத் திய வங்கி வழங்கியுள்ளது.

5 வருடங்கள் கொண்ட 3 லட்சம் வரையான கடன் உதவியை மீண்டும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரச உத்தியோ கத்தர் ஒருவரது மாதாந்த சம்பளம் 23 ஆயிரத்து 750 ரூபாவுக்கு மேற்பட் டதாக இருப்பதுடன் நிலையான நியமனத்துடன் ஒரு வருடம் சேவை முடித்தவராகவும் இருத்தல் வேண்டும்.

கடன் அனுமதிக்கான நிபந்தனைகள் பரிசீலிக்கப்பட்டு மத்திய வங்கியின் அனுமதியுடன் கடன் உதவிகள் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார். (ஒ-14)

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ளோர்

# உதவிப் பணம் பெற அலையத் தேவையில்லை

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோரின் போக்குவரத்துச் சிக்கலுக்குத் தீர்வு காணும் வகையில் அந்தந்தக் கிராமங்களில் வைத்து பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மூலம் வழங்க பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

மலையாளபுரம், கிருஷ்ணபுரம், பாரதிபுரம், விவேகானந்த நகர் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த முதியோர், நோயாளர், பெண்கள் , ஆகியோர் ஆறு கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள கிளிநொச்சி தபால் அலுவலகத்துக்கு பல சிரமங்களின் மத்தியில் வருகை தந்து இந்தக் கொடுப்பனவைப் பெற்று வருவதாக அந்தப்பகுதி பொது அமைப்புக்கள் பிரதேச செயலருக்கு சுட்டிக் காட்டின. அதனையடுத்து குறித்த கிராமங்களுக்கு பிரதேச செயலக உத்தியோ கத்தர் கள் மூலம் பொதுசன மாதாந்த உதவிப் பணம் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை- கிளிநொச்சி நகரிலிருந்து எட்டு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள பொன்னகர் கிராமத்தைச் சேர்ந்த பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோரின் கொடுப்பனவுகளை அருகில் உள்ள திருமுறிகண்டி உப தபால் அலுவலகம் மூலம் வழங்கவும் ஏற்பாடு கள் மேற்கொள்ளப்பட் டுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# தீபாவளி தினத்தில் 'மதுபான மோதல்'; கிராமத்தில் அடிதடியில் முடிந்தது

## காயமுற்ற 8 பேர் யாழ். போதனா வைத்தியசாலையில்

தென்மராட்சி, நவ.4

தீபாவளி தினத்தன்று மதுபான நிலையத்தில் ஏற்பட்ட மோதல் கிராமம் வரை சென்றதால் பெண் உட்பட எட்டுப் பேர் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்தனர். இவர்கள் அனைவரும் சாவகச்சேரி ஆதார வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இரு் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் பங்குபற்றிய கிரிக்கெட் போட்டியில் தோல்வியைச் சகிக்க முடியாமல் ஏற்பட்ட முறுகலை அடுத்தே இந்த மோதல் வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:-

தீபாவளித் தினமான நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சாவகச்சேரி கோவில் குடியிருப்பு பகுதியிலுள்ள மதுபான நிலையத்தில் இரு கோஷ்டிகளுக்கு இடையே மோதல் ஏற்பட்டதில் செல்வராசா அரவிந்தன் (வயது-26) என்பவருக்கு தலையிலும் காலிலும் காயமேற்பட்டது. அவ்வேளையில் ரோந்தில் சென்ற பொலிஸார் காயமடைந்த நபரை வைத்தியசாலையில் அனுமதித்துவிட்டு சம்பந்தப்பட்ட இருவரை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச்சென்று மாலை விடுவித்தனர்.

பொலிஸ் நிலையத்தினால் விடுவிக்கப்பட்ட இருவரும் மேலும் தமக்குத் தேவையானவற்றை ஏற்றிக் கொண்டு தமது கிராமத்தைச் சேர்ந்த சிலரையும் ஓட்டோக்களில் ஏற்றிக் கொண்டு மற்றக் கிராமத்துக்குச் சென்றுள்ளனர் அந்தக் கிராமத்தில் தீபாவளியை முன்னிட்டு இளைஞர்கள் சிநேகபூர்வ விளையாட்டுப் போட்டியில் ஈடுபட்டிருந்தனர். அங்கு ஓட்டோவில் வந்தவர்கள் விளையாட்டுப் போட்டியை ரசித்துக் கொண்டிருந்த பார்வையாளர்கள் மீது தாக்குதல் நடத்தினர். இதனால் ஆத்திரமடைந்த அந்தக் கிராம மக்கள் ஓட்டோவில் வந்தவர்களை சுற்றி வளைத்து சரமாரியாகத் தாக்குதல் நடத்தினர்.

அதையடுத்து அருகில் உள்ள படைமுகாமில் இருந்து படையினர் விரைந்து வந்து மோதலைத் தடுத்து காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

தாக்குதலில் சாவகச்சேரி சிவன் கோயிலடியைச் சேர்ந்த பாலச்சந்திரன் கஜன் (வயது-30), சொக்கலிங்கம் கஜன் (வயது-23) அருணந்தி குகதாஸ் (வயது -33), தனபாலசிங்கம் சுரேந்திரகுமார் (வயது -42), கல்வயலைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் செல்வரஞ்சன் (வயது -29), மட்டுவில் மேற்கைச் சேர்ந்த தம்பையா இதயகரன் (வயது- 36), கோயிற்குடியிருப்பைச் சேர்ந்த குணரத்தினம் உதயச்சந்திரிகா (வயது-58)மற்றும்கிருஷ்ணமூர்த்தி (வயது-50) ஆகியோர் காயமடைந்தனர்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருக்கிறது. ஒ

## 'இடர் முகாமைத்துவம்' கிளி.யில் கலந்துரையாடல்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் இடர் முகாமைத்துவக் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.

கடந்த 31 ஆம் திகதி முற் பகல் 10 மணியளவில் கிளைத் தலைவர் சு.தர் மரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் செஞ்சிலுவைச் சங்கங்களின் பிரிவுத்தலைவர்களும், ஆளுநர் சபை உறுப்பினர்களும் இடர் முகாமைத்துவப் பிரிவினரும், வலயக் கல்வி அலுவலகத்தின் இடர் முகாமைத்துவ இணைப்பாளர் மற்றும் பொதுமக்கள் தொடர்பு பொலிஸ் அதிகாரிகளும் கலந்து கொண்ட னர்.

பருவ மழை காலத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்படக் கூடிய இடங்கள் தொடர்பாகவும் அவற்றைத் தடுப்பது தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப் பட்டதுடன் கரைச்சி, கண் டாவளை, பூநகரி, பளை என நான்கு பிரிவுகளிலும் இடர் முகாமைத்துவ அணியினரை உருவாக்குவது எனவும் இதற்கென 40 பேருக்கு உட னடியாக செஞ்சிலுவைச் சங்கத்தினால் மூன்றுநாள் பயிற்சி வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (கு-405)

## கண்ணீர் அஞ்சலி



**திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல்**

எமது பிரதேச செயலகத்தின் முன்னாள் பிரதேச செயலாளரும் ஓய்வு பெற்ற யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபருமாகிய திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக !

பிரதேச செயலாளரும்
சகல நலன்புரி சங்க உறுப்பினர்களும்

பிரதேச செயலகம்,
வலிகாமம் வடக்கு,தெல்லிப்பழை
39739 (14)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 06.10.2013 அன்று சிவபதமடைந்த

**முத்தையா சரஸ்வதி**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (05.11.2013) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் தாங்களும் குடும்பு சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் இறுதிக் கிரியைவரை உதவி புரிந்தவர்களுக்கும் தொலைபேசி, மலர்வளையம், துண்டுப்பிரசுரம் மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்து கொள்ளவும்.

C/3593(10.6)

விளாப்புக் கூடல், அல்வாய் வடக்கு.
0772306648.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி இராசலட்சுமி கருணேஸ்வரன்



உடுப்பிட்டி ஆதியாமலையைச் சேர்ந்த திருமதி இராசலட்சுமி கருணேஸ்வரன் நேற்று (03.11.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரபல தச்சுப்பட்டறை உரிமையாளர் ஆசைப்பிள்ளை தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், கருணேஸ்வரனின் அன்பு மனைவியும், திருமதி காயத்திரி லக்சயதீபன் (லண்டன்), கோபி (யாழ். குருநகர் உயர் தொழிநுட்பக்கல்லூரி), திருக்குமரன் (மாணவன், உடுப்பிட்டி அ.மி.கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற இரத்தினசிங்கம்,(உரிமையாளர், நிமலேந்திரா திரையரங்கு), மற்றும் திருமதி சிவலக்சுமி இராசதுரை, இராசரத்தினம், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் புஸ்பராசா, திருமதி தேவகி அருந்தவராசா (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2013) திங்கட்கிழமை பகல் 11மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக வல்லை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ. இராசரத்தினம். (சகோதரன்)

077 7966673

## மரண அறிவித்தல்

### திருமதி சிவனேஸ்வரி சிதம்பரப்பிள்ளை



பன்னாலையைப் பிறப்பிடமாகவும், மறவன்புலோவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவனேஸ்வரி சிதம்பரப்பிள்ளை நேற்று (03.11.2013) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளையின் (திரவியம்) அன்பு மனைவியும், தேவா (கட்டார்), கிரிஜா, றஞ்சி (சுகாதாரப் பணி உதவியாளர், சாவகச்சேரி வைத்தியசாலை), ஜெ யந்தி, ஈசன் (கட்டார்), தாசன் (விரி வுரையாளர், திறந்த பல்கலைக்கழகம், யாழ் பிராந் திய நிலையம்), துஸ் யந்தி, சங்கர் (கட்டார்) ஆகியோரின் அன்புத் தாயும், குகன், கிரிஷா, தபேந் திரன் ஆகியோரின் மாமியும், கஜானன், கபிலன், கஜானி, ஹர்னி கன், ஹரினி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.11.2013) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தனிப்பனை இந்து மயாத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சிவதாசன் (மகன்)
(விரிவுரையாளர், திறந்த பல்கலைக்கழகம். யாழ்.பிராந்தியநிலையம்.)

மறவன் புலோ, சாவகச்சேரி.

(39740.14.17)

## தவறிவிட்டது

சிறிஸ்கந்தராசா சிந்துஜா (848624454v) என்பவருடைய தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், மோட்டார் சைக்கிள் காப்புறுதி (BACO350) மோட்டார் சைக்கிள் வரி அனுமதிப் பத்திரம் மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய நீல நிறபை சுன்னாகத்துக்கும் நவக்கிரி நிலா வரைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத் துத்தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்ப டும்.

தொடர்பு:- 077 3344415

## சிவாஸ் தளபாட நிலையத்தின்

**மாபெரும் மலிவு விற்பனை**

வீட்டுக்குத் தேவையான அனைத்து தளபாடங்களையும் ஒரே இடத்தில் மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்

தொடர்பு: 0776341119
ஸ்ரேசன் றோட் ,சுன்னாகம் (சிவன் கோயில் முன்பாக)

## வீடு வாடகைக்கு

இல.20 பிறவுண் றோட், நீராவியடி யாழ்ப்பாணத்தில் 4 அறைகள் மற்றும் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்க உண்டு.
200.000/= முற்பணமும் 10.000 வாடகையும்
(அரசாங்க உத்தியோகத்தர் விரும்பத்தக்கது.)
தொடர்புக்கு: 0779552356

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 567 1111

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11 | 05 |
| 02 | 10 |
| 1936 | 2013 |

அமரர் **ஆறுமுகம் நாகம்மா**

இன்று (04.11.2013) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும். மதியபோசனத்திலும் இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எம் குலவிளக்கே எமைவிட்டு
பிரிந்தது ஏனோ....
நாள்கள் பல கடந்தாலும்
மாறாது எம் பிரிவுத்துயரம்
என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

கைதடி தெற்கு, கைதடி. (39738)(4) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### அமிர்தலிங்கம் கண்ணதாசன்(அப்பன்)



புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல. 58, சீனிவாசகம் றோட்டை வதிவிடமாகவும் கொண்ட அமிர்தலிங்கம் கண்ணதாசன் நேற்று (03.11.2013) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமிர்தலிங்கம் செங்கமலம் தம்பதியரின் அன்பு மகனும், தர்சினியின் அன்புக் கணவரும், விதுர்சனின் பாசமிகு தந்தையும், மலர்மதி, பூமதி, நித்தியானந்தன் (தும்பி– தேநீர்ச்சோலை), சுமதி, கருணாநிதி (பிரபு), தீபன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரஞ்சோதி, மோகன், திருச்செல்வம் (திரு) கல்பனா, லக்சனா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.11.2013) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 58, சீனிவாசகம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(39739.14.17)

## மரண அறிவித்தல்

### வீரசிங்கம் கதிர்காமநாதன்

(ஓய்வு பெற்ற இலங்கை மின்சார சபை மின் அத்தியட்சகர்)



சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் கதிர்காமநாதன் நேற்று முன்தினம் (02.11.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம்-இராசம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை- நாசகம் தம்பதியரின் அன்பு மருமகனும், உருத்திராட்சியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை), அன்புக் கணவரும் சற்குணமலர், கணேசதாசன், காலஞ்சென்ற சற்குணராணி மற்றும் சற்குணதேவி, முருகதாசன், சிவதாசன், குகதாசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், வாமதேவன், மதிவதனி, சிவராஜா, செல்வநிதி, கமலவதனி, சுபாஜினி ஆகியோரின் மாமனும், துளசி, நவன்நியா, சங்கீத், சந்தோஸ், ரச னியா, சிவகீர், சிவகிஸ்ணா, கவுசியா, தினேஸ், திவ்யா, கதி ரோன், ரம்மியா, ராகுலன், ரஜீ வன், விஸ்ணுஜன், இலக்கியன், கதிரவன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.11.2013) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக நண்பகல் 12.00 மணியளவில் திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வீரபத்திரர் கோயிலடி, சுழிபுரம்
கிழக்கு, சுழிபுரம். (39741.14.17)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
077 5287315

# வேகக் கணக்கீட்டு மானி இன்மையால் விபத்துக்கள்

## பொது அமைப்புகள் தெரிவிப்பு

வலி.வடக்கு, நவ.4

யாழ்.மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் வாகனங்களின் வேகக் கட்டுப்பாட்டை அளவிடும் வேகக் கணக்கீட்டுமானி இன்மையாலேயே பல விபத்துக்கள் நாளாந்தம் இடம்பெறுகின்றன எனப் பொது அமைப்புகள் விசனம் தெரிவிக்கின்றன.

குறிப்பாக பொலிஸார் வெறுமனே சந்திக்குச் சந்தி நின்று வாகனங்களின் வருடாந்த வரிப்பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதி பத்திரம் என்பவற்றை மட்டும் பார்வையிடுவதும் அவை இல்லாத சந்தர்ப்பங்களில் தண்டம் அறவிடுவதும் என்ற நிலைமையே காணப்படுகின்றது.

இதனால் பொலிஸ் தரப்பும் அரசும் நன்மை அடைகின்றனவே அன்றி பொது மக்களுக்கு எத்தகைய நன்மையும் கிட்டுவதில்லை.

குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் நாளாந்தம் பல்வேறு சிறிய, பெரிய விபத்துக்கள் ஏற்படுவதற்கு காரணம் வேகக் கட்டுப் பாடு மற்றும் வீதிக் குறியீடுகளை உரிய முறையில், வாகனச் சாரதிகள் பின்பற்றாமையே.

முக்கியமாக பொலிஸார் வேகக் கட்டுப்பாட்டு விடயத்தில் அதிக அக்கறை காட்ட வேண்டியதுடன் சிவில் உடையில் வீதி களில் நின்று வாகனச் சாரதிகளின் பிழையான செயற்பாடுகளைக் கட்டுப் படுத்தவும் நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என பொது அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

யாழ்.மாவட்டத்தில் கடந்த பல வருடங்களாக பொலிஸார் தமது கடமைகளை மேற்கொள்கின்ற போதிலும் பொலிஸாரிடம் வேகக் கணக்கீட்டுமானி இல்லாது இருப்பது பொலிஸாரின் அக் கறையின்மையை வெளிப்படுத்துகிறதெனவும் பொது அமைப்புகளால் குற்றம் சாட்டப்படுகின்றது. (ந-86)

## யாழ்-மன்னார் சேவைக்கு அதிகரித்த பஸ் கட்டணம்

யாழ்ப்பாணம், நவ.4

பஸ் கட்டண அதிகரிப்பின்படி வெளி மாவட்டங்களுக்கானசேவையை மேற்கொள்ளும் தனியார் பஸ்களுக்கான கட்டண விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய யாழ்ப்பாணத்திலிருந்து சங் குப்பிட்டி ஊடாக மன்னார் செல்லும் 813 இலக்க வழிச் சேவைக்கான புதிய கட்டண விவரங்கள் வருமாறு:-

யாழ்ப்பாணத்திலிருந்து அரியாலைக்கு 17 ரூபாவும், கைத டிக்கு 24 ரூபாவும், சாவ கச்சேரிக்கு 34 ரூபாவும், தனங்களப்புக்கு 39ரூபாவும், கேரதீவுக்கு 46 ரூபாவும், சங்குப்பிட்டிக்கு 48ரூபாவும், பரமன்கிராய்க்கு 53 ரூபாவும், 4ஆம் கட்டைக்கு 64 ரூபாவும், செம்பன்குண்டுக்கு 69ரூபாவும், 9ஆம் கட்டைக்கு 74ரூபாவும், 12ஆம் கட்டைக்கு 83 ரூபாவும், பல்லவராயன்கட்டுக்கு 88 ரூபாவும், நாச்சிக்குடாச் சந்திக்கு 97 ரூபாவும், முழங் காவிலுக்கு 101 ரூபாவும், வெள்ளபங்குளத் துக்கு 110 ரூபாவும், 3ஆம்பிட்டிச் சந்திக்கு 120 ரூபாவும், இலுப்பைக் கடவைச் சந்திக்கு 129 ரூபாவும், காட்டாடிவாயனுக்கு 133 ரூபாவும், கள்ளியடிக்கு 137 ரூபாவும், விடத்தல்தீவுக்கு 147 ரூபாவும், பள்ளமடுவுக்கு 151 ரூபாவும், பாப்பாமோட்டைக்கு 165 ரூபாவும், திருக்கேதீஸ்வரத் துக்கு 176 ரூபாவும், தள்ளாடிக்கு 183 ரூபாவும், மன்னாருக்கு 190 ரூபாவும் அறவிடப்படும் என்று யாழ்.பிராந்திய தனியார் பஸ் கம்பனிகளின் கிளை அறிவித் துள்ளது. (ந-14)



## சண்டிலிப்பாய் பிரதேச முதியோர் தின நிகழ்வு

### நூற்றுக்கணக்கான முதியவர்கள் பங்கேற்பு

நவாலி, நவ.4

சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்திய முதியோர் தின விழா என்றும் இல்லாதவாறு மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

பிரதேச செயலர் எஸ். முரளிதரன் தலைமையில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமும் சிறப்பு விருந்தினர்களாக மாவட்டச் செயலக அதிகாரி சாம்பசிவம்சுதர்சனும் யாழ். மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் ஆ. ஞானவேல், சர்வதேச பாடசாலை இயக்குநர் சாம். இராசசூரியர், சமுதாய மட்ட மாகாண இணைப்பாளர் வ. சுரேஸ்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர். நூற்றுக்கணக்கான முதியவர்கள் பங்குபற்றிய இந்த நிகழ்வில் அவர்களிடையே ஓட்டப்போட்டி, வேகநடை போன்ற பல்வேறு விளையாட்டுக்களும் நடத்தப்பட்டன. (வ-100)

## திறந்த கருத்துரையாடல் மாநாட்டில் கையளிப்பு

### தமிழ் மொழி நடைமுறை செயற்றிட்ட அறிக்கை

அச்சுவேலி, நவ.4

மாற்றுக் கருத்துக்களுக்கான அமையம்தமிழ்மொழி நடைமுறைச் செயற்றிட்டம் தொடர்பான நடைமுறை அறிக்கையை கல்வி அமைச்சு, பொது நிர்வாக அமைச்சு, நீதி அமைச் சுக்களுக்கு வழங்கவுள்ளது.

இந்த மாதம் இறுதி வாரத்தில் நடைபெறும் திறந்த கலந்துரையாடல் மாநாட்டில் அறிக்கை சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்ற பின்னர் சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடம் இதனைக் கையளிப்பதோடு அறிக்கை வெளியிடவுள்ளது.

மாற்றுக் கருத்துக்களுக்கான அமையம் இனம், மொழி சாராத நிலையில் தமிழ், சிங்கள, முஸ்லிம் புத்திஜீவிகள் மற்றும் கல்வியாளர்கள் பிரமுகர்கள் உள்ளடக்கிய நிலையில் செயற்பட்டு வருகின்றது.

இனங்களுக்கிடையிலான ஐக்கியம் சமாதான நல்வாழ்வு என்பவற்றை நோக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. இன ஐக்கியத்துக்கும் நல் உறவுக்கும் தமிழ்மொழி நடைமுறை அவசியம் என்பதால் தமிழ் மொழி நடைமுறை தொடர்பான பிரச்சினையில் காணப்படும் நடைமுறை சிக்கல்களை சீராக்கம் செய்து தமிழ்மொழியை நடைமுறை செய்வது தொடர்பான அறிக்கை முதற்கட்டமாக மூன்று அமைச்சுகள் மட்டத்தில் நடைமுறைப் படுத்துவதையும் செயல் வடிவம் பெறச் செய்வதற்கு அமைய அறிக்கையைத்தயார் செய்துள்ளது.



இது குறித்து மாற்றுக் கருத்துக்களுக்கான அமையத்தின் அழைப்பாளர் தகவல் தெரிவிக்கையில்;

அமையத்தின் பதவிகள் மற்றும் நிர்வாகிகளுக்கு முன்னுரிமை வழங்காமல் சகலரும் சமநிலையில் மதிக்கப்படுவதோடு உடனடியான பிரச்சினைகளுக்கு நடைமுறைத் தீர்வை ஒன்றுபட்ட நிலையில் காண்பதற்கு முயல்கின்றனர். மொழி, இனம், சாராத நிலையில் தமிழ், சிங்கள, முஸ்லிம் சகலரும் சமநிலையில் கூடி திறந்த கலந்துரையாடலை நடத்துகின்றோம்.

இதுவரை நான்கு திறந்த கருத்துரையாடல் அமர்வுகள் நடத்தப்பட்ட நிலையில் கல்வி, நீதி, பொது நிர்வாகம் ஆகிய மூன்று அமைச்சுகளில் தமிழ் மொழியை நடைமுறைப்படுத்துவது தொடர்பான நடைமுறை ஒழுங்குகளை அறிக்கையாக்கியுள்ளோம்.

அதனைத் திறந்த கருத்துரையாடல் மாநாட்டில் சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னர் அமைச்சர்களிடம் கையளிக்கப்படுவதோடு பகிரங்கமாக வெளியிடப்படவுள்ளது எனத் தெரிவித்தார். (வ-11)

## கடன் பணத்தை செலுத்தாதவர் மறியலில்

வலி.வடக்கு, நவ.4

6 லட்சம் ரூபா பணத்தை மீளத் தருவதாக 2012 ஆம் ஆண்டு கடனாக பணத்தைப் பெற்றவர் பெற்ற பணத்தை இதுவரை அதனை வழங்கவில்லை எனக் கூறிக் கடந்த 30 ஆம் திகதி வல்வெட்டித் துறை பொலிஸ் நிலையத் தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் 11 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் பணித்துள்ளது. இந்தத் தகவலை காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர், ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித் துள்ளார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஒருவர் செய்த முறைப்பாட்டின் அடிப் படையிலேயே வல்வெட்டித் துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு அதே இடத்தைச் சேர்ந்த சந்தேகநபரை கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தினர். இதன் போதே அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (வ-86)

# ஆலயங்களின் புனிதம் பேணுவது அனைவரதும் கடமை

## நல்லூர் பிரதேச செயலர் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.4

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வழிபாட்டுத் தலங்களில் களவு மற்றும் அநாகரிகமான செயல்கள் இடம்பெறுவதைத் தவிர்த்து சமய வழிபாட்டுத் தலங்களின் புனிதத் தன்மையைப் பேணுமாறு நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வழிபாட்டுத் தலங்களில் களவு மற்றும் அசம்பாவிதங்கள் அண்மைக் காலமாக அதிகரித்து வருவதை அவதானிக்கக் கூடியதாக வுள்ளது. இதன் காரணமாக மத நம்பிக்கை குறைவடைந்து வருவதாகவும் ஆலய வழிபாடுகளில் ஈடுபடுவோரது எண்ணிக்கையும் குறைவடைவதும் ஆலயச் சூழலில் களவு, கொலை உள்ளிட்ட பாதகச் செயல்கள் அதிகரித்து வருவதும் கண்கூடு. எனவே அனைவரும் ஒன்றுபட்டு சமய வழிபாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்த முனைவதும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத் துவதும் காலத்தின் தேவையாகும். அந்த வகையில் ஆலயச் சூழலில் உள்ள வாகனத் தரிப்பிடங்கள், மடங்கள், கொட்டகைகளில் தவறான நடவடிக்கைகள் இடம்பெறுவதற்கு ஏற்றதான மறைவிடங்கள் இருக்குமாயின் அவ்விடங்களை தொடர்ச்சியாக கண்காணிப்பதோடு ஆலயத்தின் புனிதத் தன்மைக்கும் பங்கம் ஏற்படாத வகையில் பேணுவதும் அவசியமாகும்.

உரிய பாதுகாப்பு முன்னேற்பாடுகள் இல்லாத நிலையிலிருக்கும் ஆலயங்களின் சொத்துக் களையும் உடைமைகளையும் சமயச் சின்னங்களையும் பாதுகாக்க உகந்த நடவடிக்கை எடுக்கும் அதே நேரம் பெறுமதியான தங்க நகைகள் ஆபரணங்களை ஆலயத்தில் வைத்துப் பேணாது பிற பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றுவதன் மூலம் விபரீதங்களைத் தவிர்த்துக்கொள்ள முடியும்.

அன்பு,அகிம்சை,மனிதநேயம் உள்ளிட்ட பண்பு களை இளையவர்களுக்கு ஊட்டத்தக்க வகையில் ஆல யச்சூழலில் எப்போதும் புனிதத் தன்மை பேணப்பட வேண்டும். அறப்போத னைகள், சமய வகுப்புக்கள் போன்ற செயற்பாடுகளில் இளையோரை ஈடுபடுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு சமய, விழுமியங்களைப் பாதுகாத்து முழுமையான பங்களிப்பை வழங்க வேண்டும் - என்றார். (ந-14)

"_"

சமய சின்னங்களைப் பாதுகாக்க உகந்த நடவடிக்கை எடுக்கும் அதே நேரம் பெறுமதியான தங்க நகைகள் ஆபரணங்களை ஆலயத்தில் வைத்துப் பேணாது பாதுகாப்பான பிற இடங்களுக்கு மாற்றுவதன் மூலம் விபரீதங்களைத் தவிர்த்துக்கொள்ள முடியும்.



## மோடியால் பயனில்லை

பாட்னா, நவ.4

பீஹார்குண்டுவெடிப்பில்உயிரிழந்தவர்களுக்கு வெளி மாநிலத்தவர்களால் எந்த நன்மையும் ஏற்படப்போவதில்லை என்று தெரிவித்துள்ளார் அந்த மாநில முதலமைச்சர் நிதிஷ் குமார்.

பாட்னாவில் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசிய அவர், "பீஹார் மக்களுக்கு தமது தலைமையிலான ஆட்சியில் எந்த வித குறையும் இல்லை. மோடியின் பயணத்தால் எந்த விதப்பயனும் கிடைக்கப்போவதில்லை" என்று குறிப்பிட்டார். (ற)



மணிப்பூர் மாநிலத் தலைநகர் இம்பாலில் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள தங்கல் சந்தை பகுதியில் நேற்றுமுன்தினம் வெடிகுண்டு ஒன்று வெடித்துள்ளது. குறித்த சந்தையில் வடிகாலில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டே வெடித்துள்ளது. இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்தத் தீவிரவாத குழுவும் பொறுப்பேற்கவில்லை. உடனடியாக அந்தப் பகுதி சுற்றி வளைக்கப்பட்டபோதும் சந்தேகத்துக்குரிய எவரும் கைது செய்யப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

## பிரதமரின் ஆந்திரப் பயணம் இரத்து

புதுடில்லி, நவ.4

பைலின் புயலால் பாதிக்கப்பட்ட ஒரிசா மற்றும் ஆந்திர பிரதேச மாநிலங்களுக்கு இந்தியப்பிரதமர்மன்மோகன் சிங் மேற்கொள்ளவிருந்த பயணம் கடைசி நிமிடத்தில் கைவிடப்பட்டுள்ளது.

குறித்த இரண்டு மாநிலங்களும்புயலால் ஏற்பட்ட சேதங்களைக் கணக்கிடும் பணிகள் இன்னமும் நிறைவடையாததாலே பயணம் இரத்துச் செய்யப்பட்டது என்று பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இரண்டு மாநிலங்களையும் பிரதமர் விமானம் மூலம் ஆய்வு செய்வதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. (ற)

## முடங்கியது அ.தி.மு.க. இணையம்

சென்னை, நவ.4

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உத்தியோகபூர்வ இணையளத்தளம் மீது ஊடுருவல் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த இணையத்தளம் பாகிஸ்தானிலிருந்து செயற்படும் குழு ஒன்றினால் ஊடுருவப்பட்டு தரவுகள் மாற்றப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது. மண்டை ஓட்டின் படம் ஒன்றை இணையத்தளத்தில் பொறித்துள்ளதுடன் பாகிஸ்தானின் தேசியக் கொடியையும் , பாகிஸ்தானுடன் தொடர்புபட்ட சில வாசகங்களையும் இணைத்துள்ளனர். அதன் காரணமாக இணையத்தளத்தின் செயற் பாடுகள் முடங்கின.

இந்தியாவின் தமிழகத்தின் முக்கியகட்சிகளுள் ஒன்றான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், முதலமைச்சர் ஜெயலலிதாவின் கட்சி என்பது குறிப்பிடத்தக்கது. (ற)


# ரயில் மோதி 10 பேர் சாவு

## வதந்தியால் ஆந்திராவில் அவலம்

விஜயநகரம், நவ.4

ரயிலில் தீப்பற்றியுள்ளது என்று வதந்தியை நம்பி ரயிலில் இருந்து குதித்தவர்கள். அருகே இருந்த தண்டவாளத்தில் வந்த மற்றொரு ரயிலில் மோதுண்டு உயிரிழந்துள்ளனர். இந்தப் பரிதாபச் சம்பவம் இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில் இடம்பெற்றுள்ளது.

கேரளாவில் இருந்து புறப்பட்ட குறித்த ரயில் ஆந்திர மாநிலம் விஜயநகரம் வழியாக சென்று கொண்டிருந்தது. அப்போது ரயிலில் தீப்பற்றியுள்ளது என்று கிளம்பிய வதந்தியை அடுத்துப் பயணிகள் அபாயச் சங்கிலியை பிடித்து இழுத்து ரயிலை நிறுத்தியதுடன், ரயிலில் இருந்து கீழே குதித்தனர்.



அப்போது அருகேயுள்ள மற்றொரு தண்டவாளத்தில் வந்த ரயில் பயணிகள் மீது மோதியது. அதில் பயணிகளில் பத்து பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். பலர் படுகாயம் அடைந்தனர்.

விபத்து நடந்த பகுதிக்கு மீட்புப் குழுவினர் விரைந்துள்ளனர். உயிரிழப்புகளின்எண்ணிக்கைமேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

உடனடியாக மீட்புப் பணிகளை முன்னெடுக்குமாறு பணித்துள்ள இந்திய மத்திய ரயில்வே அமைச்சர் மல்லிகாஜூனகார்கே, இந்தச்சம்பவம் குறித்து விரைவான விசாரணை அறிக்கையையும் பொலிஸாரிடம் கோரியுள்ளார். (ற)

# பாட்னா குண்டுவெடிப்பு: புதிய துப்புக் கிடைத்தது

## அரச அதிகாரி ஒருவரின் மகன் கைது

பாட்னா, நவ.4

நரேந்திர மோடி பங்கேற்ற பொதுக் கூட்டத்தில் நடந்த குண்டு வெடிப்பில் பீஹார் அரச அதிகாரி மகன் ஒருவர் தொடர்புபட்டுள்ளார் என்று பொலிஸார் கூறுகின்றனர். குறித்த சம்பவம் தொடர்பாக தேசியபுலனாய்வு படையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கடந்த 27ஆம் திகதி மோடி பங்கேற்ற பொதுக்கூட்ட மைதானத்தில் 8 இடங்களில் குண்டுகள் வெடித்தன. இந்தியன் முஜாகிதீன் பயங்கரவாத அமைப்பினர் இந்தக் குண்டுவெடிப்பை நிகழ்த்தியிருக்கலாம் என்ற கோணத்தில் பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

இந்நிலையில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் பீஹார் அரச அதிகாரி ஒருவரின் மகனான சதாம் உசேன் என்பவர் கைது செய்யப்பட்டு, அவரிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது. சதாம் உசேன் சில பயங்கரவாதிகளை தனது வீட்டில் தங்க வைத்துப் பாதுகாப்பு வழங்கியுள்ளார் என்று கூறப்படுகின்றது.

குண்டு வெடிப்பை நடத்திய பயங்கரவாதிகள் 7ஆம் திகதியிலிருந்து 10ஆம் திகதிகள் பாட்னா வந்துள்ளனர். அவர்கள் சதாம் உசேன் மூலம் சில உதவிகளை பெற்றுள்ளனர். அதிகாரியும், அவரது மகனும் இந்தியன் முஜாகிதீன் அமைப்பிடம் தொடர்பில் இருந்துள்ளனர் என்றும், குண்டு வெடிப்பதற்கு முன்னர் இருவரும், பயங்கரவாதிகளுடன் குறுந்தகவல்களை பரிமாறிக் கொண்டனர் என்றும் கூறப்படுகின்றது.

எனினும் குறித்த அதிகாரியார் என்ற தகவலை வெளியிட பொலிஸார் மறுத்து விட்டனர். (ற)

# இலங்கை செல்வதைத் தடுக்காதீர்கள்

## தி.மு.கவிடம் கெஞ்சுகின்றது இந்திய மத்திய அரசு

சென்னை, நவ.4

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்றால், மத்திய அரசு கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று தி.மு.க. எச்சரித்துள்ள நிலையில், அந்தக் கட்சியின் தலைவர் மு.கருணாநிதியைச் சமாதானப்படுத்த இந்திய மத்திய அரசு மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிந்துள்ளன என்று கூறப்படுகின்றது.

மத்திய அரசின் சமாதானத் தூதுவராக தம்மைச் சந்தித்த மத்திய நிதி அமைச்சரிடம் கருணாநிதி திட்டவட்டமாக தமது நிலைப்பாட்டை தெரிவித்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

"தமிழக மக்களின் உணர்வுகளையும், எதிர்ப்பையும் மீறி இந்தியா பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்றால், மத்திய அரசுக்கு வழக்கும் ஆதரவை முற்றாக விலக்கிக் கொள்ளத் தீர்மானித்துள்ளோம்" என்று மத்திய நிதி அமைச்சர் சிதம்பரத்திடம் தி.மு.க. தலைவர் தெரிவித்துள்ளார் என்று அந்தக் கட்சி வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

> இலங்கைத் தமிழர் தொடர்பாக முன்னர் இலங்கை அளித்த வாக்குறுதிகள் எவையும் அந்த நாட்டு அரசால் நிறைவேற்றப் படவில்லை.
>
> — தி.மு.க.

தி.மு.க. தலைவர் மு.கருணாநிதியைச் சந்தித்த மத்திய நிதி அமைச்சர் சிதம்பரம், "இலங்கைத் தமிழர்களுக்கு சம உரிமைகள் வழங்கும் 13ஆவது அரசியல் அமைப்புச் சட்டத்தை நிறைவேற்றுதல் மற்றும் போரில் இடம் பெயர்ந்தவர்களை மீள்குடியமர்த்துதல் போன்ற முக்கிய விடயங்களில் இலங்கை அரசை இந்தியா நிர்பந்திக்கும். அதற்குபொதுநலவாயமாநாட்டை பிரதமர் மன் மோகன் சிங் பயன்படுத்துவார். எனவே பொதுநல வாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என்ற கோரிக்கையை தி.மு.க. மேலும் வலியுறுத்தக்கூடாது" என்று கோரியுள்ளார்.

எனினும் சிதம்பரத்தின் கோரிக்கையை முற்றாக மறுத்துள்ள கருணாநிதி, "இலங்கைத் தமிழர் தொடர்பாக முன்னர் இலங்கை அளித்தவாக்குறுதிகள் எவையும் அந்நாட்டு அரசால் நிறைவேற்றப்படவில்லை. இருந்தும் இலங்கையை அனுசரிக்கும் போக்கையே இந்திய மத்திய அரசு கடைப் பிடிக்கிறது. நிலைமை அவ்வாறு இருக்கையில் பொது நலவாய மாநாட்டில் பங்கேற்பதன் மூலம் இலங்கை அரசுக்குச் சாதகமாக இந்தியா நடந்துகொள்ளும் நிலையே ஏற்படும். அதனால் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக்கூடாது என்றகோரிக்கையிலிருந்து பின் வாங்க மாட்டோம்" என்று திட்டவட்ட மாகத் தெரிவித்துவிட்டார் என்று தி.மு.க. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ற)

# காங்கிரஸ் எம்.பி. மீது பாலியல் குற்றச்சாட்டு

புதுடில்லி, நவ.4

காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தமக்குப் பாலியல் தொல்லை கொடுத்தார் என்று பிரபல நடிகை சுவேதா மேனன் முறைப்பாடு தெரிவித்துள்ளார்.

அண்மையில் கேரள மாநிலம் கொல்லத்தில் நடைபெற்ற படகுப்போட்டியின் ஆரம்ப விழாவில் சுவேதா மேனன் கலந்துகொண்டார். அந்த விழாவில் பங்கேற்ற காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினரான பீதாம்ரா க்ருப் பாலியல் ரீதியாகத் தன்னை தொட்டுத் தொல்லை தொடுத்தார் என்றே சுவேதா குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் உமன்சாண்டியிடம் முறையிட உள்ளேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் கேரள திரைப்பட சங்கத்திடமும் சுவேதா இது குறித்து முறையிட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்திற்கு பெண்கள் அமைப்புகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. பீதாம்பர க்ருப்பின் உருவபொம்மையை எரித்து இளைஞர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் தம்மீதான குற்றச்சாட்டில் உண்மை இல்லை என்று 73 வயதாகும் பீதாம்ரா க்ருப் கூறியுள்ளார். (ற)

# முற்றுகின்றது முறுகல்நிலை

## அமெரிக்காவுடனான உறவுகள் குறித்து மீளாய்வு செய்யவுள்ளதாக பாக். அறிவிப்பு

இஸ்லாமாபாத், நவ.4

பாகிஸ்தான் தலிபான் அமைப்பின் தலைவர் அமெரிக்க ஆளில்லா விமானத் தாக்குதலில் கொல்லப்பட்டதை அடுத்துக் கடும் கண்டனம் வெளியிட்டுள்ள பாகிஸ்தான் அரசு, அமெரிக்காவுடனான உறவுகள் குறித்து மீளாய்வு செய்யப்படவுள்ளன என்று அறிவித்துள்ளது.

பாகிஸ்தானில் வடக்கு மாகாணத்தில் அமெரிக்க ஆளில்லா விமானம் நடத்திய தாக்குதலில் பாகிஸ்தான் தலிபான் அமைப்பின் தலைவர் ஹக்கீம் உல்லா மசூத் உட்பட 5 பேர் உயிரிழந்துள்ளனர். அதையடுத்து தலிபான்களுடன் பாகிஸ்தான் அரசு நடத்தி வந்த பேச்சுகள் முறிவடைந்துள்ளன.

அமெரிக்காவின் இந்தத் தாக்குதல் குறித்துக் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது பாகிஸ்தான் அரசு. இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் சவுத்ரி நிசார் அலிகான்,

"அமெரிக்காவின் அத்துமீறிய தாக்குதல்களால் பாகிஸ்தானின் வடக்கு மாகாணத்தில் நிலைமை அபாயகரமாக உள்ளது. அது பாகிஸ்தானுக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்திவிடும்.



அமெரிக்க ஆளில்லா விமானத் தாக்குதல்களைக் கண்டித்து பாகிஸ்தான் தலைநகர் கராச்சியில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அமெரிக்காவின் இவ்வாறான தாக்குதல்களைக் கடுமையாகக் கண்டிப்பதுடன் அமெரிக்காவுடனான உறவுகளை பாகிஸ்தான் மீளாய்வு செய்யவுள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் வடக்கு மாகாணங்களில் அமெரிக்க ஆளில்லா விமானங்கள் நடத்தும் தாக்குதல் தமது நாட்டின் இறையாண்மையை மீறும்செயல்என்று பாகிஸ்தான் குற்றஞ்சாட்டி வருகின்றது.

அதேவேளை, பாகிஸ்தான் தலிபான் அமைப்பின் புதிய தலைவராக கான் சயித் சாஜ்னா நியமிக்கப்பட்டுள்ளார். இந்தத் தகவலை அந்த அமைப்பின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ளது.

"அமைப்பின் தலைவராக கான் சயித் சாஜ்னா நியமிக்கப்பட்டுள்ளார். அமெரிக்காவின் தாக்குதலுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும். ஆளில்லா விமானத் தாக்குதலுக்கு பாகிஸ்தான் அரசு முழு உடந்தையாக இருக்கும் என்று நாங்கள் கருதுகிறோம். எங்கள் எதிரியை எங்களுக்கு நன்றாகத் தெரியும். முன்னெப்போதும் இல்லாத வகையில் எங்கள் பழிவாங்கும் நடவடிக்கை இருக்கும்" என்று அமைப்பு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

36 வயதான சயித் 2012 ஆம் ஆண்டு பானு நகரில் உள்ள சிறையை உடைத்து 400க்கும் அதிகமான தலி பான் அமைப்பினரை விடுவித்தவர்என்பதுகுறிப்பிடத்தக்கது.(ற)

## அமெரிக்க விமான நிலையத்தில் சூடு: ஒருவர் சாவு

நியூயோர்க், நவ.4

அமெரிக்க விமான நிலையத்தில் மர்ம நபர் நடத்திய திடீர் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்தார். பலர் காயமடைந்தனர். நாள்தோறும் பரபரப்பாக இயங்கும் லொஸ் ஏஞ்சல்ஸ் விமான நிலையத் தில்தான் இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்துள்ளது.

இராணுவ உடை அணிந்து வந்த மர்ம நபர் ஒருவர் திடீரெனத் துப்பாக்கியால் சுட ஆரம்பித்தார். அதில் பாதுகாவலர் ஒருவர் உயிரிழந்தார். பலர் காயமடைந்தனர்.

அதையடுத்து இராணுவம் மர்ம நபரை சுற்றிவளைத்ததுடன், விமான நிலையத்தில் இருந்த பயணிகளையும் வெளியேற்றினர். இந்த சம்பவத்தையடுத்து விமானப் போக்குவரத்தும் நிறுத்தி வைக்கப்பட்டது.

துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர் காயங்களுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

## ஜப்பானில் நிலநடுக்கம்



டோக்கியோ, நவ.4

ஜப்பானின் கிழக்குப்பகுதியில் நேற்றுக் காலை நிலநடுக்கம் ஏற்பட்டது. 5 ரிச்டர் அலகுகளாகப் பதிவாகியுள்ள இந்த நிலநடுக்கத்தால் தலைநகர் டோக்கியோ உள்பட பல நகரங்களில் கட்டடங்கள் பலமாகக் குலுங்கின. ஆயினும் பொருள் சேதமோ, உயிர் இழப்போ ஏற்பட்டதாக தகவல்கள் வெளியாகவில்லை.

அதேவேளை, தெற்குப் பசிபிக் கடலில் அமைந்துள்ள டோங்கோ தீவுகளிலும் 6.5 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. அதனால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து எதுவும் தெரியவில்லை. (ற)

## ஜேர்மன் செல்கின்றார் எட்வேர்ட் ஸ்நோடன்?

பெர்லின், நவ.4

அமெரிக்க உளவுத் திட்டங்களைப் பகிரங்கப்படுத்திய அமெரிக்க முன்னாள் புலனாய்வுத்துறை கணினி நிபுணர் எட்வேர்ட் ஸ்நோடன் ஜேர்மனிக்குச் செல்லவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

எட்வேர்ட் ஸ்நோடன் வெளியிட்ட அமெரிக்க இரகசிய உளவு நடவடிக்கைகள் தொடர்பான விவரங்கள் சர்வதேச அரங்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தன. ஜேர்மன் பிரதமர் ஏஞ்சலா மெர்க்கலின் தொலைபேசி உரையாடல்களை அமெரிக்கா ஒட்டுக் கேட்டமை தொடர்பாக ஸ்நோடன் வெளியிட்ட ஆதாரங்களால் இருநாடுகளுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில், அந்த விவகாரம் தொடர்பிலான விசாரணைக்கு உதவுவதற்காக எட்வேர்ட் ஸ்நோடன் ஜேர்மனிக்கு வர விருப்பம் தெரிவித்துள்ளார் என்று ஜேர்மனிய நாடாளுமன்ற உறுப்பினர் கிறிஸ்டியன் ஸ்ட்ரோபெல் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு அவர் வரும் பட்சத்தில் ஜேர்மனியிலிருந்து அமெரிக்காவுக்கு பிடித்து அனுப்பப்பட மாட்டார் என்றும் கிறிஸ் டியன் ஸ்ட்ரோபெல் தெரிவித்துள்ளார். (ற)

## ரஷ்யா அருகே போர் ஒத்திகை

மொஸ்கோ, நவ.4

ரஷ்யா அருகே பால்டிக் கடல் பகுதியில் நேட்டோப் படைகள் பிரமாண்டமான போர் ஒத்திகையை ஆரம்பித்துள்ளன. எதிர்வரும் 9ம்திகதி வரை நடக்கவுள்ள இந்த ஒத்திகையில், பல் வேறு நாடுகளை சேர்ந்த வீரர்கள் பயிற்சி பெறுகின் றனர்.

இந்த ஒத்திகையில் 350 வாகனங்கள், 1000 போர்த் தளபாடங்கள், 11 போர்க்கப்பல்கள், ஒரு நீர்மூழ்கிக் கப்பல், 46 ஜெட் விமானங்கள், 11 ஹெலிகொப்டர்கள் ஆகியவை பங்கேற்கின்றன.



இது 2006ஆம் ஆண்டிலிருந்து நடத்தப்பட்ட ஒத்திகைகளில் மிகப் பெரியதாகும். இதன் காரணமாக ரஷ்ய கடலோர பகுதிகளில் அசாதாரண சூழ்நிலை உருவாகி உள்ளது. (ற)

## அமெ. இஸ்லாமிய நாடு

### வெடித்தது புதிய சர்ச்சை

நியூயோர்க், நவ.4

அமெரிக்கா ஓர் இஸ்லாமிய நாடு என்று அமெரிக்க உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க ஹோம்லாண்ட் பாதுகாப்பு ஆலோசனைத் துறையின் உறுப்பினர் முகமது எலிபியரி என்பவரே இந்தக் கருத்தை டுவிட்டரில் வெளியிட்டுள்ளார்.

டுவிட்டரில் உறுப்பினர் ஒருவர், "இஸ்லாமியர்கள் அல்லாதவர்களை சமமாக நடத்தும் ஏதாவது ஓர் இஸ்லாமிய நாட்டைக் கூறுங்கள் பார்ப்போம்" என்று கேள்வி எழுப்பியதை அடுத்து, இதற்கு பதிலளிக்கும் விதமாக இந்த கருத்தை வெளியிட்டிருந்தார்.

எலிபியரின் இந்தக் கருத்துக் குறித்து தற்போது பெரும் சர்ச்சைகள் வெடித்துள்ளன. (ற)

## அமெரிக்காவுக்காக உளவு பார்த்தது ஆஸி.

நியூயோர்க், நவ.4

ஆஸ்திரேலியா அமெரிக்காவின் சார்பில் ஆசிய நாடுகளில் உளவுப் பணியில் ஈடுபட்டு வருகின்றது என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஆசிய நாடுகளில் உளவுப் பணிகளை மேற்கொள்வதற்கான களமாக அந்தந்த நாடுகளுக்கான ஆஸ்திரேலிய தூதரகங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்று கூறப்படுகின்றது.

அமெரிக்காவின் புலனாய்வு



முகவர் நிறுவனம் பற்றி அண்மையில் அமெரிக்க சீ.ஐ.ஏ உளவுப் பிரிவின் முன்னாள் அதிகாரி எட்வேர்ட் ஸ்நோடன் வெளியிட்ட தகவல்களின் அடிப்படையில் இந்த சர்ச்சை கிளம்பியுள்ளது.

இந்தத் தகவல்களை அடுத்து இது தொடர்பில் விளக்கமளிக்குமாறுசீனாஅமெரிக்காவிடம் கோரியுள்ளது. அதேவேளை, ஆஸ்திரேலிய தூதுவரை இந்தோனேஷிய அதிகாரிகள் அழைத்து இந்த குற்றச்சாட்டு குறித்து விளக்கம் கோரியுள்ளனர்.

உலக உளவுப் பணிகளுக்கு அமெரிக்கா, ஆஸ்திரேலிய தூதரகங்களைப் பயன்படுத்திக் கொண்டுள்ளது என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்தியா, இந்தோனேஷியா, சீனா, மலேசியா உள்ளிட்ட பல நாடுகளில் இவ்வாறு உளவு பார்க்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. தூதரகங்கள், உயர்ஸ்தானிகராலயங்களில் பணியாற்றி வருவோருக்கே தெரியாத வகையில் உளவாளிகளை கடமையில் அமர்த்தி தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன என்றும் கூறப்படுகின்றது.(ற)

## பிரான்ஸ் ஊடகவியலாளர் மாலியில் கடத்திக் கொலை

பரிஸ், நவ.4

பிரான்ஸ் நாட்டை சேர்ந்த இரண்டு பத்திரிகையாளர்கள்மாலியில்கடத்திக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

மாலியில் உள்ள ரேடியோ பிரான்ஸ் இன்டர்நேஷனல் என்ற நிலையத்தில் பணியாற்றி வந்த கிளாட் வெர்லன்மற்றும்கிஸ்லெய்ன் டுபான்ட் ஆகியோரே கொல்லப்பட்டுள்ளனர். அவர்களை நேற்றுமுன்தினம் கிடால் நகரில் வைத்து ஆயுதம் ஏந்திய நபர்கள் கடத்திச் சென்றனர்.

கடத்தப்பட்ட சில மணி நேரத்திலேயே இவர்களது உடல்கள்கிடாலுக்குவெளியே 12 கிலோமீற்றர் தூரத்தில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இவர்களின் உடல்கள் துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப்பட்டிருந்தன.

மூன்று ஆண்டுகளுக்கு முன் அல்கொய்தா தீவிரவாதிகளால் பிடித்துச் சென்ற 4பிரெஞ்சு நபர்கள் அண்மையில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ற)

## ஒளி விழா

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் ஒளி விழா இன்று முற்பகல் 10 மணிக்கு ஆர்.சி.நடராசா கலையரங்கில் நடைபெறவுள்ளது.
வித்தியாலய அதிபர் வே.த.ஜயந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு யோசேப் ஆண்டகை, சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் தம்பிராஜா குருகுலராஜா, கௌரவ விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். சந்திரராஜா ஆகியோர் கலந்து கொள்வர். (வ-14)

## மூதாட்டியின் கால் முறிந்தது

வீட்டுப் படியில் சறுக்கி விழுந்து வலது கால் முறிந்த நிலையில் மூதாட்டி ஒருவர் யாழ். தெல் லிப் பழை ஆதார வைத்தி யசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் காலை 6.30 மணியளவில் இடம் பெற்ற இந்த சம்பவத்தில் யாழ். ஏழாலை வடக்கைச் சேர்ந்த சிவதாசன் லீலாவதி (வயது-73) என்ற மூதாட்டியே கால் முறிந்த வராவார். (எ-36)

# வடமாகாணக் கல்வி நிலை பற்றி முதலமைச்சருக்கு விளக்கப்படும்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.4
வட மாகாண கல்வி நிலை குறித்து ஆராய்ந்து முதலமைச்சருக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என வடக்கு மாகாண கல்வி அமைச்சர் ரி.குருகுலராஜா தெரிவித்தார். யாழ்.வேலணை மத்திய கல்லூரி பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது;
அடுத்த ஆண்டில் மாகாண கல்வியை மேம்படுத்துவது குறித்த மாநாடொன்று நடத்தப்படவுள்ளது. அதைத் தொடர்ந்து கல்வி மேம்பாடு தொடர்பான திட்ட வரைபுகள் தயாரிக்கப்பட்டு முதலமைச்சரின் கவனத்துக்கு வைக்கவுள்ளோம்.
போரின் போது பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு இடப்பெயர்வுகளைச் சந்தித்து மீள வந்து பாடசாலையை நல்ல முறையில் கட்டியெழுப்பியுள்ளீர்கள். காலச் சூழ்நிலை காரணமாக பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை எங்கு சேர்த்தால் சிறந்த பெறுபேறுகளைப் பெற முடியும், எங்கு சேர்த்தால் நல்ல தொழிலைப் பெற முடியும் என்று முண்டியடித்து அவர்களை வெளியிடங்களுக்கு அனுப்பி வைக் கிறார்கள்.
எனவே நாங்கள் எங்களது பாடசாலைகளில் எவ்வாறான கல்வியை வழங்க வேண்டும் என்று சிந்திக்க வேண்டியுள்ளது. அதனடிப்படையில் வடமாகாணத்தின் கல்வி நிலை எங்கு சென்று கொண்டிருக்கிறது?, கற்றல் கற்பித்தல் சரியான நிலையில் உள்ளதா?, மாண வர்களும் ஆசிரியர்களும் எதிர்கொள்ளும் பிரச்சி னைகள், நிர்வாகக் கட்டமைப்பில் மாற்றங்கள் கொண்டு வரவேண்டுமா? போன்ற கல்விப் பகுதியில் காணப்படும் பிரச்சினைகள் குறித்துக் கண்டறிவதற் காக ஒரு குழுவை அமைத்துள்ளேன்.
மாணவர்கள் உண்மை பேச வேண்டும் என முதலமைச்சர் இங்கு தெரிவித்திருக்கிறார். இலங்கையின் முதல் சபாநாயகரைப் பெற்ற புனித பூமி இது. அது வரலாற்றில் ஒரு மைற்கல். இப்போது எமது மாகாண சபையில் மக்களுடைய அன்பைப் பெற்று எம்மை வழிநடத்திக் கொண்டிருக்கிறார் முதல்வர். இதுவும் வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும். அவரின் வழிநடத்தல் எம்மைச் சரியான பாதையில் கொண்டு செல்லும். பள்ளிப் பருவத்தை நீங்கள் விட்டு விட்டால் அது பின்னர் உங்களுக்குக் கிடைக்காது. பழைய மாணவர்களாக வந்து செல்ல மட்டுமே முடியும். ஆனால் மாணவர்களாக



உங்கள் குதூகலத்தை நீங்கள் இப்போதுதான் மகிழ்வாக நிறைவேற்ற முடியும். பாடசாலைகளினதும் மாணவர்களினதும் உயர்வுக்கு தேவையானவற்றை நாங்கள் பெற முயற்சிப்போம்.
நீங்கள் ஓர் அருமையான காலத்தில் இருக்கிறீர்கள். இந்த வாழ்க்கையை மாணவர்கள் ஒவ்வொருவரும் முழுமையான மகிழ்வோடு பயன்படுத்த வேண்டும்.-என்றார். (எ-7)




யாழ்ப்பாணம் மருதனார்மடத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் நுண்கலைப்பீடத்தில் இந்தியாவில் இருந்து வருகை தந்த இசைத்துறைப் பேராசிரியர் இ.ரேவதியால் கடந்த 19 ஆம் திகதி பயிற்சிப் பட்டறையும் செயலமர்வும் நடத்தப்பட்டது. பல்கலைக்கழகத்தின் மிருதங்கத்துறை விரிவுரையாளர் எஸ்.மகேந்திரன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. (வ-86)

# 'போதைச் சாரதிகள்' பொலிஸாரால் கைது

## கெக்கிராவில் நடவடிக்கை

மதுபோதையில் பஸ்ஸைச் செலுத்திய இலங்கை போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த சாரதியும், தனியார் பஸ் சாரதியும் நேற்று முன்தினம் அதிகாலை கெக்கிராவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி நோக்கிப் புறப்பட்ட இ.போ.ச காரைநகர் டிப்போவைச் சேர்ந்த சாரதியும், யாழ்ப்பாணத்திலிருந்து தியத்தலாவ நோக்கிப் புறப்பட்ட தனியார் பஸ் சாரதியுமே நேற்று அதிகாலை 1.45 மணியளவில் கெக்கிராவ எனும் இடத்தில் வைத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
இந்த பஸ்களில் தலா 70க் கும் மேற்பட்ட பயணிகள் இருந்துள்ளனர். இவ் விரு சாரதிகளும் மதுபோதையில் வாகனத்தைச் செலுத்தி உள்ளனர். சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளதால் பயணிகள் நடுத்தெருவில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டனர்.
பின்னர் இவர்கள் வேறு பஸ்களில் தமது பயணங்களைத் தொடர்ந்தனர். யாழ்ப்பாணத்திலி ருந்து கண்டி நோக்கிப் புறப்படும் பஸ் மறுநாள் அதிகாலை 2.30 மணிக்கு அங்கு போய்ச் சேர்ந்து விடும். ஆனால் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதால் தாமதமாகவே இவர்களால் செல்ல முடிந்தது. இதனால் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-422)

## பக்கவாத நோயால் பாதிப்புற்று –

# இலங்கையில் தினமும் 40 பேர் உயிரிழப்பு

பக்கவாத நோய் காரணமாக இலங்கையில் தினமும் 40 பேர் உயிரிழப்பதாகவும் 80 பேர் அந்த நோயால் பாதிக்கப்படுவதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
திடீரென ஏற்படும் கடுமையான தலைவலி, உணவுகளை விழுங்க சிரமப்படும் நிலை, திடீரென பார்வையில் மாற்றம், நடப்பதற்குச் சிரமப்படல், தலைச்சுற்று, சமநிலை இழந்து தள்ளாடும் நிலை, உடலில் ஒரு பகுதி திடீரென விறைத்துப் போதல் ஆகியன பக்கவாத நோயின் அபாய அறிகுறிகள் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
உலக பக்கவாத நோய் தினத்தை முன்னிட்டு றாகம போதனா வைத்தியசாலையில் பக்கவாத நோய்ச் சிகிச்சைப் பிரிவொன்று கடந்த 29 ஆம் திகதியன்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவால் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-22)

## நயினாதீவுக்கு கடற்பாதைச் சேவை ஆரம்பம்

குறிகாட்டுவானுக்கும் நயினாதீவுக்கும் இடையிலான கடற்பாதைச் சேவை வார இறுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது. கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்தச் சேவைக்கென தருவிக்கப்பட்ட இக்கடற்பாதை மக்களின் கோரிக்கையை அடுத்து புனரமைப்புச் செய்யப்பட்டு சேவைக்கு விடப்படவுள்ளது. (ஒ-7)

**ஓட்டோ விற்பனைக்கு**
203-XXXX இலக்கமுடைய ஓட்டோ விற்பனைக்குண்டு. (39725) (6.4.3)
தொடர்பு: 077 543 0731

**வாகனம் விற்பனைக்கு**
Tata 407- Turbo(அலுமினிய பொடி)
NP LK-xxxx இலக்கமுடைய வாகனம் விற்பனைக்குண்டு.
லீசிங் வசதி செய்து தரப்படும்.
தொடர்பு: 077 6728444 (39730)(10.6.3)

**காணி விற்பனைக்கு**
மருதடி வீதி, யாழ்ப்பாணம் (பொஸ்கோ பாடசாலை, இந்தியத்தூதரகம் என்பவற்றுக்கு அருகில்) 1¼ பரப்பு வீதம் இரண்டு காணித் துண்டுகள் நல்லூர் சுற்றாடலில் விற்பனைக்குண்டு (39724) (6.3.4)
தொடர்பு: 077 053 8405

**கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
**கிளிநொச்சி**
**கூறுவிலை கோரல்**
எமது சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தின் கனப்பிக்கு (CANOPY) தற்போதைய நவீன முறையிலான லெவல் சீற் பொருத்துவதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது. உரிய வேலையினை செய்து தரவிரும்புவோர் அலுவலகக் கடமை நாள்களில் உரிய விவரங்களைப் பெற்று 12.11.2013ஆம் திகதிக்கு முன்னர் கூறுவிலையினை மூடிய தபாலுறையிலிட்டு சங்கத்தின் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
தலைவர், (சி/13518) (7.6.3)
கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம், கிளிநொச்சி.

**வேலையாள்கள் தேவை**
வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்கள், பழக விரும்புபவர்கள் தேவை.
தொடர்பு : ந. குமாரசாமி அன் சன்ஸ்
252, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (39540) (7.6.3)

**இணைந்த கணிதம்**
ஆசிரியர் T. விஜேந்திரன் (BSc Dip in Ed) யாழ் இந்துக் கல்லூரி, நிரு கோண்டாவில் 2014 புலியிர்ப்பு மையம் ஆரம்பம் 04.11.2013 திங்கள் 3.30pm. சித்தன்கேணி, மானிப்பாய், யாழ்ப்பாணம் தனி, குழு வகுப்புக்கள் (சித்தன் கேணி சுப்பிராவிலும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன)
தொடர்பு : 077 441 3087 (39672) (7.6.3)

பார்மசி, ஆய்வுகூடம், கிளினிக் ஆகியவற்றில் வேலைவாய்ப்புடன் CMA
உங்கள் வாழ்வை மேம்படுத்த
**மருத்துவ உதவியாளர் பயிற்சி**
After A/L - Next ?
O/L வரை கற்றிருக்கும் அனைவருக்கும் கே.யு வின் பிரபலமான தொழில் வாய்ப்பு உறுதிப்படுத்தப்பட்ட பயிற்சி நெறி.M.B.B.S வைத்தியர்களிடம் நேரடியாக கற்கும் வாய்ப்பு.
பயிற்சிக்கட்டணம் : 12,500/= (6 Months)
லாவா வைத்தியசாலையில் செயன்முறைப் பயிற்சிகள் KU Education
தொழில்வாய்ப்பு மற்றும் மேலதிக பயிற்சிகளிற்கு மலேசியா செல்லும் வாய்ப்பு ! Fly Malaysia NIGHTINGALE COLLEGE
**Knowledge Universe**
(லாவா வைத்தியசாலை மேல்மாடி)
இல 75,கோவில் வீதி,யாழ்ப்பாணம்.
தொலைபேசி :0777302882/0213208342
www.kugroup.info

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**
இணுவிலைச் சேர்ந்த
செல்வன் மகாலிங்கசிவம் தமிழ்மாறன்
2013 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 161 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.
இவரின் வெற்றிக்கு உந்துசக்திகளாக விளங்கிய யா/உடுவில் மகளிர் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், வகுப்பாசிரியர் திருமதி நிருஷா சசிகாந் அவர்களுக்கும் அன்பொளி கல்வி நிலையத்தினருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, மேலும் பல சிறப்புகளைப் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
மகியன்ரி, சித்தப்பா
ஒக்லன்ட், நியூசிலாந்து.
(39679) (4.6.3)




**பாராட்டி வாழ்த்துகின்றோம்**
யாழ்/கரவெட்டி
மாணிக்கவாசகர் வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன்
**ஜேசுதாஸ் கவிராஜ்**
2013 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 170 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் 11 ஆம் இடத்தைப் பெற்றமையைப் பாராட்டுவதுடன், அவர் மேன்மேலும் கல்வியில் பல பட்டங்களையும் பெற வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்: சிவராஜா குடும்பம்
(கோண்டாவில்)
Congratulation
(39722) (4.6.3)

# யானைகள் நடமாட்டம்

மாங்குளம், நவ.4
நெடுங்கேணி பிரதேச செயலகத்துக்குட்பட்ட கரப்புக்குத்தி, நயினாமடு, சின்னடம்பன், மாறா இலுப்பை, குளவிசுட்டான் போன்ற பல கிராமங்களில் இரவு வேளைகளில் யானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.



அந்தப் பகுதி வீடுகளில் வைக்கப்பட்டுள்ள நெல் மூடைகளையும், பயிரிடப்பட்ட வாழை மரங்களையும் இரவு நேரங்களில் ஊடுருவும் யானைகள் குடிமனைக்குள் புகுந்து நாசம் செய்கின்றன.

இந்த யானைகள் இரவு வேளையில் வருவதால் அந்தப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் அச்சத்துடனேயே வாழ் வதாகவும், மாணவர்களின் கல்வி பாதிப்படைவதாகவும் மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, யானைகளிலிருந்து தமக்குப் பாதுகாப்பு வழங்குமாறு உரியவர்கள் இங்கு வசிக்கும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-422)

# உழவு இயந்திரங்கள் தொடர்பாக அறிக்கை

## மன்னார் மேலதிக அரச அதிபர் பணிப்புரை

உழவு இயந்திரங்கள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு மன்னார் மேலதிக அரச அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தின் விவசாய நடவடிக்கைகளுக்கென கடந்த காலங்களில் அரசால் வழங்கப்பட்ட உழவு இயந்திரங்கள் தொடர்பிலேயே மேற்படி பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற மாவட்ட விவசாய அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலின் போதே மேலதிக அரச அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டிமெல் இந்தப் பணிப்புரையினை விடுத்தார்.

மன்னார் மாவட்டத்தின் விவசாய நடவடிக்கை களை மேம்படுத்தும் பொருட்டு அரசால் சுமார் 100 உழவு இயந்திரங்கள், அதற்கான உதிரிப்பாகங்கள் என்பன வழங்கப்பட்டிருந்தன.

**"-"**
**விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்தும் பொருட்டு 100 உழவு இயந்திரங்கள், அதற்கான உதிரிப்பாகங்கள் வழங்கப்பட்டிருந்தன.**

இவ்வாறு வழங்கப்பட்ட பொருள்களின் பாவனை மற்றும் பராமரிப்புத் தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருப்பதாக மேலதிக அரச அதிபர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

விவசாயிகளின் நலன்களைக் கருத்தில் கொண்டு அரசால் வழங்கப்பட்ட உழவு இயந்திரங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் பாவிக்கப்படாமல் இருக்குமானால் அது தவறான விடயம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆதலால், விவசாய நடவடிக்கைகளுக்கென வழங்கப்பட்டுள்ள சுமார் 100 உழவு இயந்திரங்களின் பாவனை, அதன் பராமரிப்பு, அதற்குரித்தான பொறுப்பாளிகள் தொடர்பான முழுமையான விவரங்கள் அடங்கிய அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அவர் பணிப்புரை விடுத்துள்ளார். (க-ரி)

# தென்பகுதி மீனவர்களை மன்னாருக்கு வரவிடோம்

## ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கப் போவதாகவும் தெரிவிப்பு

மன்னார், நவ.4
மன்னார் சௌத்பார் தென் பகுதிக் கடற்கரைப்பகுதியில் தங்கி நின்று வாடிகளை அமைத்து கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ள தென்பகுதி மீனவர் தொடர்பாக மன்னார் பனங்கட்டிக்கொட்டு மீனவ சமூகத்தினர் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.



இது தொடர்பாக பனங்கட்டிக்கொட்டு மீனவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்;
மன்னார் சௌத்பார் கடற்கரை பனங்கட்டிக்கொட்டு கிராம மீனவர்கள் தொழில் புரியும் ஒரு இடமாகக் காணப்படுகின்றது. ஆனால் ஆண்டுதோறும் தென் பகுதி மீனவர்கள் குடும்பம் குடும்பமாக வந்து வாடிகளை அமைத்து தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம் போன்ற இடங்களில் இருந்து நூற்றுக்கணக்கான மீனவர்கள் தமது குடும்பங்களுடன் வருகின்றனர்.

இவர்கள் ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதம் வருவார்கள். அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் வரை தொழில் புரிவார்கள்.

இவர்கள் சுமார் 6 மாதம் தங்கி நின்று மீன் பிடியில் ஈடுபடுகின்றனர்.

தடை செய்யப்பட்ட அனைத்து மீன்பிடித் தொழில்களையும் இவர்கள் மேற்கொள்கின்றனர். இவர்களுக்கு கடற்படையும் பொலிஸாரும் பாதுகாப்பு வழங்குகின்றனர்.

இன்னும் ஒரு சில தினங்களில் 190 க்கும் மேற்பட்ட மீனவர்களும் படகுகளும் சௌத்பார் பகுதிக்கு வர உள்ளதாக அறிகின்றோம்.

இந்த நிலையில் அப்பகுதியில் பொலிஸாரும், கடற்படையினரும் பாதுகாப்புக் கடமையில் தற்போதே ஈடுபடத்தொடங்கியுள்ளனர்.

இந்த தென் பகுதி மீனவர்களின் வருகையால் எமது உள்ளூர் மீனவர்கள் பெரிய அளவில் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர். சௌத்பார் கடற்பரப்பில் எமது மீனவர்கள் மேற்கொள்ளும் கரை வலைத்தொழிலும் பாதிப்படைகின்றது.

மேலும், தென் பகுதி மீனவர்கள் தங்கி நின்று சுதந்திரமாக தொழில் புரியும் அதேவேளை எமது மீனவர்கள் தொழிலுக்குச் சென்றால் படையினருடைய கெடுபிடிகளுக்கு மத்தியில் 'பாஸ்' பெற்றபின்பே தொழில் செய்ய முடிகின்றது.

எனவே இம்முறை தென் பகுதி மீனவர்களு டைய வருகையை நாங் கள் முற்று முழுதாக எதிர்க்கவுள்ளோம்.

ஆகவே மன்னார் மாவட்ட கடல் தொழில் உதவிப் பணிப்பாளர், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர் டெனீஸ்வரன் ஆகியோர் நடவடிக்கை எடுத்து இந்த மீனவர்களின் வருகையை நிறுத்த வேண்டும்.

இல்லாவிட்டால் தென் பகுதி மீனவர்களின் வருகைக்கு எதிராக மன்னார் மாவட்ட மீனவ சமூகம் பெரிய கண்டன ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கும் என்று பனங்கட்டிக்கொட்டு மீன வர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (க-12)



மரித்த ஆத்துமாக்கள் தினத்தை அகிலத்திருச்சபை நேற்று முன்தினம் சனிக்கிழமை நினைவு கூர்ந்ததை முன்னிட்டு மன்னார் மறைமாவட்டத்தில் கிறிஸ்தவர்கள் செறிந்து வாழும் பேசாலைக் கிராமத்தில் உள்ள சேமக்காலையில் நிகழ்வு ஒன்று இடம்பெற்றது. இதன் போது பேசாலை உதவிப் பங்குத் தந்தை அருட்பணி அருட்குமரன் தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. (க-12)

# இளம் பெண்ணின் கைப்பை பறிப்பு

அக்கராயன், நவ.4
பாடசாலை முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த பாடசாலையில் அலுவலக உதவியாளராகக் கடமை புரியும் இளம்பெண்ணின் கைப்பையை மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் பறித்து எடுத்துச் செல்லப்பட்ட சம்பவம் கிளிநொச்சியில் இடம்பெற்றது.

கடந்த 29ஆம் திகதி கிளிநொச்சி சாந்தபுரம் பாடசாலையில் பணி புரியும் வி.சிவாஜினி (வயது-21) என்ற இளம் பெண் தனது சைக்கிள் முன்கூடையில் கைப்பையை வைத்துக்கொண்டு சென்ற போது மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே கைப்பையை பறித்துச் சென்றுள்ளனர்.

இந்தக் கைப்பையினுள் அடையாள அட்டை, ஒரு தொகைப் பணம் என்பன இருந்ததாக அதைப் பறி கொடுத்த பெண் பொலிஸாரிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளார். (க-18)

# நிரப்பப்படாத வெற்றிடங்கள்

வவுனியா பூசணிப்பிட்டிப் பாடசாலையில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குமாறு வவுனியா தெற்கு கல்விப் பணிப்பாளரிடம் மாணவர்களும், பெற்றோரும் கோரிக்கை விடுத் துள்ளனர்.

வவுனியா பூசணிப்பிட்டிப் பாடசாலையில் ஏற்கனவே கடமையாற்றிய ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். ஆனால் இதனால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்கு இது வரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. அது தொடர்பாக மூன்று மாதங்களுக்கு முன்பும் வவுனியா கல்வி வலயத்தில் பெற்றோர் முறைப்பாடு செய்திருந்தனர். ஆசிரியர் பற்றாக் குறையால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (க-402)

# இரணைமடுக் குளத்தில் இறால் பிடிப்பு

அக்கராயன், நவ .4
கிளிநொச்சி இரணைமடுக்குளத்தில் தற்போது அதிகளவில் இறால் பிடிக்கப்படு வதாக கிளிநொச்சி மாவட்ட நன்னீர் மீன்பிடி விரிவாக்க அலுவலர் எஸ்.திலீபன் தெரிவித்தார்.

கிளிநொச்சி அரச செயலகத்தில் இடம்பெற்ற விவசாயக் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

குளங்களில் மீன்குஞ்சுகளை விட்டு அவை வளர்ச்சியடைந்ததும் பிடிக்கப்பட்டு விற்பதால் அதிக இலாபத்தைப் பெறக் கூடியதாக உள்ளது. நாம் அடையாளப்படுத்தியுள்ள குளங்களில் கமக்கார அமைப்புக்களுடன் கிராம மக்களையும் இணைத்து மீன் குஞ்சுகளை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றோம். பெரிய குளங்களில் நடப்பாண்டில் சுமார் 8 இலட்சம் மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளன.

இரணைமடுக் குளத்தில் 80 ஆயிரம் இறால் குஞ்சுகளும் விடப்பட்டன. தற்போது பிடிபடும் மூன்று இறால்கள் ஒரு கிலோ நிறை உள்ள நிலையில் இறால் ஒன்று 80 ரூபா வீதம் விற்பனை செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (க- 18)





தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு களுவாஞ்சிக்குடி பொது நூலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் புத்தகக் கண்காட்சி களுவாஞ்சிக்குடி இராசமாணிக்கம் மண்டபத்தில் நடைபெற்றபோது, ஏராளமான வாசகர்கள் நூல்களைப் பார்வையிட்டுப் பயன் பெற்றனர். (ச)

# இராணுவத்தின் ஆட்சி கிழக்கில் இல்லையாம்

## ஹிஸ்புல்லாஹ் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஒக்.4

கிழக்கு மாகாணத்தில் இராணுவ ஆட்சி நடைபெறவில்லை என்று பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவருமான எம். எல். ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் சிவில் நிர்வாகமே நடைபெறுகின்றது என்று அவர் . குறிப்பிட்டார்.



மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். (ச)

# வைத்தியசாலைக்கு நிதி

அம்பாறை, நவ.4

அம்பாறை, இறக்காமம் பிரதேச வைத்தியசாலையை அபிவிருத்தி செய்ய 2013 ஆம் ஆண்டுக்கான பன்முகப் படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட நிதியிலிருந்து அம் பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பைசல் காசிம் மூன்று லட்சம் ரூபா வையும், எச்.எம்.எம்.ஹரிஸ் இரண்டு லட்சத்தி 50ஆயிரம் ரூபாவையும் ஒதுக்கீடு செய்துள்ளனர்.

# சிசுவின் சடலம் மீட்கப்பட்டது

மட்டக்களப்பு, நவ.4

வாழைச்சேனை, வாகனேரி, குடாமுனைக்கல் பகுதியில் வீதியின் ஓரத்தில் கைக்குழந்தையின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் மாடு மேய்க்கச் சென்ற சிறுவர்கள் துர்நாற்றம் வீசுவதைக் கண்டு பார்த்த போது பையில் கட்டப்பட்ட நிலையில் குழந்தையின் சடலம் ஒன்று கிடப் பதைக் கண்டு வாகனேரி பிள்ளையார் கோயில் தலைவரிடம் கூறியுள்ளனர். அவர் கிராம அலுவலரின் உதவியுடன் வாழைச்சேனை பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

அதனையடுத்து குழந்தையின் உடல் மீட்கப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ச)

# மக்கள் பிரச்சினைக்கு மிக விரைவில் தீர்வு

## தென்ன மரவாடி சென்ற சம்பந்தன் எம்.பி. உறுதி

மூதூர், நவ.4

திருகோணமலை, தென்னமரவாடி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அவர் தென்னமரவாடி கிரமத்துக்கு சனிக்கிழமை சென்று மக்களிடம் குறைநிறைகளை கேட்டறிந்துள்ளார்.

தென்னமரவாடி பிரதான பாதைக்கு மேற்குப் பக்கமாக இருக்கும் காணிகளை மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரசு பொறுப்பெடுத்து பெரும்பான்மை இனத்தவர்களுக்கு வழங்கி வருகின்றது.

இதனைத் தடுத்து நிறுத்துமாறு தென்னைமரவாடி மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தனிடம் கேட்டுள்ளனர்.

"எமது கிராமத்துக்கு மின்சார இணைப்புக்கள் வழங்கப்பட்டபோதும்மின்விநியோகம் வழங்கப்படவில்லை. அதனால் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றோம். யானைகளின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது.



யானைத் தாக்குதலில் இருந்து பாதுகாப்புப் பெற இரவு நேரத்தில் நித்திரை இன்றி கண் விழித்திருக்கின்றோம்" என்று மக்கள் தெரிவித்தனர்.

"எமது பகுதியிலுள்ள 'கந்தசாமி மலை' இன்று தொல்பொருள் திணைக்களம் பொறுப்பெடுக்கப்பட்டு அங்கு பௌத்த விகாரை அமைப்பதற்கான முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. அந்தப் பகுதிக்கு இன்று செல்ல முடியாத நிலை காணப்படுகிறது.

எங்களது வயல் நிலங்களில் பெரும்பான்மை மக்கள் நெற் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்" என்று தென்னமரவாடி மக்கள் குறிப்பிட்டனர்.

தென்னமரவாடி மக்களின் கருத்துக்களை கேட்டறிந்த நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் இந்தப் பிரச்சினைகளுக்கு உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு தீர்வைப் பெற்றுத் தருவதாக உறுதிமொழி வழங் கியுள்ளார்.

இந்த மக்களை சந்தித்த பின் அவர் புல்மோட்டை மக்களையும் சந்தித்து அந்த மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கேட்டறிந்து கொண்டார்.

அவருடன் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டத் தலைவர் க. துரைரெட்ணசிங்கமும் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-40)

# விவசாய வீதியை புனரமையுங்கள்

## மக்கள் வேண்டுகோள்



மட்டக்களப்பு, நவ.2

மட்டக்களப்பு,நவகிரி நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் படுவான் கரைப்பகுதியில் அமைந்துள்ள தும்பங்கேணி, நாவற்கேணி பிரதான விவசாய வீதியை உடன் புனரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த வருடம் இந்தப் பகுதியில் ஏற்பட்ட வெள்ள இடரால் உடைப்பெடுத்த விவசாய வீதி இன்று வரை புனரமைக்கப்படாமல் தூர்ந்துபோன நிலையில் காணப்படுகின்றது.

தற்போது பருவகால மழை பெய்யத் தொடங்கியுள்ளதால், விவசாயிகள் நெற்செய்கையை மேற்கொள்வதற்கான முன் ஆயத்தங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

அதனால் உடனடியாக இந்த வீதியை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் புனரமைத்துத்தர வேண்டும் என்று விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச)

# அரபுக் கல்லூரி தீக்கிரை; மூவர் கைது



மட்டக்களப்பு, நவ.4

மட்டக்களப்பு, ஓட்டுமாவடி பிரதேசத்தில் அரபுக் கல்லூரியை தீக்கிரையாக்கிய சம்பவம் தொடர்பில் 3 இளைஞர்களை வாழைச்சேனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் ஓட்டுமாவடி, பிரதான வீதியில் அமைந்திருந்த அரபுக் கல்லூரியை இனம் தெரியாதோர் தீயிட்டு தீக்கிரையாக்கிய சம்பவம் இடம்பெற்றது.

இதன் சூத்திரதாரிகளை கண்டு பிடிப்பதற்கான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வந்தனர்.

அதனையடுத்தே குறித்த மூவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட மூன்று பேரையும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# காணிகளை அபகரித்தோர் 25 இற்குள் வெளியேறுங்கள்

## மண்முனை மேற்குப் பிரதேச செயலர் அறிவிப்பு

மட்டக்களப்பு.மண்முனை மேற்கு வவுணதீவுப் பிரதேசசெயலர் பிரிவில் மேய்ச்சல் தரைக்கென ஒதுக்கப்பட்ட காணியைப் பெரும்பான்மை இனத்தைச்சேர்ந்த 23 பேர் அத்துமீறி அபகரித்துள்ளனர்.

இந்தக் காணிகளை விட்டு ஒரு மாத காலத்துக்குள் அவர்கள் வெளியேற வேண்டும் என்று மண்முனை மேற்குப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

உன்னிச்சை கிராம சேவகர் பிரிவிலுள்ள 160 ஏக்கர் காணியிலேயே 23பேர்அத்துமீறி சேனைப்பயிர் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

சேனைப்பயிர் செய்கையை அவர்கள் மேற்கொள்வதற்காக காடுகளை அழித்தும் வருகின்றனர். இந்தப் பகுதியை மண்முனை மேற்குப் பிரதேச செயலக அதிகாரிகள் சென்று பார்வையிட்டனர். இந்தப் பகுதியில் அத்துமீறி பயிர்ச் செய்கையில் ஈடுபட்டவர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் வெளியேறாவிட்டால் அவர்களை நீதிமன்றத்தின் ஊடாக வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச)





# உணவுப் பொருள்கள் வழங்கல்

திருகோணமலை, நவ.4

கிழக்கு மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தண்டாயுதபாணியால் 120 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

இந்த உலர் உணவுப் பொருள்கள் கிளிவெட்டி. பாரதிபுரத்தில் குடும்பத் தலைவர்களை இழந்த குடும் பங்களுக்கு வழங்கப்பட்டன.

# பிரிட்டன் பிரதமர் தன் கரங்களில் கறைபடிய அனுமதிக்கக்கூடாது

## மாநாட்டுக்கு செல்லாதீர் என அங்குள்ள தமிழர்கள் போராட்டம்

பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன், இங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டுக்கு செல்லக் கூடாது எனக் கோரிக்கை விடுத்து பிரிட்டன் வாழ் தமிழர்கள் நேற்று முன்தினம் அவரது அதிகாரபூர்வ இல்லத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளார்கள்.

''பிரிட்டனின் ஊடகங்களில் இலங்கையில் நடந்ததாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் குறித்து அதிகப்படியான ஆதாரங்கள் வந்துகொண்டிருக்கும் நிலையில் அங்கு செல்வதன் மூலம் பிரிட்டன பிரதமர் தனது கரத்தில் கறைபடிய அனுமதிக்கக்கூடாது'' என்று இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்த பிரிட்டன் தமிழர் பேரவையைச் சேர்ந்த சாம் கிருஷ்ணா பி.பி.ஸியிடம் தெரிவித்துள்ளார்.

அதுமாத்திரமன்றி ஏனைய நாடுகள் விடயத்தில் கடுமையான போக்கைக் கடைப்பிடிக்கும் பிரிட்டன், இலங்கை விடயத்தில் மென்மையான போக்கை கடைப்பிடிக்கக் கூடாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுநலவாய அமைப்புக்கு என்று இருக்கின்ற விழுமியங்களை இலங்கை மீறுவதாகக் கூறும் பிரிட்டன் தமிழர் பேரவை, அதனால், அந்த நாட்டை பொதுநலவாய அமைப்பிலிருந்து விலக்கிவைக்க வேண்டும் என்றும் கோருகிறது. இலண்டன் எம்பாங்க்மெண்ட் பகுதியில் ஆரம்பமான தமிழர்களின் இந்த ஊர்வலம் பிரதமரின் அதிகாரபூர்வ டவுணிங் ஸ்ட்ரீட் இல்லம் வரை சென்றது.



ஜனாதிபதி அளித்த வாக்குறுதிக்கமைய ரத்துபஸ்வெவ வெனிகுரோஸ் தொழிற்சாலையை மூடுமாறு வலியுறுத்தி குறித்த பிரதேச மக்கள் நேற்று சிதறுதேங்காய் உடைத்து வழிபாடுகளில் ஈடுபட்டனர்

# சவூதியிலிருந்து நாடு திரும்பினர் 10 ஆயிரம் இலங்கையர்கள்

## பொது மன்னிப்பு காலம் முடிவடைந்ததால் என்கிறது வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

சவூதி அரேபியாவில் சட்ட விரோதமாக தங்கியுள்ள வெளிநாட்டவர்களை வெளியேறுவதற்கு அந்நாட்டு அரசினால் வழங்கப்பட்ட விசேட பொது மன்னிப்புக் காலம் நேற்றுடன் முடிவடைந்துள்ள நிலையில், பொது மன்னிப்புக்கு உட்பட்ட சுமார் பத்தாயிரம் இலங்கையரும் நாடு திரும்பியுள்ளனர் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

கடந்த மே மாதம் 4 ஆம் திகதி முதல் நேற்று 3 ஆம் திகதி வரை இந்த பொது மன்னிப்புக் காலம் அந்நாட்டு அரசால் அறிவிக்கப்பட்டிருந்தது. ஏற்கனவே சுமார் 16 ஆயிரம் இலங்கையர்கள் சவூதி அரேபியாவில் சட்ட விரோதமாக தங்கிருப்பதாக அந்நாட்டிலுள்ள இலங்கைத் தூதரகத் தகவல்கள் மூலம் அறியமுடிகிறது என பி.பி.ஸி. செய்தி வெளியிட்டுள்ளது. அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் துணை பொது முகாமையாளரும் ஊடகப் பேச்சாளருமான மங்கள ரன்தெனிய, பொது மன்னிப்பு வழங்கப்பட்ட காலத்துக்குள் அதனைப் பெற தகுதியுடைய சுமார் 10 ஆயிரம் பேரும் நாட்டிற்கு அழைக்கப்பட்டு விட்டதாகக் கூறினார்.

மேலும் பெண்கள் உட்பட ஏனைய 6 ஆயிரம் பேரைப் பொறுத்த வரையில் சட்ட விரோதமாக தங்கியிருந்தாலும் சவூதி அரேபிய அரசின் பொது மன்னிப்பு வரையறைக்குள் அவர்கள் உட்படாதவர்கள் என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

அதாவது விசா இன்றி தங்கியிருந்தமை, கைவிரல் அடையாளங்கள் பதிவு செய்யாமை போன்ற அந்நாட்டு சட்ட திட்டங்களை இவர்கள் மீறியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்படியானவர்களை நாட்டுக்கு திருப்பி அழைப்பதற்கான முயற்சிகள் சவூதியில் உள்ள இலங்கை தூதரகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் அவர்களை நாட்டுக்கு அழைப்பது தொடர்பில் பிரச்சினையாகவே உள்ளது. இருப்பினும், இதற்கான முயற்சிகள் தொடர்ந்தும் முன் னெடுக்கப்படுகின்றன என்றும் மங்கள ரன்தெனிய தெரிவித்துள்ளார்.

உள்நாட்டில் தங்களால் தொழில் பெறமுடியாத நிலையே தொடர்ந்தும் இருப்பதால் மீண்டும் வேறொரு நாட்டிற்குத் தொழில் நிமித்தம் செல்வதையே அவர்களில் பலரும் விரும்புகின்றார்கள்.

பொது மன்னிப்பு காலத்திற்குள் வெளியேறத்தவறி, தொடர்ந்தும் சட்ட விரோதமாக தங்கியிருப்பவர்களுக்கு எதிராக தமது நாட்டு குடிவரவு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என ஏற்கனவே சவூதி அரேபியா அறிவித்துள்ளது.

# காணிகளை அபகரிக்கவும் செயலமர்வு

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் காணி சுவீகரிப்பை மேற்கொள்வதில் முனைப்பாகவுள்ள அரசு, இதற்காக விசேட செயலமர்வு ஒன்றைப் பிரதேச செயலர்களுக்கும் காணி அலுவலர்களுக்கும் ஒழுங்கு செய்துள்ளது.

அனுராதபுரத்தில் எதிர்வரும் 5 ஆம், 6 ஆம், 7 ஆம் திகதிகளில் இந்தச் செயலமர்வு இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் இராணுவத்தினருக்குத் தேவையான காணிகளைச் சுவீகரிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருந்தது. மாகாண சபைத் தேர்தல்களால் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த இந்தச் செயற்பாட்டை அரசு மீண்டும் ஆரம்பித்துள்ளது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் காணி பற்றிய பரிந்துரைகள் தொடர்பான செயலமர்வு ஒன்று அனுராதபுரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கின் சகல பகுதிகளிலும் உள்ள பிரதேச செயலாளர்கள், காணி அலுவலர்கள் ஆகியோருக்கே இந்தச் செயலமர்வு இடம்பெறவுள்ளது.

இதில் காணி சுவீகரிப்பு, அரச காணி பங்கீடு என்பன தொடர்பில் ஆராயப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாநாட்டுக்காக கொழும்பில் 35 பாடசாலைகள் மூடப்படும்




இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டையொட்டி கொழும்பிலுள்ள 35 பாடசாலைகள் எதிர்வரும் புதன்கிழமை(6ஆம் திகதி) முதல் 17ஆம் திகதிவரை மூடப்படுமென கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

மாநாட்டு அலுவல்களுக்காக இப்பாடசாலைக் கட்டடங்கள் பயன்படுத்தப்படவுள்ளதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கல்விய மைச்சு மேலும் தெரிவித்திருக்கிறது.

# இ.போ.சபைக்கு 2 ஆயிரம் பஸ்கள்



இலங்கை போக்குவரத்துச் சபைக்கு மேலும் 2 ஆயிரம் பஸ்களைக் கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளிலிருந்து இந்த பஸ்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளதென இலங்கை போக்குவரத்து சபையின் உப தலைவர் எல்.ஏ. விமலரத்ன தெரிவித்துள்ளார்.

குறித்த பஸ்கள் தூர சேவைப் பயணங்கள் மற்றும் கிராமப் பகுதிகளில் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. தமது சபைக்குச் சொந்தமான 5 ஆயிரத்துக்கும் அதிகமான பஸ்கள் தற்போது சேவையில் ஈடுபட்டுவருவதாகவும் இலங்கை போக்குவரத்து சபையின் உப தலைவர் எல்.ஏ. விமலரத்ன மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கை இளைஞன் கொலை சந்தேகநபர்களுக்கு மறியல்

கல்வி நடவடிக்கைகளுக்காக பிரிட்டன் சென்ற இலங்கை இளைஞனைக் கொலை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இருவர் எதிர்வரும் 15ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் பெல்ட் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டதன் பின்னர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தெற்கு யோக்சயர் பொலிஸாரினால் இந்த கொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவர்கள் 17 மற்றும் 25 வயதுடையவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



பிரிட்டன பல்கலைக்கழகம் ஒன்றில் கல்வி கற்கச் சென்ற பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த 25 வயதான தவிச பீரிஸ் என்பவர் கடந்த 27ஆம் திகதி கொலை செய்யப்பட்டார்.

# முன்னாள் பொலிஸ் கான்ஸ்டபிளும் இராணுவச் சிப்பாயும் கைது

மறைந்த திரைப்பட இயக்குநர் திஸ்ஸ அபேசேகரவின் உறவினர் என்று கூறப்படும் பெண்ணொருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ராஜகிரிய பொரலஸ்கமுவ பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் முன்னாள் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் இராணுவச் சிப்பாய் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மிரிஹான பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த செப்டம்பர் மாதம் 28ஆம் திகதி இந்தக் கொலை இடம் பெற்றுள்ளது. கைது செய்யப்பட்ட நபர்களால் கொள்ளையிடப்பட்டதாகக் கூறப்படும் தங்க நகைகளும் இதன் போது கைப்பற்றப்பட்டுள்ளன.

# அதிவேக வீதியில் ஓட்டோ சாரதி கைது

கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக வீதியில் பயணித்த ஓட்டோ ஒன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. அதிவேக வீதியில் 12 ஆவது மைல் கல் பகுதி யில் வைத்து இந்த ஓட்டோ நேற்றுமுன்தினம் இரவு கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாடகைக்கு பெறப்பட்ட இந்த ஓட்டோ அதிகவேக வீதியில் பயணித்ததையடுத்து பொலிஸார் தடுத்து நிறுத்தியுள்ளனர். கைப்பற்றப்பட்ட ஓட்டோ, அதன் சாரதியும் மேலதிக விசாரணைகளுக்காக பமுனுகம பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# கொழும்பில் விசேட போக்குவரத்து ஏற்பாடு

பொதுநலவாய அரச தலைவர்களது மாநாட்டை முன்னிட்டு கொழும்பு நகரப்பகுதியில் விசேட போக்குவ ரத்து நடை முறைப்படுத்தப்படவுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பல கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளபோதும் இறுதி தீர்மானம் குறித்து இதுவரையில் முடிவு எட்டப்படவில்லை என பொலிஸார் கூறினர்.

எதிர்வரும் 15ஆம் திகதி முதல் 17ஆம் திகதிவரை பொதுநலவாய அரச தலைவர்களது மாநாடு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஜனநாயக ரீதியான தமிழர் உரிமைகளை பறிக்காதிருக்க மனம் கொள்வது எப்போது?

இலங்கையில் நடத்தப்பட்டதாகக் கருதப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள் குறித்து, அனைத்துலக மட்டத்தில் சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று பிரிட்டனின் எதிர்க்கட்சித் தலைவர் மில்லிபான்ட் வலியுறுத்தி உள்ளார்.

பிரிட்டன் தமிழர் பேரவைக்கும் மில்லிபான்டுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக் களின் பின்னர் அவர் இந்தக் கருத்தை வெளியிட் டுள்ளார்.

பொதுநலவாய நாடுகளின் உச்சிமாநாடு இம்மாத மத்தியில் இலங்கையில் நடை பெறவுள்ள சந்தர்ப்பத்தில், பிரிட்டனின் எதிர்க் கட்சித் தலைவர் மேற்கண்ட கருத்தை வெளியிட் டிருப்பது, அனைத்துலக நாடுகளின் கவனத்தை பெரியளவில் ஈர்க்கும் எனக் கொள்ளலாம்.

அது மட்டுமன்றி பொதுநலவாய மாநாட்டில் பங்குபற்றும் ஐம்பதுக்கும் அதிகமான நாடுகளின் கவனத்தை, பிரிட்டனின் எதிர்க்கட்சித் தலைவரின் கருத்து ஈர்க்கும் என்றும் நம்பலாம்.

இலங்கையின் வட பகுதியில் நடைபெற்ற இறுதிப் போரின் போது, அனைத்துலக மனித உரிமைகள் சட்டங்கள் மீறப் பட்டன என்ற குற்றச்சாட்டு கடந்த சுமார் நான்கு ஆண்டு களாகப் பல தரப்புகளாலும் முன்னிலைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அதே வரிசையில் ஐக்கிய நாடுகள் சபையும் மர்சுகி தருஸ்மன் அறிக்கை மூலம் போர்க் குற்ற விசாரணைக்கான சர்வதேச சுயாதீன பொறிமுறை ஒன்றின் தேவையை வலியுறுத்தி இருந்தது. எனினும் அதனை நாடிய செயற்பாடு எதுவும் இன்னும் வெளிப்பட்டதாக இல்லை.

இதேவேளை, இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பான சுதந்திரமான சர்வதேச விசாரணைக்கு பிரிட்டன் ஆதரவளிப்பதாகத் தெரிவிக்க வேண்டும் என, பிரிட்டனின் மூன்று முக்கிய கட்சிகளைச் சேர்ந்த நாற்பத்தொரு நாடாளு மன்ற உறுப்பினர்கள் கைச்சாத்திட்டு கடிதம் ஒன்றை பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூனிடம் கையளித்திருந்தமை ஞாபகத் தில் கொள்ளத்தக்கதாகும்.

அதேபோன்று இலங்கை மீதான போர்க் குற்றச்சாட்டை ஆராய்வதற்குச் சுயாதீனமான குழுவை அமைக்க வேண் டும் என்று அமெரிக்க செனட்சபையில் இரண்டு ஆண்டு களுக்கு முன்னர் தீர்மானம் நிறைவேற்றப்பட் டிருந்தது.

அந்நாட்டின் பென்சில்வேனியா மாநில செனட்டர் றொபேர்ட் கெசேஸ் இத் தீர்மானத்தை முன்மொழிந்திருந்தார்.

மேலும், இலங்கை தொடர்பில் முழுமையான வினைத் திறனான கொள்கை ஒன்றை உருவாக்குவதற்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தலையிட வேண்டும் என்று அந்தத் தீர்மானம் வலியுறுத்தியிருந்தது.

எனினும், போர்க் குற்ற விசாரணையை சுயாதீனமாக நடத்த வேண்டும் என்பதனை வலியுறுத்தும் வகையில்–

தமிழீழத் தொலைக்காட்சியின் செய்தி வாசிப்பாளரான இசைப்பிரியா–

போரின் இறுதிக் கட்டத்தில் இராணுவத்தினரால் உயி ருடன் பிடிக்கப்பட்டுக் கோரமாகக் கொலை செய்யப்பட்டார்– என்பதனைச் சனல்–4 தொலைக்காட்சி இம்மாதம் முதலாம் திகதி காட்சிப்படுத்தி இருந்தது.

அதனால், அது குறித்து அனைத்துலக விசாரணை தேவை என்று இந்தியாவிலிருந்து, மத்திய அரசின் அமைச்சர் ப.சிதம்பரம் மிக விரைந்து குரல் கொடுத்துள்ளார்.

இலங்கை அரசாங்கம், அனைத்துலக மனித உரிமைச் சட்டங்களை மீறியுள்ளது. அதற்கான போதிய ஆதாரம் உள் ளது. இலங்கை அரசாங்கம் விசாரணைகளை எதிர் கொண்டே ஆக வேண்டும்– என்றும் அவர் வலியுறுத்தி உள்ளார்.

இது விவகாரத்தில் இலங்கை அரசும், அனைத்துலக அரசுகளும் எவ்வாறு செயற்படப் போகின்றன என்பது உடனடியாகத் திட்டவட்டமாகத் தெரிய வரமாட்டாது.

இலங்கையில், தமிழ் மக்களின் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக உரிமைகள் போர் முடிவுற்ற பின்னரும் மறுக்கப்படுகின்றன. குறிப்பாக வடக்கில் மக்களின் காணிகள் இராணுவத்தினரால் பறிக்கப்படுவது, அரசால் சுவீக ரிக்கப்படுவதான போர்வையில் பெரும்பான்மை இன மக்களைத் திட்டமிட்டுக் குடியேற்றுவது போன்ற செயற் பாடுகள் வேகவேகமாக நடத்தப்படுகின்றன.

ஆட்சியும் அதிகாரமும் தனது வசமே இருப்பதனால், தமிழ் மக்களின் வாழ்வுரிமை உட்பட ஜனநாயக ரீதியான உரிமைகளைப் பறிக்காதிருக்க அரசு மனம் கொள்ளக் கூடாதா?

அடிக்கு மேல் அடி அடித்தாலும் அம்மி நகரவே மாட்டாது என்ற புதிய போக்கின் விளைவு என்னவாகுமோ...? காலம் பொறுமை காத்தே எதிர்விளைவைத் தரும் என்று நம்பலாம்......

# சூதாட்ட நிறுவனங்கள் அரசின் தடுமாற்ற நிலை

சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து
கோகுலன்

- எதிர்ப்புக்களை சமாளிக்க புதிய நிலைப்பாடு
- வடக்கில் கரும்பு காணித் தோட்டங்கள் திட்டம்
- அடுத்த ஆண்டில் பொதுத் தேர்தல்?
- பங்காளிக் கட்சிகளை தனித்துப் போட்டியிட சொல்கிறார் ஜனாதிபதி

இரண்டு வெளிநாட்டு சூதாட்ட (கசினோ) நிறுவனங்களை இலங்கையில் செயற்பட அனுமதிப்பது தொடர்பான கொள்கை விடயத்தில் -தற்காலிகமாகவேனும் அரசு பின்னோக்கி நகர்ந்திருப்பது புலனாகின்றது. இந்த இரு நிறுவனங்களும் வரிச் சலுகைகள் அடங்கலாக எண்ணிறந்த வசதிகளுடன் கேந்திர தொழில் நிறுவனங்கள் என்ற மகுடங்களுடன் செயற்பட அனுமதிக்கப்பட விருந்தன.

இந்த விடயம் தொடர்பாக கடந்த வாரம் வியாழக்கிழமை ஒரு முடிவெடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் அமைச்சரவையில் இந்த விடயம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. அதற்கு முந்திய வாரம் நடைபெற்ற கூட்டத்தில் இந்த விடயம் நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டதின் பின்னர் இந்த விடயம் வர்த்தமானி அறிவித்தல் வரைவில் மேலும் சில திருத்தங்களைச் செய்வது, இரண்டு சூதாட்ட நிறுவனங்களுக்கும் உயர்ந்த மட்டத்தில் வரிகள் விதிப்பது போன்றவை விவாதிக்கப்படவிருந்தன. வருமானத்தில் 40 வீதத்துக்கு பதிலாக தொழில் நடப்பதற்கு ஏற்ப வரி விதிப்பது பற்றியும் திருத்தங்கள் செய்வது பற்றி ஆலோசிக்கப் படவிருந்தது. இதைவிட ஒரு சில கட்டுப்பாடுகளைத் தவிர ஏனைய சலுகைகள் யாவும் அப்படியே தொடர்வதாகவே இருந்தது.

கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஜாதிக ஹெல உறுமய மற்றும் சில கட்சிகள் கடுமையாக இந்தத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தமையால் ஜனாதிபதி ராஜபக்ஷ ஐக்கிய மக்கள் சுதந்திரக் முன்னணியின் பங்காளி கட்சித் தலைவர்களின் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்ததுடன் அதன் பின்னர் அமைச்சரவையில் விவாதிக்கலாம் என்றும் தெரிவித்திருந்தார். எனவேதான் வர்த்தமானி அறிவித்தல்களை ஒக்ரோபர் 23, 24 ஆகிய திகதிகளில் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு தாக்கல் செய்வது பிற்போடப்பட்டுவிட்டது.

### அடுத்த வருடம் பொதுத் தேர்தல்?

அடுத்த வருடம், ஒன்றில் ஜனாதிபதி பதவிக்கான தேர்தல் அல்லது நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தலுக்கு ஆயத்தமாகும்படி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவினரிடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த வியாழக்கிழமை இரவு தெரிவித்திருக்கிறார்.

இந்த முறை பொதுத் தேர்தலில் இளம் சந்ததியினருக்கு ஏனையவர்களுடன் கட்சியின் சார்பில் போட்டியிட அனுமதிக்கப் போவதாக அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் அரசில் இணைந்துள்ள முஸ்லிம் மற்றும் தமிழ்க் கட்சிகளை தங்கள் தங்கள் வேட்பாளர்களை நிறுத்தி போட்டியிடுமாறு கேட்பதற்கும் யோசித்திருப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். அவ்வாறாயின் சிறிலங்கா சுதந்திரக்கட்சி விரிவான அடிப்படையில் தேர்தலில் போட்டியிடவிருப்பதாகக் கருதலாம். அந்த நிலைமையில் ஜாதிக ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி ஆகியவற்றின் நிலைமைகள் மட்டுமன்றி இடதுசாரி கட்சிகளின் நிலைமைகளும் என்னவாகும் என்பது தெளிவாகத் தெரியவில்லை. தென் மற்றும் மேல் மாகாண சபைத் தேர்தல்களையும் அதே நாளில் நடத்துவது தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது. இவைகளுக்கான தேர்தல் அடுத்த வருடம் முற்பகுதியில் பெரும்பாலும் நடத்தப்படலாம் என்பது தெரிகின்றது.

யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி கிளையொன்று திறக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி விருப்பம் தெரிவித்தார். கட்சியின் பொறி அமைப்பு வடக்கில் பலப்படுத்தப்பட வேண்டும். அதற்காக அதிகமான அமைப்பாளர்களும் நியமிக்கப்பட வேண்டும். இந்தப் பணிகள் டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன் நிறைவெய்த வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

வடக்கில் அடுத்த வருடம் பெரிய அளவில் விவசாய பணிகளை ஆரம்பிக்கலாம் என அரசு தீர்மானித்துள்ளது. அதில் ஒன்றுதான் விரிவான அடிப்படையில் கரும்புச் செய்கைத் திட்டம் ஒன்றை ஆரம்பிப்பது. இதற்காக வடக்கில் எந்த வகையிலும் பயன்படுத்தப்படாமல் இருந்துவரும் நிலங்களை முழுவதும் அரச துறை நிறுவனமான இலங்கை சீனி உற்பத்தி நிறுவனத்தின் பொறுப்பில் ஒப்படைப்பது. இது அநேகமாக வவுனியாவில் அமையும். மற்றையது கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களில் ஆரம்பிக்கப்படவிருக்கும் விஸ்தாரமான மரமுந்திரிகை தோட்டச் செய்கையாகும். அடுத்த வருடம் விவசாயிகள் வசமிருக்கும் சுமார் 10 ஆயிரம் ஏக்கர் நிலம் மரமுந்திரிகை செய்கைக்குட்படுத்தப்படும். இதற்கு உதவிகளும் இதர உள்ளீடுகளும் வழங்கப்படும் என்று தெரிகின்றது.

ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்ற பொதுத் தேர்தல்களை எதிர்நோக்குவதாயின் அரசு குறைந்த பட்சம் சில முக்கிய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஈடுபடவேண்டும். அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதியானவர் நான்கு வருட காலம் பதவியிலிருந்த பின் புதிய தேர்தல் ஒன்றில் போட்டியிடலாம். 2010- ஜனவரி 10 ஆம் திகதி ராஜபக்ஷ இரண்டாம் முறையும் பதவியிலிருக்கத் தெரிவு செய்யப்பட்டார். ஆனால் 2010 நவம்பர் 19 ஆம் திகதிதான் அவர் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். இந்த இரண்டில் எந்தத் திகதியிலிருந்து 4 ஆண்டுகள் கணக் கிடப்படும் என்பது தெரியவில்லை. அது ஒரு கேள்விக் குறியாகவே இருக்கும். எதுவானாலும் அவர் உயர் நீதி மன்றத்தின் தீர்வு ஒன்றை நாடக்கூடிய வசதியிருக்கின்றது. நாடாளுமன்றத்தைப் பொறுத்தவரை தற்போதுள்ள உறுப்பினர்களில் அநேகரும் 2010 ஏப்ரலில் தெரிவு செய்யப்பட்டவர்கள். 2015 ஏப்ரல் வரை பதவியில் நீடிக்க வாய்ப்பிருக்கிறது. அப்படியென்றால் தான் அவர்களுக்கு 'பென்ஷன்' கிடைக்க வாய்ப்பிருக்கும். முன்கூட்டியே தேர்தல் வருமானால் இவர்கள் 'பென்ஷன்' பெறும் வாய்ப்பை இழந்து விடுவார்கள். எதுவானாலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசானது தேர்தல் முனைப்புடனேயே இருப்பதாகத் தெரி கின்றது. நவம்பர் 21 ஆம் திகதி மக்கள் நலன் சார்ந்த வரவு -செலவுத் திட்டம் ஒன்று சமர்ப்பிக்கப்படவிருப்பதாகத் தெரிகின்றது.

### பொதுக் கூட்டுத் தாபனங்கள், நிறுவன ஊழியர்களுக்கு 'போனஸ்'

அரசின் கீழ் முழுமையாக இயங்குகின்ற கூட்டுத் தாபனங்கள் மற்றும் நிறுவனங்களின் ஊழியர்களுக்கான புதிய 'போனஸ்' திட்ட மொன்றுக்கு ஜனாதிபதி ஏற்கெனவே அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார். இது நிரந்தர திட்டம் ஒன்று தீட்டப்படுவது வரைக்குமானதாகும். அமைச்சர்களின் செயலாளர்கள் அரசின் கீழ் வரும் கூட்டுத் தாபனங்கள் மற்றும் நிறுவனங்களுக்குத் திறைசேரியின் செயலாளர் பி.பி.ஜயசுந்தரவினால் அனுப்பப்படவிருக்கும் ஒரு சுற்று அறிக்கையில் இந்த போனஸ் வழங்கல் தொடர்பான வழிகாட்டல்கள் இடம்பெற்றிருக்கும் கூட்டு ஒப்பந்தங்களின் கீழ் சம்பளங்களும் ஏனைய படிகளும் வழங்கிவரும் நிறுவனங்களுக்கு இது பொருந்தாது என்று தெரிகின்றது.

சூதாட்ட நிறுவனங்கள் தொடர்பான பிரச்சினையில் எழுந்துள்ள சிக்கலானது முக்கியமான பிரச்சினைகள் எழும்போது அரச தரப்புக்கு தெளிவான உபாயம் ஒன்று இல்லாமல் போவதை எடுத்துக்காட்டுவதாய் உள்ளது. முதலில் முதலீட்டு முன்னேற்றம் தொடர்பான அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா, கசினோக்கள் எதுவும் இருக்கப்போவதில்லையென்று கூறி கெட்டித்தனமாக மறைக்கப் பார்த்தார். பிறகு புதிய உரிமம் எதுவும் வழங்கப்படமாட்டாது என்றார். பின்னர் இரண்டு நிறுவனங்களுக்கு மூலாதார நிறுவனங்களுக்கான அந்தஸ்து வழங்கும் வர்த்தமானி அறிவித்தல்களை உருவாக்கினார். அரசின் அவசரப் போக்கு இதில் வெளிப்பட்டது. அமைச்சரின் சகாவான விமல் வீரவன்ச கூறுகையில் ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸ காலத்திலிருந்து இலங்கையில் கசினோக்கள் செயற்படுகின்றன -என்றார். அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறுகிறார்; ஏற்கெனவே நான்கு கசினோக்கள் இயங்கி வருகின்றனவென்று.

13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் பொலிஸ் அதிகாரம் காணி அதிகாரங்களை அகற்றுவதற்கு அவசர சட்ட வரைவு ஒன்றை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்தது. பின்னர் அதனைக் கைவிட்டது. கடந்த வாரம் ஆஸ்திரேலிய ஊடகங்கள் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதாக கடுமையாகச் சாடியிருந்தன. கருத்தரங் கொன்றில் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த இரண்டு ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டமையால் அங்கு அதிகாரிகள் புகுந்து நடவடிக்கையில் ஈடுபட்டது தொடர்பானது இந்தக் கண்டனம்.

அவர்கள் உல்லாச பயண விஸாவில் வந்தவர்கள் அதனால் கருத்தரங்கில் கலந்து கொள்ள முடியாது என்று கூறப்பட்டது. இலங்கைக்கு வருபவர்களுக்கு மாநாட்டுக்கு வருவதற்கான விஸா ஒன்றும் கிடை யாது. சிலருக்கு வர்த்தகத்தில் ஈடுபடக் கூடாது என்ற வகையில் உல்லாச பயண விஸா வழங்கப்படுகின்றது. வர்த்தக விஸா வித்தியாசமானது. ஆனால் கருத்தரங்கு அல்லது மாநாட்டுக்கு என்று வீசா கிடையாது. பொதுநலவாய மாநாடு நடைபெறவிருக்கும் தறுவாயில் இது நடந்துள்ளது. அரசு அவசியமில்லாமல் தன் காலில் தானே சுட்டுக் கொண்டு அவதிப்படுவதாகத் தெரிகிறது.

# சிரித்து வாழ வேண்டும்

சி. ற்குணலிங்கம்,
நெல்லியடி.



எப்போதுமே மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என நாம் விரும்புகின்றோம். ஆனால் ஏனோ இது சாத்தியமாவது குறைவு. ஏதோவொரு கவலை எமது மனதில் புகுந்து மகிழ்வை கட்டுப்படுத்துகின்றது. மகிழ்ச்சி என்பது மனம் சார்ந்த விடயமாகும். எனவே மனதை அமைதியாகவும் நிம்மதியாகவும் வைத்திருக்க வேண்டும். இதற்கு வாழ்வின் அடையாளங்களாக மூன்று விடயங்கள் ஒழுங்காக இருக்கவேண்டும். ஒன்று பசித்தவுடன் உண்பது மற்றதுபடுத்தவுடன் உறங்குவது. இறுதியாக சிரிப்பால் மனதை மகிழ்வாக வைத்திருத்தல்.

மனிதனுக்கு வாழ்க்கையில் எத்தனையோ பிரச்சினைகள். அதன் விளைவாக மன இறுக்கம், மன அழுத்தம், மனக்கவலை, துக்கம், மன அமைதியற்ற நிலை, வாழ்க்கையில் வெறுப்பு, எதற்கெடுத்தாலும் கோபம், எரிச்சல், வெறுப்பு இவைகளை அடைவதால் அவர்களது சக்திகள் அனைத்தும் இழக்கப்படுகின்றன. அத்துடன் வாழ்வில் ஒரு பிடிப்பு இல்லாது போகின்றது. இவற்றிலிருந்து விடுபட்டு புத்துணர்ச்சி பெற ஆரோக்கியமான வழிகளில் ஒன்று சிரிப்பு ஆகும்.

### சிரிப்பு சோகத்தை ஆற்றும் கருவி

21 ஆம் நூற்றாண்டு உலகை எதிர்கொள்ளவும், மனதை உற்சாகத்தோடு வைத்திருக்கவும், மன இறுக்கத்தை குறைத்துக் கொள்ளவும், சுவையான வாழ்வை வாழவும், ஆனந்தமான மனோபாவத்தோடு மகிழ்வாக சுமையில்லாத வாழ்வு வாழ எப்போதுமே சிரித்து வாழ வேண்டும். சிலவேளைகளில் உங்கள் சிரிப்பால் யாரோ ஒருவரின் சோகதினத்தையே வேறுவிதமாக மாற்றி விடலாம்.

மனதுக்கு இதமளிக்கும் சிரிப்பு ஒருவரின் வாயிலிருந்து எம்மை நோக்கி வெளி வருமாயின் எம்மை சூழ்ந்திருக்கும் கவலைகள், துன்பங்கள் என்பவற்றிலிருந்து விடுபடுவதற்கு சிரிப்பு ஒன்றே போதும். மருத்துவ வகைகள், விலையுயர்ந்த பொருள்கள், பணம் என்பனவற்றால் கிடைக்காத மனச் சமநிலையை எமக்கு இத்தகைய சிரிப்பு வழங்கக் கூடிய வல்லமை கொண்டது.

இன்றைய சூழ்நிலையில் அனைவருமே ஏதோவொரு விதத்தில் பாதிக்கப்பட்டவர்களாகவே இருக்கின்றனர். பொருளதாரக் கஷ்டம், அதிகரித்துவரும் குற்றச் செயல்களால் ஏற்படும் பயம், பிள்ளைகளை ஒழுங்காக வளர்க்க வேண்டுமே என்ற ஏக்கம், பணி புரியும் இடங்களில் ஏற்படும் நெருக்கடிகள், கணவன் - மனைவிக்கிடையில் ஏற்படும் பிணக்குகள் இவ்வாறு பல காரணிகள் கவலையை ஏற்படுத்தி மன அமைதியை தொலைத்து விட்ட இவ்வேளையில் மகிழ்வான சிரிப்பே மனதுக்கு ஆறுதலையும் அமைதியையும் தருகின்றது. எனவே சிரிப்பை நாடத்தான் வேண்டும். "துன்பம் வரும்போது சிரிக்கப் பழகவேண்டும் என" வள்ளுவர் சும்மாவா சொன்னார்.

உள்ளத்துக்கு உற்சாகம், உடலுக்கு விறுவிறுப்பு உடனடியாக சிரிப்பால் கிடைக்கின்றது. வாய் விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும் என்பதில் எந்த பொய்மையும் இல்லை.

### சிரிப்பதால் நோய்விட்டுப் போகின்றது

சிரிப்பு மூளையை சிறப்பாக ஆரோக்கிய வாழ்வினை நோக்கி நகர்த்த உதவும். சிரிப்பதும் ஒரு யோகக்கலை. இதனால் சுகாதாரத் துறையின் செலவீனமும் குறைகின்றது. சிரிப்பு சமூகத்துடனான ஒரு தொடர்புக் காரணி. சகித்துக் கொள்ளும் திறமை வளரவும் உணவு சமிபாடடைதல் மேலோங்க வும் சிரிப்பு அவசியம். சிரிப்பு சில நிமிடங்கள் தொடர வேண்டும். அதுதான் முழுப் பயனையும் தரும்.

சிரிப்பு எந்தப் பிரச்சினையையும் நேராக்கும் வளைகோடு என்பார்கள். ஒரு நொடிப்பொழுதில் உள்ளத்தில் எழும் மகிழ்வுணர்வு சிரிப்பாக வெளிப்படுகின்றது. சிரிப்பு நமது உள்ளத்தையும், உடலையும் இணைத்து மூளைக்கு தகவல்களை அனுப்பி எம்மை சஞ்சலமற்ற மனதுடன் மகிழ்வாக இருக்க வழி செய்கின்றது. நாம் சிரித்தால் எம்மைப் பார்த்து உலகம் சிரிக்கும் என்பார்கள். நாம் சிரிக்கும்போது மனத்தளர்ச்சியை ஏற்படுத்தும் ஓமோன்களின் உற்பத்தியைக் குறைக்கின்றது.

வாழ்க்கையை எதிர்கொள்வதற்கு நாம் சிரிக்க வேண்டும். இல்லையேல் அது மிகக் கடினமாக்கி விடும். எமது ஆயுள் காலத்தை அதிகரிக்கச் செய்யவும் சிரிப்பு வழிவகுக்கின்றது. அத்துடன் சுவாசத்தையும் இரத்த ஓட்டத்தையும் அதிகரிக்கச் செய்து உடலில் பிராண வாயுவின் செறி வைக் கூட்டுகின்றது. முகம் கோணும் போதும், கோபப்படும் போதும், முகம் சுளிக்கும் போதும் 72 தசைநார்கள் வேலை செய்கின்றன. ஆனால் சிரிப்பால் முகம் மலரும் போது 14 தசைநார்களுக்குத்தான் வேலையைக் கொடுக்கிறோம். மனம் விட்டு சிரிக்கும் போது தெளிவு பிறக்கும். உற்சாகமும் வெளிப்படும். சிரிக்கும்போது நுரையீரல்கள் விரிந்து சுருங்குவதுடன் ஒழுங்காக மூச்சுவிடக் கூடிய நிலை ஏற்படும். இரத்தக் குழாய்களும் விரிவடைக்கின்றன. எனவே சிரிப்பு உடல் ஆரோக்கியத்துக்கு இலவசமான மருந்தாகும்.

### சிறு புன்னகை போதும்

சிறு புன்னகைதான் பெரும் சிரிப்பை வரவழைக்கும். புன்னகை இல்லாமல் சிரிப்பு இல்லை. சிரிப்பின் உற்சாகத்துடன் உழைப்பவர்கள் மற்றவர்களை விட ஏழு ஆண்டுகள் இளமையுடன் இருப்பார்கள் என ஆய்வு உரைக்கின்றது. எமது சிரிப்பு பிறருடைய கவனத்தை இழுக்கும் திறனுள்ளதாக அமையும். இதனால் சிரித்து வாழ்பவர்களுக்கு நண்பர்களும் அதிகமாகக் காணப்படுவர். அது முன் பின் தெரியாதவர்களையும் அது மட்டுமா எதிரியைக் கூட நண்பர்களாக்கும் பாச வலையாகும்.

சிரிக்கும் போது எம்மிடையேயுள்ள கருத்து வேறுபாடுகள், அவநம்பிக்கைகள், பொறாமை, எதிர்ப்புணர்வு என்பன மறைந்து மனமானது பூரிப்படைகிறது. பகைமை யைப் போக்கி ஒத்துணர்வை ஏற்படுத்த வழி சமைக்கின்றது. நாம் எந்தக் கருமத்தைச் செய்யும் போதும் சிரித்த முகமலர்வுடன் செய்தால் அந்தக் கருமமும் எளிதில் கைகூடும். விலையில்லாச் சிரிப்பால் விளையும் பயன்களோ விலைமதிப் பற்றவை. எனவே சிரித்து வாழ வேண்டும். பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே.

# நம்பிக்கையை இழக்காதீர்கள்!

விஜிதன்

உடல் ரீதியான, பாலுணர்வு ரீதியான துன்புறுத்தல்கள், வன்முறை, பொருளாதார ரீதியாக பாதுகாப்பற்ற நிலை, குறைந்த அந்தஸ்தில் இருப்பதை எண்ணி வருந்துதல், மற்றவர்களைப் பாதுகாப்பாக கவனித்துக் கொள்ள வேண்டுமே என்ற தொடர் பொறுப்பு ஆகியவற்றால்அநேகருக்குமனஅழுத்தம் ஏற்படுகிறது. சோகமான எண்ணங்கள், தினமும் ஒரு முறை யாவது, அனைவருக்கும் எழுவதும், அடங்குவதும் இயற்கையே. ஆனால், ஒரு சோக நினைவு, தொடர்ந்து, இரண்டு வாரங்களுக்கு மேல் ஒருவர் மனதை ஆக்கிரமிக்கும்போதோ, அன்றாட வேலைகளில் தடையை ஏற்படுத்தும்போதோ, அந்த நிலை தான், மன அழுத்தம் என்றழைக்கப்படுகிறது.


பிரியமான நடவடிக்கைகளில் நாட்டம் இல்லாமல் இருப்பது, சோர்வு, சுறுசுறுப்பின்மை, தூக்கமின்மை, கவனத் தடுமாற்றம், முடிவு எடுப்பதில் குழப்பம், பசியின்மை அல்லது அளவுக்கு அதிகமாக உண்பது. எந்தக் காரணமும் இன்றி, உடலில் எங்காவது வலி தோன்றுவது, எதிர் மறையான நிகழ்வுகளைத் தான் இனி சந்திக்கப் போகிறோம் என்ற எண்ணம் ஆகியவை, மன அழுத் தத்துக்கான அறிகுறிகள். தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் தோன்றும்; அதற்கான நடவடிக்கைகளில் இறங்க வேண்டும் என்று தோன்றும். பெண்களிடையே மன அழுத்தம் சர்வ சாதாரணமாகக் காணப்படுகிறது.மன ஓட்டங்களை கட்டுப்படுத்த திணறும்போது... நம்பகமான, அக்கறை கொண்ட நண்பர் களிடம், மனக் குறைகளைப் பகிர்ந்து கொள்ளலாம்.

### மனதை இதமாக வைத்திருக்க வேண்டும்

உடல் ரீதியான, பாலுணர்வு ரீதியான துன்புறுத்தல்கள், பொருளாதார ரீதியாக பாதுகாப்பற்ற நிலை, குறைந்த அந்தஸ்தில் இருப்பதை எண்ணி வருந்துதல், மற்றவர்களைப் பாதுகாப்பாக கவனித்துக் கொள்ள வேண்டுமே என்ற தொடர் பொறுப்பு ஆகியவை அழுத்தங்கள் ஏற்படக் காரணங்களாக அமைகின்றன. உங்கள் மனதை சாந்தப்படுத் தும் இசை, தோட்டப் பராமரிப்பு, நல்ல புத்தகங்கள் படிப்பது, மனதுக்குப் பிடித்த உணவு உண்பது. உங்கள் மீதான நம்பிக்கையை இழக்காமல் இருப்பது. யோகா, தியானம் இவற்றை நாள் தவறாமல் செய்து வரவேண்டும். மேற்சொன்ன நடவடிக்கைகள், உங்கள் மனதை இதப்படுத்தி, மன அழுத்தத்திலிருந்து வெளிவர உதவும்.

### மாத்திரையை தவிருங்கள்

உங் களுக்கு மன அழுத்தம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிந்தால், அதைத் தீர்க்க, நீங்கள் முழுமுயற்சியில் இறங்கவேண்டும். மனநல ஆலோசகரிடம் ஆலோசனை பெறும்போது, முதல் கட்டமாக அவர்கள் பிரச்சனையைக் கேட்டுத் தெரிந்து கொள்ள முற்படு வர். இது நல்லது தான் என்றாலும், முன் பின் தெரியாத ஒருவரிடம், உங்கள் மனக் குறையைச் சொல்ல நீங்கள் தயங்கலாம்.



எனவே, மிக மிக நம்பிக்கையான நண்பர் ஒருவரிடம், உங்கள் பிரச்சினையை எடுத்துச் சொல்லுங்கள்; மனதில் உள்ள அனைத்தையும், கொட்டி -விடுங்கள். உங்கள் மீது அன்பு வைத்திருப்பவர், நிச்சயம் இதற்கான தீர்வு சொல்வார்.

மன அழுத்தத்தைத் தீர்க்க, மாத்திரை சாப்பிடுகிறேன் எனச் சொல்வதை விட, தற்காலிக உபாயங்களை நாடுவதை விட, மனதில் உள்ளதைக் கொட்டித் தீர்ப்பதுதான் நல்ல மருந்து.

# 164 குடும்பங்களுக்கு பழமரக் கன்றுகள்

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில்



யாழ்ப்பாணம், நவ.4

நல்லூர் பிரதேச செயலர் பிரிவின் 164 குடும்பங்களுக்கு தேசி, கொய்யா, மாதுளை பழமரக்கன்றுகள் வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வருகின்றன.

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் 200 பேர் தெரிவு செய்யப்பட்டு ஒருவருக்குதலா இரண்டு பழ மரக்கன்றுகள் வழங்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஏற்கனவே முதல் கட்டமாக 36 குடும்பங்களுக்கு பழமரக்கன்றுகள் விநியோகிக்கப்பட் டிருந்தன. (வ-7)

## பெண்களுக்கு எதிரான வன்முறைகள்

# எந்த சந்தர்ப்பத்திலும் பொறுக்கமாட்டோம்

## யாழ்.மாவட்ட பெண்கள் சமாசம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.4

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை நாம் எக்காரணம் கொண்டும் எந்தச் சந்தர்ப்பத்திலும் பொறுக்க முடியாது என யாழ். மாவட்ட பெண்கள் சமாசம் தெரிவித்துள்ளது.

நாச்சிமார் கோயிலடியில் சடலமாக மீட்கப்பட்டுள்ள மார்க்கண்டு லோகராணி மற்றும் ஆவரங்கால் பகுதியில் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட அமிர்தலிங்கம் மைதிலி போன்றோருக்கு நடைபெற்ற கொடூரங்கள், வன்புணர்வுகள் தொடர்பில் விடுத்த கண்டன அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கண்டன அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"அண்மைக் காலமாக பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. இதனை நாம் எந்தக் காரணம் கொண்டும் அனுமதிக்க முடியாது. யாருக்கு என்ன நடந்தது என்பதற்கு அப்பால் இத்தகைய செயல்களுக்கு யாவரையும் பொறுப்புக்கூற வைப்பதே பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிப் பதற்கான வழி. அதற்கு அனைத்து தரப்பினரும் முன்வர வேண்டும். பெண் களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பது அனைவரதும் கடமை"- என்றுள் ளது. (வ-10)

# தென்மராட்சி கலைமன்ற நிர்வாகத் தெரிவுக் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ.4

நிர்வாகத்தினருக்குஇடையே எழுந்த சிக்கல்களினால் கடந்த எட்டு மாதங்களாக இழுபறி நிலையில் காணப்பட்ட தென்மராட்சி கலை மன்றத்துக்கு புதிய நிர்வாகத்தினரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சிவன்கோயில் வீதியில் உள்ள கலைமன்ற மண்டபத்திலேயே குறித்த கூட்டம் நடை பெறவுள்ளது.

கலை மன்றத்தில் அக்கறையும், பொது மக்கள் சேவையில் அர்ப்பணிப்பும், சமுதாய வளர்ச்சியில் ஆர்வமும் உள்ளவர்களை இதில் கலந்து கொள்ளுமாறும் புதிதாக மன்றத்தில் அங்கத்துவம் பெற விரும்புபவர்களும் அன்றைய தினம் வருகை தருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கலை மன்றத்தின் பொறுப்பில் உள்ள கலாசார மண்டபத்தை பொதுமக்களின் பாவனைக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு யாழ்.அரச அதிபருக்கு முறையிட்டதையடுத்து புதிய நிர்வாக சபை தெரிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)



கைதடி பொது நூலகத்தினர் தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு பிரதேசத்தில் இயங்கும் முன்பள்ளிகளில் நடமாடும் நூலக சேவைகளை மேற்கொண்டு வருகின்றனர். முன்பள்ளிச் சிறார்கள் பயன்படுத்தக்கூடிய நூல்கள் காட்சிப்படுத்தப்படுவதுடன் நூல்கள் வாசிப்பு தொடர்பாகவும் சிறார்களுக்கு விளக்கமளிக்கப்பட்டு வருகின்றது.

அண்மையில் கைதடி நவபுரம் நவசக்தி முன்பள்ளியில் இடம்பெற்ற நடமாடும் நூலக சேவையில் சிறார்களுக்கு நூலகர் விளக்கமளித்தார். (வ-9)

# யாழ். இந்துவுக்கு விருது

யாழ்ப்பாணம், நவ.4

தேசிய ஆவணமாக்கல் சபையினால் 2013 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாத வாசிப்பு மாதத்தில் சிறப்பான சேவையாற்றிய பாடசாலைகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் வடமாகாணத்தின் யாழ். மாவட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரிக்கும், கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டு. வின்சென்ட் மகளிர் உயர்தரப் பாடசாலை, திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலை சென். மேரிஸ் கல்லூரி, கிண்ணியா அல் - மினா மகா வித்தியாலயம் ஆகியவற்றுக்கும் விருதுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. (த-14)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நம்பிக்கைக்குரியவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மேலதிகாரி, சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். வியாபாரத்தில் மகிழ்ச்சியுண்டு. மாணவர்களின் எண்ணங்கள் பூர்த்தியாகும்.

**இடபம்**: புதிய முயற்சிகள் வெற்றியடையும். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். பணவரவு உண்டு.

**மிதுனம்**: யதார்த்தமாகப் பேசி அனைவரையும் வியக்க வைப்பதுடன் தடைப்பட்ட காரியங்களையும் விரைந்து முடிப்பீர்கள். வெளியூர்ப் பயணங்கள் திருப்திகரமாக அமையும். மாணவர்களின் நினைவுத்திறன் அதிகரிக்கும்.

**கடகம்** : மனக்குழப்பங்கள் விலகி தெளிவு பிறக்கும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். அயல் வீட்டாரின் அன்புத் தொல்லைகள் விலகும்.

**சிங்கம்**: வெளியூர்ப் பயணங்கள் திருப்திகரமாக இருக்கும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். அலுவலகத்தில் மதிக்கப்படுவீர்கள். வாகனப் பழுது சீராகும். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள்.

**கன்னி**: பிரியமானவர்களைக் கலந்தாலோசித்து முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். அரசியல்வாதிகளின் நட்புக் கிடைக்கும். நீண்டநாளாக நினைத்திருந்த காரியத்தை இப்பொழுது செய்து முடிப்பீர்கள்.

**நாளை**

ஐப்பசி-19 செவ்வாய்க்கிழமை 05.11.2013

திதி: துதியை பி.ப.03.46 வரை

நட்சத்திரம்: அனுசம் மு.இ.10.18 வரை

சுபநேரம்: 10.34 - 12.04 வரை

இராகுகாலம்: 03.04 - 04.34 வரை

**துலாம்**: வேலைப்பளு அதிகரிக்கும். அடுத்தவர்கள் மனசு காயப்படும் படி பேசாதீர்கள். யாரை நம்புவது என்கிற குழப்பத்துக்கு ஆளாவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

**விருச்சிகம்**: விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர்கள், நண்பர்களுடன் மனஸ்தாபங்கள் வந்து நீங்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் விவாதங்கள் ஏற்படும்.

**தனுசு**: தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். வெளியிடங்களில் மதிக்கப்படுவீர்கள். நட்பு வட்டாரம் விரிவடையும். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும்.

**மகரம்**: புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தெளிவான முடிவுகளை எடுத்து அருகிலிருப்பவர்களை அசத்துவீர்கள். வெளியிடங்களில் மதிப்பு, மரியாதை கூடும்.

**கும்பம்**: அரச காரியங்களில் வெற்றியுண்டு. நல்லவர்களின் நட்புக் கிடைக்கும். வியாபாரத்தில் போட்டிகளை முறியடிப்பீர்கள். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்துவிட்டு சேமிக்கத் தொடங்குவீர்கள். பயணங்கள் மகிழ்ச்சியைத் தரும்.

**மீனம்**: செலவுகளைக் குறைக்க முடியாமல் திணறுவீர்கள். அவசரப்பட்டு அடுத்தவர்களை விமர்சிக்க வேண்டாம். உதவி கேட்டு தொந்தரவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் அளவாகப் பழகுங்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | | 9 | | | | |
| | 9 | 5 | | | 7 | 2 | 3 | |
| 8 | | 4 | | 3 | 2 | 6 | 9 | 5 |
| | 3 | | | 4 | | | | |
| 9 | | | 6 | | 3 | | | 8 |
| | | | | 2 | | | 6 | |
| 2 | 6 | 7 | 3 | 5 | | 1 | | 9 |
| | 4 | 9 | 2 | | | 7 | 5 | |
| | | | | 7 | | | | 2 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 2 | 3 | 4 | 9 | 5 | 8 | 1 | 7 |
| 1 | 9 | 5 | 8 | 6 | 7 | 2 | 3 | 4 |
| 8 | 7 | 4 | 1 | 3 | 2 | 6 | 9 | 5 |
| 7 | 3 | 6 | 5 | 4 | 8 | 9 | 2 | 1 |
| 9 | 5 | 2 | 6 | 1 | 3 | 4 | 7 | 8 |
| 4 | 1 | 8 | 7 | 2 | 9 | 5 | 6 | 3 |
| 2 | 6 | 7 | 3 | 5 | 4 | 1 | 8 | 9 |
| 3 | 4 | 9 | 2 | 8 | 1 | 7 | 5 | 6 |
| 5 | 8 | 1 | 9 | 7 | 6 | 3 | 4 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# அன்பான அன்னை



சு.சாரங்கி

பெற்றோராக இருப்பவர்கள், தாங்கள் குழந்தைக்கு மிகவும் பிடித்தவாறு இருப்பதற்கு, புத்தகங்கள் பலவற்றை படித்து தெரிந்து கொண்டு, அதற்கேற்றாற் போல் தங்கள் குழந் தைகளிடம் நடந்து கொள்வார்கள். குறிப்பாக அப்பாக்களை விட, சில மாறுபட்ட சவால்களை அம்மாக்களே எதிர்கொள்கின்றனர்.

அந்தச் சவால்களை எப்படி எதிர் கொள்வது , குழந்தைகளை எப்படி நன் றாக வளர்ப்பது என்பது பற்றிய சில குறிப்புகள்-

தாயாக இருப்பது சில நேரங்களில் சற்று சவாலானதாகவே இருக்கும். அதனால் எப்போதும் அமைதியாகவும் பொறுமையாகவும் இருக்க முயற்சி செய்யுங்கள். உங்கள் பிள்ளைகள் ஏதாவது குறும்பு செய் தால், அதை ஏன் செய்யக் கூடாது என் பதற்கான காரணத்தைப் பொறுமை யாக எடுத்துச் சொல்லி அவர்க ளுக்குப் புரிய வையுங் கள்.

உங்கள் குழந்தைகளின் விருப் பங்களில் கவனம் செலுத்துங்கள். உங்கள் குழந்தைக்கு இசையில் விருப்பமிருந்தால், பிள்ளைக்காக ஏதே னும் ஓர் இசைக்கருவியை வாங்கிக் கொடுத்து, அவர்கள் வாசிப்பதை கவ னியுங்கள். குழந்தை கோபமாக இருந் தால், அப்போது அவர்களிடம் மனம் விட்டு பேசி, அவர்களுக்கு ஒரு நல்ல தோழனாகத் தோழியாக இருக்க முயலுங்கள்.

பணவிடயத்தில் மிகவும் கண்டிப் பாக இருங்கள்.

ஒவ்வொரு நாளும் பணத்தைக் கொடுப்பது சரியல்லத் தான். அதற் காக உங்கள் குழந்தை கேட்கும் எந்தவொரு விருப்பத்தையும் உடனே முடியாது என்று நிராகரிக்க வேண் டாம்.

எதைக்கேட்டாலும் முடியாதென்றும், அவர்கள் கேட்கும், எந்த ஒரு பொருளையும் வாங்கிக் கொடுக்காமலும் இருந்தால், பின் அவர்கள் மனதில் உங்கள் மீது இருக்கும் அன்பு குறைய நேரிடும். எனவே அவ்வப்போது வீட்டு நிலைமைகளையும் அவர்களுக்கு எடுத் துச் சொல்லுங்கள். ஏதேனும் விருப்பமானதை வாங்கிக் கொடுக்க முயலுங்கள்.

உங்களை எப்பொழுதும் அவர்களுடன் பேசுவதற்கு ஏற்ற நபராக வைத்துக் கொள்வதில் உறுதியாக இருங்கள். எப்பொழு தும் புரிந்துகொள்ளக் கூடியவராகவும் மற்றும் அவர்கள் பேசுவதை செவிகொடுத்து கேட்பவராகவும் இருப்பதற்கு, உங்களால் முடிந்த வரை கடினமான முயற்சிகளை எடுங்கள்.

அம்மாவிடம் நட்புடன் ஆலோசனை கேட்பதும், வயதுக்கு வருவது பற்றிய சந்தேகங்களை கேட்கவும், வீட்டுவேலைகளில் உதவி செய்யவும், அல்லது சாதார ணமாக அம்மாவை கட்டிப் பிடிப்பதும் அவர்களுக்குத் தெரியும். தங்க ளிடம் பேசுவதற்கு யாரும் இல் லாமலிருந்தால், குழந்தைகள் தனிமையிலேயே இருப்பார்கள். எனவே அவ்வப்போது அவர்களிடம் பேசும் வழக்கத்தைக் கொள்ளவேண்டும்.

குழந்தைகளுக்கு ஆதரவாக இருக்க வேண்டும். உங்கள் குழந்தைக்கு மருத்துவம் படிப்ப திலோ அல்லது மருத்துவராக ஆவ திலோ விருப்பம் இல்லையென்றால், அப்போது கோபப்பட வேண்டாம். உங்கள் பிள்ளையின் எண்ணம் உங்களுடையதிலிருந்து மாறுபடு வதை ஏற்றுக் கொள் ளுங்கள். மேலும் குழந்தையை எப்போதுமே குழந் தையாக எண்ணாமல், அவர்களின் வயதிற்கு ஏற்றவாறு மாறுங்கள். ஏனெனில் அவர்களுடைய வாழ்க் கையில் ஏற்கனவே பெரியளவில் பங்கேற்றிருக்கிறீர்கள். அதனால் அதனையே திரும்பவும் செய்ய வேண்டாமே!


தவறு செய்தால் அதனை ஏற்றுக்கொள்ளுங்கள் மற்றும் மன்னிப்புக் கேட்கப் பயப்படாதீர்கள். இது கடினமாகத்தான் இருக்கும். ஆனால் உங்கள் தவறை நீங்கள் ஒப்புக் கொள்வதும் மன்னிப்பு கேட்பதும் அனைவருக்கும் நன்மையாக இருக் கும்.

நீங்கள் பிடிவாதமாக இல்லாமலிருந்தால் அது மற்றவர்கள் உங்கள் மேல் கோபப்படுவதைத் தடுக்கும். மேலும் குழந்தைகளுக்கு மன்னிப்புப் கேட்பதன் முக்கியத்துவத்தையும் கற்றுக் கொடுங்கள்.

குழந்தை தனது தந்தையை நேசிப்பதற்கு மதிப்பளித்திடுங்கள். உங்கள் குழந்தை, அவர்களது தந்தையை அளவுக்கு அதிகமாக நேசிப்பதைப் பார்த்து மகிழ்சியடையுங்கள்.

இறுதியாக, மற்ற எல்லாவற்றையும் விட உங்கள் குழந்தைகளை அதிகமாக நேசியுங்கள். அவர்களை நேசிக்காமல், உங்கள் வாழ்க்கை யில் நீங்கள் செய்யும் எந்தவொரு செயலும் அர்த்தம் தராது. எந்த நேரத்திலும் குழந்தைகளை நேசித் தால், அவர்களும் மனதில் எக்காலத் திலும் பெற்றோரை மறக்காமல் நேசிப்பார்கள்.

# அன்பினால் அரவணைப்பு



அனுஜன்

அரவணைப்பு என்பது வாழ்க் கைக்கு ஆதாரமானது. ஆதரவளிப் பது. எல்லாவற்றையும் அரவணைத்து ஆலோசனை கூறி, வாழ் வதற்கும், வளர்வதற்கும் என்னவெல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாம் தயங்காமல் செய்யக் கூடியவள் பெண். இப்படிப் பிறருக்கு உதவி செய்து கொண்டு, அந்த உதவி செய் யும் குணத்தையே தான் வாழ்வதற் கும், பயன்படுத்திக் கொள்வதுதான் பெண்ணின் அடிப்படையான சிறப் புக் குணம்.

உதவுவதன் மூலம் உயிர் வாழலாம் என்ற உண்மையை மனித வர லாற்றின் தொடக்க காலத்திலேயே பெண் அறிந்து வைத்திருந்தாள்.

உலகில் நிலைத்து வாழ்வதற்கு, தனது சொந்தக் காலில் நிற்க வேண் டும் என ஆணுக்கு வலி யுறுத்தப்பட்ட தைப் போலவே, பெண்ணுக்கும், உலகில் சுமுகமாக வாழ்வதற்கு இணக்கமாக வும், பிறருக்கு உதவும் நிலை யிலும் இருக்க வேண்டும் என போதிக்கப்பட்டிருக்கிறது.

நல்ல பராமரிப்பாளனாக, நல்ல பாதுகாவலனாக, நல்ல தந்தையாக, நல்ல காதலனாக, நல்ல கணவ னாக இருந்து மேற்கண்ட அனைத் துத் தேவைகளையும் நிறைவு செய்த ஆண்தான் அவளுக்குத் தேவைப் பட்டான். இத்தகைய திறனுள்ள ஆட வனைத் தக்க வைத்துக்கொள்வதற் காக அவளுடைய பராமரிக்கும் திற னும், பரிவும் மிகப் பெரிய ஆயுதங் களாக இருந்தன.

திருமணத்துக்கு முன்பு வரை யாரென்றே தெரியாத ஒருவனுடன் திருமணமாகிப் புகுந்த வீடு செல் லும் போதே, புதிய சூழ்நிலையில், புதிய மனிதர்களோடு தான் இணைந்து போக வேண்டும் என்ற மனப்பக்கு வத்தை வளர்த்துக் கொண்டுதான் பெண் செல்கிறாள்.

கணவனுக்காக எதையும் விட்டுக் கொடுக்கும் நிலையையும், கண வனின் கருத்துக் களோடு ஒத்துப் போகும் பண்பையும் வளர்த்துக் கொள்கிறாள். தான் வேறு, தனது கணவன் வேறு என்ற எண்ணம் அகன்று, தன் கணவனின் விருப் பமே தன் விருப்பம், அவன் நோக் கமே தனது நோக்கம், அவனது லட்சியமே தனது லட்சியம் எனக் கருதி, அவனோடு தன்னை இரண் டற இணைத்துக் கொள்கிறாள்.

தனது கணவன் ஆறுதலாக, மகிழ்ச் சியாக இருப்பதற்கான ஒரு சூழலைப் பெண் உருவாக்கி தனது நிலைப் பாட்டை உறுதி செய்து கொள்கிறாள்.

தனது மென்மையான எண்ணங் களை வெளிப்படுத்த இயலாதவ னாக ஆண் இருந்த போதிலும், குறிப்பால் அவனது எண்ணங்களை அறிந்து கொள்கிறாள். தன்னோடு இருப்பவர்களின் எண்ணங்க ளை யும் குறிப்பால் அறியக் கற்றுக்கொள் கிறாள்.

ஆண் எதைச் செய்தாலும் அதை அன்புடன், காதலுடன் செய்ய வேண்டும் என்று பெண் எதிர்பார்ப் பாள். வாழ்க்கையில் அரவணைப் புக்கு அடுத்து அவள் விரும்புவது அன்பையும், அன்பு செய்யப்படுவ தையும் தான்.

உடல் ரீதியாகவோ, மன ரீதியாகவோ உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வது, செயற்படுவது என ஒவ்வொன் றையும் தனது தாயின் உணர்வின் மூலம் ஒவ்வொரு பெண்ணும் இயல்பாகப் பெறுகிறாள்.

ஆண் குழந்தை தனது தாயிடம் இருந்து விலகிச் செல்வதைப் போல், பெண் குழந்தை செல்வதில்லை. ஒவ்வொரு செயலையும் தாயிடம் இருந்து கற்றுக்கொள்கிறாள்.

வாழ்நாள் முழுவதும் அவளது இந்த இயல்பு ஆணைக் காட்டிலும் பெண்ணுக்கு அதிக பாதுகாப்பை அளிக்கிறது. காதலிக்கவும், காதலிக்கப்படவும் அவளுக்குச் சக்தியை அளிக்கிறது. பிறரை நேசிக்கவும், பரா மரிக்கவும், பாதுகாக்கவும் திறனை அளிப்ப தோடு, ஆண் மகனையும் அவள்பால் கவரச் செய்கிறது.

ஆணின் இதயத்தில் மூடப்பட்ட மென் மையான உணர்வுகளை வெளிப்படுத்திக் காதலுக்கும், நெருக்கத்துக்கும் அவள் காலங்காலமாக ஓர் இணைப்புப் பாலமாக இருந்து வருகிறாள்.

இதனால் உணர்வு ரீதியாக அனைவரை யும் கவரும் வகையில், ஆணை விட பெண் ஒரு படி மேலே போய்விடு கிறாள். ஆண்க ளிடம் இல்லாத பெண்களின் சிறப்புக்குணம் இது.

## அதிபர்களுக்கான கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், நவ.4

யாழ்.கல்விவலயத்துக்கு உட்பட்ட அதிபர்களுக்கு பௌதீக வள ஆய்வு தொடர்பான கூட்டம் ஒன்று இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்.கல்விவலய முகாமைத்துவ சேவைகள் பிரிவு கேட்போர் கூடத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் அதிபர்களை கலந்து கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-7)

## யாருடைய சைக்கிள்?

தென்மராட்சி, ஒக்.4

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் (டச்சு வீதி) அநாதரவாகக் காணப்பட்ட பெண்களுக்கான சைக்கிள் ஒன்று, பாது காப்பு உத்தியோகத்தர்களால் மீட்கப்பட்டு கைத் தொழில் வணிகர் மன்ற அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை கண்டெடுக்கப்பட்ட இந்தச் சைக்கிளைத் தவறவிட்டவர்கள் சாவகச்சேரி தனங்களப்பு வீதியில் உள்ள மன்ற அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு மன்றத் தலைவர் வ. ஸ்ரீ பிரகாஸ் அறிவித்துள்ளார். (ந-9)

## ஜி.சீ.ஈ. சாதாரண தர மாணவருக்கு இன்று மாதிரிப் பரீட்சை

யாழ்ப்பாணம், நவ.4

வடமாகாண கல்வித் திணைக்களத்தினர் எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான மாகாண மட்ட மாதிரிப் பரீட்சையை நடத்தவுள்ளனர்.

இன்று திங்கட்கிழமை தமிழ் மொழிப் பாடத்துடன் ஆரம்பமாகும் பரீட்சைகள் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-9)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், நவ.4

கந்த சஷ்டி விரதத்தை முன்னிட்டு தொடர் சொற்பொழிவு வல்வை தீருவில் வயலூர் முருகன் ஆலயத் தில் இன்று தொடக்கம் மாலை 4.30 மணிக்கு நடை பெறவுள்ளது.

''விரதங்களும் அதன் மகிமைகளும்" எனும் தலைப்பில் தொடர்சொற்பொழிவை பொன் சுகந்தன் ஆற்றவுள்ளார். (எ)

## நினைவலைகள்
### 25ஆம் ஆண்டு முதலாம் ஆண்டு

மண்ணில் 22.02.1912 | விண்ணில் 05.11.1988

மண்ணில் 26.02.1924 | விண்ணில் 05.11.2012



அமரர் **பேதுருப்பிள்ளை ஜேம்ஸ் அமிர்தநாயகம்** [ஆசிரியர், புனித பத்திரிசியார் கல்லூரி]

திருமதி **அலெக்சாந்திரா அமிர்தநாயகம்** [ஆசிரியை, திருக்குடும்ப கன்னியர்மடம்]

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

மண்ணக வாழ்வில் இறைநம்பிக்கையில்
வாழ்ந்து, கல்விச் சுடர் ஏற்றி விசுவாசத்திலும் பாசத்திலும்
இறைபிள்ளைகளை வளர்த்து இன்று இறைபிரசன்னத்தில்
இருக்கும் எம் பெற்றோர்களே! நம்பிக்கையிலும் செபத்திலும்
உங்கள் நினைவுகளோடு வாழ்கின்றோம்.

இவர்களின் ஆன்ம இளைப்பாற்றி திருப்பலிகள் நாளை (05.11.2013) செவ்வாய்க்கிழமை யாழ். அடைக்கல அன்னை ஆலயம் காலை 6 மணி, யாழ் அருள் ஆச்சிரமம் காலை 6 மணி, பண்டத்தரிப்பு தூய அந்தோனியார் ஆலயம் காலை 6 மணி, புலோப்பளை தூய அந்தோனியார் ஆலயம் மாலை 5 மணி ஆகிய இடங்களில் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

(39690) (7.6.3)

பாசமுடன் நினைவு கூரும்

யாழ்ப்பாணம். **பிள்ளைகள், உறவுகள்.**

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 17.08.1975

மறைவு 27.10.2011



அமரர் **ஜோதிலட்சுமி சோமு** (செல்லா)

துடித்தது இதயம் உந்தன் நினைவால்
இரண்டு வருடம் உருண்டோடி விட்டதம்மா!
எத்தனை வருடங்கள் சென்றாலும்
ஆறாதம்மா உன்நினைவு.

கடந்த (27.10.2013) அன்று சிவபதமடைந்த எமது குலவிளக்கு ஜோதிலட்சுமி சோமு அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (04.11.2013) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் தாங்களும் வருகை தந்து நடைபெறும் நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(39967) (7.6.3)

என்றும் உன் பிரிவால் வாடும்

கெல்ஸ்மன் வீதி, சாவகச்சேரி. அப்பா-செ.சோமு

## 31 ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் **சிதம்பரப்பிள்ளை கலாநிதி** (ஆங்கில ஆசிரியர்)

பிறப்பு 02 ★ 01 ★ 1954

இறப்பு 06 ★ 10 ★ 2013


கடந்த 06.10.2013 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவர் சிதம்பரப்பிள்ளை கலாநிதி அவர்களின் வீட்டுக் கிருத்தியம் நாளை (05.11.2013) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நிகழவிருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்வதுடன், அவரின் பிரிவுத்துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(29689) (4.6.3)

செம்பாந்தோட்ட ஒழுங்கை,
முதலாம் கட்டை வீதி,
கிராம்புவில், சாவகச்சேரி.

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்
### கனகரட்ணம் செல்வநாயகம்



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரட்ணம் செல்வநாயகம் கடந்த 01.11.2013 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரட்ணம்-சின்னம்மா தம்பதியரின் இளையமகனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்- கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பூபதியின் அன்புக் கணவரும், கனகரட்ணம்(வெண்புறா பஸ் உரிமையாளர்), தர்மரட்ணம்(கனடா), விஜயரட்ணம் (கனடா), மனோரஞ்சினி (உரும்பிராய்), செல்வரட்ணம் (ஜேர்மனி), கலாரூபி, காலஞ்சென்ற பஞ்சரட்ணம் ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசலட்சுமி (ஊரும்பிராய்), விக்கினேஸ்வரி (கனடா), சாந்தினி (கனடா), துரைசிங்கம் (மின்சாரசபை-சுன்னாகம்), ஜெயந்தி(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான நவபாக்கியம், இராசநாயகம், இராசமணி, நவமணி ஆகியோரின் அன்புச்சகோதரரும், கஜந்தன் (நீதிமன்றம் -மல்லாகம்)- றஜிதா, மதூசியன் (ஜேர்மனி), ஜானு, சோபிதா, கனடாவைச் சேர்ந்தவர்களான பரன்ராஜ், மகிஷா, கிரிஷா, நிதுஷா, ரஷஷா, ஜனுஷன், கௌசிகா- லொயிட்ஸ், கேசவன்(பிரித்தானியா), அம்புஜா-மதிரூபன், ஜேர்மனியைச் சேர்ந்த ஜெனா, ஜெனுஸ், ஜேசன் ஆகியோரின் அன்புப் பேரனும், மிதுன், தனுஸ்கா ஆகி யோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2013) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பலாலி வீதி,
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.

(39721) (3.6.4)

தகவல்: குடும்பத்தினர்.

# விவசாயிகளுக்கான கருத்தரங்கு இன்று

கிளிநொச்சி, நவ.4

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்ட பொதுமக்கள் மற்றும் விவசாயிகளுக்கான நிதிசார் முகாமைத்துவம் தொடர்பான கருத்தரங்குகள் இலங்கை மத்திய வங்கியின் பிராந்திய திணைக்களமும்- பிரதேச அபிவிருத்தி வங்கியும் இணைந்து இரண்டுதினங்களுக்கு நடத்தவுள்ளன.

கிளிநொச்சி கூட்டுறவுத் திணைக்கள மண்டபத்தில் இன்று திங்கட்கிழமையும் கனகராயன்குளம் விவசாயத் திணைக்களத்தில் நாளை செவ்வாய்க் கிழமையும் இந்தக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

நிதிசார் முகாமைத்துவம் தொடர்பான இந்தக் கருத்தரங்கு சமகால கள நிலைமையை கருத்திற்கொண்டே நடத்தப்படுகின்றது. விவசாயிகள், வர்த்தகர்கள், பொதுமக்கள் மற்றும் மாணவர்கள்என சகலதரப்பினரும் இதில் கலந்துகொண்டுபயன் பெறலாம் என இலங்கை மத்திய வங்கியின் கடன் குழுக்களின் தலைவர் ஆர்.சிறிபத்மநாதன் அறிவித்துள்ளார். (வ-11)

"_"

**கிளிநொச்சி கூட்டுறவுத் திணைக்கள மண்டபத்தில் இன்று திங்கட்கிழமையும் கனகராயன்குளம் விவசாயத் திணைக்களத்தில் நாளை செவ்வாய்க் கிழமையும் கருத்தரங்கு நடைபெறவுள்ளன.**

# விமரிசையாக நடைபெற்ற 'சங்கமம்' கண்காட்சி





துணுக்காய், நவ .4

மாந்தை கிழக்கு கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட விநாயகபுரம் அ.த.க.பாடசாலையில் கடந்த 29 ஆம் திகதி பாடசாலை மட்டத்தில் மாணவர்களின் ஆக்கங்கள், ஆற்றல்களைப் பிரதிபலிக்கும்வகையில்'சங்கமம்' கண்காட்சி நடைபெற் றது.

இதில் மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் த.பிருந்தாகரன் பிரதம விருந்தினராகவும் சிறப்பு விருந்தினர்களாக துணுக்காய் வலய திட்டமிடல் உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.தமிழ் மாறன் , மாந்தை கிழக்கு கோட்டக்கல்வி அதிகாரி கு.சிவலிங்கம் , மாந்தை கிழக்கு உபதவிசாளர் சி. செந்தூரன் ஆகியோர்கலந்து கொண்டனர்.

கண்காட்சியின்போது பிரதேச செயலர் கருத்துத் தெரிவிக்கையில்- மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் அடிப்படை வசதிகள் இல்லாத மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படும் விநாயகபுரம் அ.த.க.பாடசாலையில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களால் உருவாக்கப்பட்ட சங்கமம் கண்காட்சி சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. மாணவர்களின் ஆற்றல்களை வெளிக்கொணரும் வகையில்தத்ரூபமாக இது அமைக்கப்பட்டிருந்தது- என்று தெரிவித்தார்.

மாணவர்களால் உருவாக்கப்பட்ட 'அழிவடைந்து செல்லும் சித்திரக் கலையைக் காப்போம்' என்னும் நாடக வடிவிலான விழிப்புணர்வும் ஆதிகால மனிதனுடைய வாழ்க்கையை பிரதிபலிக்கும் வகையில் தத்ரூபமாகஅமைக்கப்பட்டகாண்பியங்களும்பார்வையாளர்களை பெரிதும் கவர்ந்தன. (வ-415)

# கொடிகாமம் கிராமிய வங்கியின் நலன் தரும் புதிய திட்டங்கள்

## வங்கியின் முகாமையாளர் தெரிவிப்பு

வரணி, நவ.4

கொடிகாமம் கிராமிய வங்கி அடுத்த ஆண்டு வாடிக்கையாளர்களுக்கு நலன்தரும் திட்டங்களை அறிமுகப்படுத்தவுள்ளதாக அறிவித்துள்ளது. ஓய்வூதியர்களுக்கு முற் பணம் வழங்குதல், குழுக் களுக்கு இடையிலான கடன்வசதி, நிதி சேமிப்புத் திட்டம், சைக்கிள்தையல் இயந்திரங்களைக் கடன் அடிப்படையில் வழங் குதல் என்பனவே இந்தப் புதிய திட்டங்களாகும்.

இதனை கிராமிய வங்கியின் முகாமையாளர் சி.குமுதினி தெரி வித்துள்ளார். ஓய்வூதியம் பெறுபவர்கள் தொடர்பில் அவர்களின் மாதாந்த ஓய்வூதியத் தொகையில் 60 வீதத்தை முற்பண அடிப்படையில் பணமாக வழங்குதல் அல்லது கிளைகளில் நுகர்வுப் பொருள்களைக் கொள்வனவு செய் வதற் கான வசதியை வங்கி வழங்கும் கடனுக்கான வட்டி வீதம் அறவிடப்படுவதுடன் இக் கடன் மாதாந்தம் அறவிடப்படும்.

குழுக்களுக்கு இடையேயான கடன் வசதித் திட்டத்தில் மூன்று அல்லது ஐந்து பேரை ஒரு குழுவாக இணைத்து 10 ஆயிரம் ரூபா தொடக்கம் 25 ஆயிரம் ரூபா வரையிலான சுயதொழில் கடன் வழங்கப்படும். இவ்வருடம் 10 குழுக்களுக்குக்கு கடன் வழங்கப்படவுள்ளது.

மேலும் இந்த வங்கியில் புதிய வாடிக்கையாளர்களை இணைத்தல் மற்றும் சகாய நிதி சேமத் திட்டம், கடன் வசதியை ஏற்படுத்தும் திட்டத்தின் கீழ் சங்கப் பணியாளர்களிடையே இதனை நடைமுறைப்படுத்தல் மற்றும் சைக்கிள், தையல் இயந்திரங்கள் ஆகியவற்றை 6 மாதம், 12 மாதம் என்ற தவணை களில் இணைக் குழு மீளச் செலுத்தும் வகையில் கடன் அடிப்படையில் வழங்குதல் ஆகியவை வாழ்வாதார திட்ட அடிப்படையில் மேற் கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (க-122)

# முழங்காவில் கிராமத்தில் ஆரம்பப் பாடசாலை



மன்னார், நவ .4

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியுடன் மன்னார் மாவட்ட 'சோஆ' நிறுவனத்தினால் பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முழங்காவில் கிராமத்தில் அமைக்கப்பட்ட ஆரம்பப் பாடசாலை கடந்த வியாழக்கிழமை வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிய 4 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் குறித்த ஆரம்ப பாடசாலையை 'சோஆ' நிறுவனத்தினர் நிர்மாணித்துள்ளனர். இதன் போது ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை மற்றும் மாலை தீவுக்கான தூதுவர் டேவிற் டாலி, ஐரோப்பிய ஒன்றியத்தின் செயற்பாட்டு பிரிவுக்கான தலைவர் வில்லி வடன் பேக், நிகழ்ச்சித்திட்ட, அபிவிருத்தி பிரிவு முகாமையாளர் லெஸ்லி ஜேசுராஜன், 'சோஆ' நிறுவனத்தின் இலங்கைக்கான நன்கொடைப்பிரிவின் தலைவி றேபேக்கா ஓவன், மன்னார் மாவட்ட 'சோஆ' நிறுவனத்தின் முகாமை யாளர் ஜோர்ச்அந்தோனிப்பிள்ளை, பூநகரி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். தர்மரத்தினம், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் தொழில்நுட்பஅலுவலர்வெற்றிவேல் வெற் குமாரர், பாடசாலை அதிபர் திருமதி பர தன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (க-12)

சில தனியார் நிதி நிறுவன முகவர்களின்

# பசப்பு வார்த்தையை விவசாயிகள் நம்ப வேண்டாம்

## மத்திய வங்கியின் கடன் குழுக்களின் தலைவர் அறிவுறுத்து

அச்சுவேலி, நவ.

வன்னி மாவட்டத்தில் தனியார் நிதி நிறுவனங்கள் சிலவற்றின் முகவர்கள் "விவசாயிகள் மற்றும் பாதிப்பு உள்ளாகிய மக்களுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்குகின்றோம்" எனக்கூறி மோசடியில் ஈடுபட்டு வருகின்றனர். 32 வீதத்தில் இருந்து 36 வீதம் வரை இந்தக் கடனுக்கு வட்டி அறவீடு செய்து மக்களை மேலும் பாதிப்புக்கு உள்ளாக்குகின்றனர். இந்த விடயத்தில் மக்கள் விழிப்புணர்வுடன் செயற்படுவதோடு சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் மகளிர் அமைப் புக்கள் பொதுமக்களுக்கு உதவ முன்வர வேண்டும்.

இவ்வாறு இலங்கை மத்திய வங்கியின் கடன் குழுக்களின் தலைவர் ஆர். சிறிபத்மநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் சில தனியார் நிதி நிறுவனங்களின் முகவர்கள் விவசாயிகளுடன் இலாவகமாகப் பேசி மோசடியில் ஈடுபடுவது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விவசாயிகளின் தேவைகள் மற்றும் அறிவு நிலை என்பனவற்றையும் சந்தர்ப்பம் சூழ் நிலையையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி தனியார் நிதி நிறுவனங்கள் சிலவற்றின் முகவர்கள் கடன் மற்றும் அதற்கான வட்டி அறவீடு தொடர்பாக மோசடிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி வருவதோடு பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகின்றனர். இருந்த கைப் பொருளையும் இழந்து மீளமுடியாத துன்பத்துக்கு உள்ளாகின்றனர். இது தொடர்பாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் போலிகளின் வார்த்தைகளை நம்பாமல் இருப்பதோடு விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும். இந்த விடயத்தில் மத்திய வங்கி விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளது.

விவசாயிகள் பொதுமக்கள் பாதிப்புக்கு உள்ளாகாமல் இருப்பதற்கு சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் மகளிர் அமைப்புக்கள் தங்களது உறுப்பினர் களுக்கும் பொதுமக்களுக் கும் உண்மைநிலையைவிளக்கி உதவ முன்வர வேண்டும்- என்றார். (வ-11)

"_"



**விவசாயிகளின் தேவை கள் மற்றும் அறிவு நிலை என்பனவற்றையும் சந்தர்ப் பம் சூழ் நிலையையும் தமக்குச் சாதகமாகப் பயன் படுத்தி தனியார் நிதி நிறு வனங்கள் சிலவற் றின் முகவர்கள் கடன் மற்றும் அதற்கான வட்டி அற வீடு தொடர்பாக மோசடிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.**

# ஆட்டுக் குட்டிகளின் சாவில் மர்மம்

வலி.வடக்கு, நவ.4

புன்னாலைக்கட்டுவன் தெற்கு ஈவினைப் பகுதியில் உள்ள தோட்டத்தில் கட்டப்பட்டிருந்த நான்கு ஆட்டுக் குட்டிகள் மர்மமான முறையில் இறந்துள்ளன.

வெள்ளிக்கிழமை இடம்பெற்றிருந்தஇந் தச் சம்பவம் ஈவினைப்பகுதியில்கால்நடை வளர்ப்பவர்களுக்கு இடையே பதற்றமான நிலைமையை ஏற் படுத்தியுள்ளது.

தோட்டத்தில் கட்டப்பட்ட ஆட்டுக்குட்டிகளை வழமை போன்று காலையில் தோட்ட உரிமையாளர் பார் வையிடச் சென்ற போதே நான்கு ஆட்டுக்குட்டிகளும் மர்மமான முறையில் இறந்து கிடப்பதைக் கண்டு அதிர்ச்சியுற்றுள்ளார். (வ-86)

# போக்குவரத்து விதிகளை பின்பற்றாத மோ.சைக்கிள் வாகனச் சாரதிகள்

## அதனால் விபத்துக்கள்; விபரீதங்கள் எச்சரிக்கிறார் பொலிஸ் அத்தியட்சகர்

யாழ்ப்பாணம், நவ.4

மோட்டார் சைக்கிள், வாகனங்களின் சாரதிகள் மற்றும் பாதசாரிகள் போக்குவரத்து ஒழுங்கு விதிமுறைகளைப் பின்பற்றிச் செயற்படுமாறு பொலிஸ் அத்தியட்சகர் தமயந்த விஜயசிறி அறிவுறுத்துகிறார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மோட்டார் சைக்கிள், கார் உட்பட வாகனங்களைச் செலுத்துவோர் போக்குவரத்து விதிமுறைகளை உரிய வகையில் பின்பற்றத் தவறுகின்றனர். அதனால்தான் விபத்துக்கள் நடக்கின்றன. விபரீதங்களும் நடந்து முடிந்து விடுகின்றன.

பாடசாலைகள் முன்பாக நாற்சந்திகள், வீதிக் குறியீடுகள் இடப்பட்ட இடங்கள் மற்றும் மஞ்சள் கடவைகளில் வேகத்தைக் குறைக்காது பயணிக்கின்றனர். ஒருவரை ஒருவர் முந்திச் செல்ல முற்படுகின்றனர். வீதியில் ஒற்றைக் கோடுகள், இரட்டைக் கோடுகள் வரையப் பட்ட இடங்களில் எந்த வகையான விதிமுறைகள் உள்ளன என்பது பற்றி அவர்களுக்குத் தெரியுமா என்று சந்தேகம் எழுகிறது. அந்த இடங்களில் உள்ள விதிமுறைகளை சாரதிகள் பின்பற்றுவதைக் காண முடியவில்லை.

குறிப்பாக மோட்டார் சைக்கிளில் பயணிப்பவர்கள் அதிவேகமாகப் பயணிக்கிறார்கள். வேகக் கட்டுப்பாட்டு இடங்களிலும் கூட வேகத்தைக் கட்டுப்படுத்துகிறார்கள் இல்லை.

பாதசாரிகள் தாம் நினைத்தவாறு வீதியில் செல்கின்றனர். மஞ்சள் கடவை பற்றிக் கவனம் செலுத்துவதில்லை. தாம் நினைக்கும் இடங்களில் எல்லாம் வீதியைக் கடக்கிறார்கள். அதனால்அவர்கள்விபத்துக்களை ஏற்படுத்தக் காரணமாக இருக்கின்றனர். அவர்களும் விபத்துக்குள் ளாகின்றனர். எனவே பாதசாரிகள் உரிய விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

மோட்டார் சைக்கிளில் பயணிப்பவர்கள் தாம் அவதானமாகச் சென்றாலும் எதிரே வருபவர்கள் அல்லது முந்திச் செல்பவர்கள் கவனவீனமாகப் பயணித்துவிபத்தை ஏற்படுத்திவிடுவார்கள். எனவே ஒவ்வொருவரும் அவதானமாகப் பயணம் செய்யுங்கள். விதிமுறைகளை மீறிச்செயற்படுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்ந்து முன்னெடுக்கப்படும்-என்றார்.

(ஒ-4)

## மாணவர் கெளரவிப்பு



காரைநகர், நவ.4

காரை. மத்தி மேம்பாட்டுக் கழகம் இந்த ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கெளரவிப்பு விழாவினை நடத்தியது.

காரை. மத்தி மேம்பாட்டுக் கழகத் தலைவர் ஆசிரியர் ந.கிஸ்ணபவன் தலைமையில் நடைபெற்ற கெளரவிப்பு விழாவில் பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ், சிறப்பு விருந்தினராக இலங்கை வங்கி முகாமையாளர் வி.விஜயகுமார் கெளரவ விருந்தினராக சி.பரமநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காரைநகர் கோட்டப் பாடசாலைகளில் கல்வி பயின்று புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 19 மாணவர்களுக்கும் இதன் போது பரிசில் வழங்கிக் கெளரவிக்கப்பட்டது. (ரு-250)

# திருடனின் தாக்குதலில் இரவுக் காவலாளி காயம்

அளவெட்டி, நவ.4

திருடனின் தாக்குதலில் காயமடைந்த இரவுக் காவலாளி ஒருவர் யாழ். தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

உடுவில் கமநலசேவை நிலையத்தில் பணியாற்றும் ஏழாலை மேற்கைச் சேர்ந்த கந்தையா செல்லையா (வயது-54) என்பவரே காயமடைந்தவராவர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது: -

கடந்த திங்கட்கிழமை இரவு 9 மணியளவில் குறித்த காவலாளி உடுவில் கமநல சேவை நிலையத்தில் காவல் கடமையில் இருந்துள்ளார். அங்கு நிறுத்தி வைத்திருந்த உழவு இயந்திரத்தின் பற்றறியைக் திருடனொருவன் கழற்றிக் கொண்டிருந்ததை அவதானித்த காவலாளி அவன் அருகே சென்று 'நீ யார்' என்று கேட்ட போது திருடன் தப்பித்து ஓடி விட்டான்.

மீண்டும் அரை மணித்தியாலம் கழித்து திருடன் அந்தப் பகுதிக்குள் நுழைந்தான். அவனைக் கண்ட காவலாளி கத்திக் கூக்குரலிட திருடன் காவலாளியைத் தாக்கி விட்டு ஓடி விட்டான். காவலாளி உடனே அதிகாரிக்கு தொலை பேசி மூலம் தெரியப்படுத்தியதும் நிலையத்துக்கு வந்த அதிகாரி காவலாளியை உடனடியாக வைத்தியசாலையில் சேர்த்துள்ளார்.

(எ-36)

## கந்தசஷ்டி விரத பூசை

யாழ்ப்பாணம், நவ.4

கந்தசஷ்டி விரத காலத்தில் கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்



மணி அம்பாள் ஆலயத்தில் தினமும் காலை 8 மணி தொடக்கம் முருகப் பெருமானுக்கு அபிஷேகம், பூசைகள், அர்ச்சனைகள் என்பனவும் மாலை 4.30 மணிமுதல் கந்த சஷ்டி உற்சவமும் இடம் பெறும். எதிர்வரும் வெள்ளிக் கிழமை மாலை 5 மணிக்கு சூரசங்காரமும் சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு திருக்கல்யாண உற்சவமும் நடைபெறும்.

(வ)

★ ★ ★

அளவெட்டி, ஒக்.4

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் கந்தசஷ்டி திருவிழாவில் சூரசங்காரத் திருவிழா, பாறணை திருக் கல்யாண வைபவ நிகழ்வுகள் வெகு விமரிசையாக நடைபெறவுள்ளன.

நேற்று ஞாயிற்றுக் கிழமை முதல் கந்தசஷ்டி விரதப் பூசைகள் ஆரம்பமாகி உள்ளன.

(எ-36)

## தேங்காய் திருடர்கள் அதிகாலையில் மடக்கிப் பிடிப்பு

மூவரையும் இளைஞர் குழு பொலிஸில் ஒப்படைப்பு

தென்மராட்சி, நவ.4

மிருசுவில், உசன் பகுதியில் அண்மைக் காலமாக தென்னந்தோட்டங்களில் இரவு வேளைகளில் தேங்காய் திருட்டுக்களில் ஈடுபட்டோரில் மூவரை நேற்று அதிகாலை மறைந்திருந்த இளைஞர்கள் சுற்றி வளைத்துப் பிடித்துள்ளனர்.

சந்தைகளில் தேங்காய் விலை அதிகரித்ததையடுத்து தென்னந்தோட்டங்களில் திருட்டுக்களும் தினமும் இடம்பெற்று வந்துள்ளன. மரங்களிலிருந்து தேங்காய்களைப் பிடுங்கும் இந்தத் திருடர்கள் அந்த வளவில் வைத்தே உரித்துக் கொண்டு செல்கின்றனர். திருடர்களின் இந்தச் செயல்களினால் ஆத்திரமடைந்த மக்கள் இவர்களைப் பிடிக்க முயற்சிகளை மேற் கொண்ட போதிலும் அது கைகூட வில்லை. நேற்று அதிகாலை உசன் பகுதியில் உள்ள மூன்று தென்னந்தோட்டங்களில் புகுந்த திருடர்கள் தேங்காய் பிடுங்கும்போது தோட்டத்தில் மறைந்திருந்த இளைஞர் குழு மூவரையும் சுற்றி வளைத்துப் பிடித்தனர்.

இந்த மூன்று திருடர்களையும் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். இந்த மூவரும் அயல் கிராமங்களான விடத்தற்பளை, கிளாலிப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)


## மரண அறிவித்தல்

### கந்தையா நடராஜசிங்கம்

(மருந்துக் கலவையாளர்)



வசாவிளானைப் பிறப்பிடமாகவும் கொக்குவில், நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நடராஜசிங்கம் நேற்று (03.11.2013) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கொக்குவிலில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-சரஸ்வதி தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், பரமேஸ்வரி மற்றும் பஞ்சலிங்கம், சிவலிங்கம், அமுதலிங்கம், ஈஸ்வரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கிருபாகரன் மற்றும் மதனாகரன் (சுவிஸ்), பாஸ்கரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகேஸ்வரி, ஈசா, ஜீதா ஆகியோரின் அன்பு மாமனும், சியானி, அமலா, கபிரிஏலா, சஜீனா, கேஸ்வா, மிதுஷ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2013) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணிக்கு கொக்குவில் மேற்கு, குளப்பிட்டி, ஆனைக்கோட்டை வீதியில் உள்ள அவரது மகனின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
தொ.பே: 021 3214928

(39729)
(10,6,3)

தகவல்:
குடும்பத்தினர்.



## ம்ரண அறிவித்தல்

### திருமதி எட்விஸ் அமிர்தநாயகி அல்போன்ஸ் மாணிக்கராஜா



கரம்பொன் கிழக்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி எட்விஸ் அமிர்தநாயகி அல்போன்ஸ் மாணிக்கராஜா நேற்று (03.11.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் - திரேசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அல்போன்ஸ் மாணிக்கராஜாவின் அன்பு மனைவியும், மொறின் (ஆசிரியர், யா/புனித ஜோன் பொஸ்கோ), டொறின் (நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்- நானாட்டான்), கனியூட் ஆகியோரின் அன்புத் தாயாரும், மைக்கல்தாசன் (திட்டமிடல் உத்தியோகத்தர்- நகர அபிவிருத்தி அதிகாரசபை, வட மாகாணம்), சுதர்சன் (வணிகம்) ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்க ளான லூட்ஸ், வில்பிறட், பத்திநாதன், ஜெகநாதன் அன்ரன் தவநாதன் மற்றும் பிலிப் யோகநாதன், அசந்தா பத்மநாயகி, ஜசிந்தா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக இன்று (04.11.2013) திங்கட்கிழமை அவரது இல்லத்திலிருந்து மு.ப.11.00 மணியளவில் பாண்டியன் தாழ்வு புனித அன்னாள் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப் பட்டு, பின்னர் நல்லடக்கத்துக்காக கரம்பொன் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.10,விதானையார் வீதி,
கொழும்புத்துறை

தகவல்: (39728)(3.6.4)
மைக்கல்தாசன் (மருமகன்)

## 7 ஆம் திகதி ஆசிரியருக்கான தரவட்டம்

தென்மராட்சி, நவ.4

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 வகுப்புகளில் கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான தரவட்டம் எதிர்வரும் ஏழாம்திகதிவியாழக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் இடம் பெறும். (ஓ-9)

## விபத்தில் இருவர் காயம்

தென்மராட்சி, நவ.4

மோட்டார் சைக்கிள் முன் சில்லு வீதி பள்ளத்தில் இறங்கியதில் தூக்கி வீசப்பட்டு இளைஞர் காயமடைந் தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் மீசாலை வடக்கு வேம்பிராயில் இடம் பெற்றது.

மந்துவில் மேற்கைச் சேர்ந்த அருளானந்தசிவம் கேசவன் (வயது-24) என்பவரே காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனாவைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இதேவேளை மேய்ச்சலிலிருந்து அழைத்து வரப்பட்ட மாடு திடீரென வேகமாக ஓடியதில் சைக்கிளில் வந்து மாட்டின் உரிமையாளர் நிலை குலைந்து வீழ்ந்ததில்தலையில் காயம் ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை மட்டுவில் கிழக்கில் இடம் பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த நாகநாதர் கிருஷ்ணமூர்த்தி (வயது-50) என்பவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (வ-9)

# சிறப்பான சேவையை வழங்கிய நூலகங்களுக்கு விருதுகள்

யாழ்ப்பாணம், நவ.4

தேசிய ஆவணமாக்கல் சபையினால் 2013 ஆம் ஆண்டுக்கான ஒக்ரோபர் மாத வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வாசிப்பு மாதத்தில் சிறப்பாக சேவையை வழங்கிய நூலகங்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. வடமாகாணத்தில் யாழ்.மாவட்டத்தில் யாழ். மாநகர சபையின் யாழ். பொது நூலகம், சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி பொது நூலகம், நாவற்குழி பொது நூலகம், மிருசுவில் பொது நூலகம், சரசாலை பொது நூலகம், வரணி பொது நூலகம் ஆகியனவும் நல்லூர் பிரதேச சபையில் நல்லூர் பொது நூலகம், கோண்டாவில் பொது நூலகம், கொக்குவில் பொது நூலகம் ஆகியனவும் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உடுவில் பொது நூலகம், சுன்னாகம் பொது நூலகம் ஆகியனவும் ஊர்காவற்றுறைபிரதேச சபையின் அனலைதீவு பொது நூலகம், நாரந்தனை பொது நூலகம் ஆகியனவும் ,

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச சபையின் கிளிநொச்சி பொது நூலகம், வட்டக்கச்சி பொது நூலகம் ஆகியனவும், வவுனியா மாவட்டத்தின் வவுனியா நகர சபையின் வவுனியா பொது நூலகம், மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்கு பிரதேச சபையின் அடம்பன் பொது நூலகம், நானாட்டான் பிரதேச சபையின் முருங்கன் பொது நூலகம் ஆகியனவும்,

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை தெற்கு ஏறாவூர் பற்று பிரதேச சபையின் பெரிய கல்லாறு பொது நூலகம், காத்தான் குடி நகர சபையின் காத்தான் குடி பொது நூலகம் ஆகியனவும்,

திரு கோணமலை மாவட்டத்தில் பட்டணமும் சூழலும் பிரதேச சபையின்உப்புவெளி பொது நூலகம் ஆகியனவும் இந்த விருதுக்களைப்பெற்றுக் கொண்டன. (ந-14)



கச்சாய் பொது நூலகத்தினர் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடத்திய சுவரொட்டிப் போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுடன் சாவகச்சேரி பிரதேச சபை கச்சாய் உப அலுவலக பொறுப்பதிகாரி, நூலகர் ஆகியோர் . (வ-9)

### பிரதேச சபைக்குரிய காணியில்
## அமைக்கப்பட்ட ஆலயத்துக்கு விரைவில் தீர்வு

மன்னார், நவ.4

நல்லூர் பிரதேச சபைக்குச் சொந்தமான காணியில் தனியார் ஒருவரால் அமைக்கப்பட்டுள்ள ஆலயம் குறித்து விரைவில் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இது தொடர்பாக பிரதேச சபையின் கடந்த மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. கோண்டாவில் பகுதியில் உள்ள மேற்படி காணியில் தனியார் ஒருவர் ஐயப்பன் கோயிலை அமைத்து நிர்வகித்து வருகின்றார். இந்த விடயம் குறித்து ஏற் கனவே பிரதேச சபை நட வடிக்கை எடுக்கத் தீர்மானித்திருந்தது. எனி னும் அது குறித்து துரித செயற்பாடுகள் எவையும் இடம்பெறவில்லை என்பதை பிரதேச சபை உறுப்பினர்கள் பலர் தலைவரின்கவனத்துக்குக்கொண்டு வந்ததுடன் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும்கேட்டுக்கொண்டனர். தற்போது ஆல யத்தை அமைத்த உரிமை யாளர் இல்லை எனவும் நடைபெறவுள்ள திருவிழா வின் போது இது தொடர் பாக சம்பந்தப்பட்டவருடன் கலந்து பேசி முடிவு எட் டப்படும் எனவும் தலைவர் பவசந்தகுமார் தெரிவித் துள்ளார். (வ-7)

நெஞ்சக் கதவை கொஞ்சம்........

செல்வ வேலாயுதம்

### காசோலை விடயத்தில் கவனம்

மாத்தறையிலிருந்து 75 சதத்துடன் பஸ் ஏறி கொழும்பு வந்தவர் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களைக் கொண்ட பல நிறுவனங்களின் சொந்தக்காரரானார். யாழ்.குடாநாட்டிலும் இரண்டு மூன்று தலைமுறைகளைக் கண்ட வர்த்தக நிறுவனங்களின் ஸ்தாபகர்கள் கூட வறுமையின் நிறம் தெரிந்த, அடி மட்டத்திலிருந்து எழுந்தவர்களேதான். வர்த்தக உலகில் அவர்களது விழுந்தெழும்பல்கள்தான் அந்த நிறுவனங்க்ள் இன்றும் நிலைத்து நிற்பதற்கான அத்திபாரங்கள்.

உலக வங்கியின் 2013 தொழில் முயற்சியை நடத்துதல் வர்த்தகச் சுட்டிப் பட்டியலில் இலங்கை பின்னடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் கணிசமான வகிபாகத்தை குடாநாட்டு வர்த்தகமும் கொண்டிருக்கிறது. வியாபார நட்டத்தினால் வர்த்தகர் தலைமறைவு, கடன்காரருக்கு கடை பாரம்கொடுப்பு, குடும்பத்துடன் ஓட்டம், காசோலை மோசடி, கந்துவட்டிக்கு வாங்கிக் கந்தறுதல், சாவை நாடல் ஆகியன இதனை ஊர்ஜிதப் படுத்துகின்றன.

நுகர்வோரது போக்கைப் புரிந்து கொள்ளாதவர்கள், வியாபாரத்தின் நோக்கை அறிந்து கொள்ளாதவர்கள், அதிக ஆசை அதிக நட்டம் என்பதையாவது தெரிந்து கொள்ள வேண்டும். நிகழ்கால இழப்புக்களே எதிர்கால விழிப்புணர்வுக்கு வழியாகும். வர்த்தக செயற்பாடுகளை பல்வகைப்படுத்தாமை, லட்சாதிபதியாகும் வெறி, ஒப்பீட்டு ஆதங்கம் ஆகியவற்றுடன் கைநிறைந்த காசோலைப் புத்தகங்களும் சறுக்கல்களுக்குக் காரணம் எனலாம். வர்த்தகம் வளர வேண்டும், வங்கிகள் வளர வேண்டும், வர்த்தகர்களும் வாழ வேண்டும். காசோலைகளைக் கையாளும் விடயத்தில் சம்பந்தப்பட்டவர்களின் கவனம் ஈர்க்கப்படுமா?

## உயர்தர மாணவர்களுக்கு தென்மராட்சியில் கருத்தரங்கு

தென்மராட்சி, நவ.4

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்கான கணிதம் மற்றும் உயிரியல் பாடங்களுக்கான மாகாண மட்ட கருத்தரங்குகள் நாளை, செவ்வாய்க்கிழமையும், நாளை மறுதினம் புதன்கிழமையும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறுமென அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்தக் கருத்தரங்குகளில் வளவாளர்களாக யாழ்.பல்கலைக் கழக துறைசார் விரிவுரையாளர்களும் தென்மராட்சி ஆசிரியர்களும் கலந்து கொள்ளவுள்ளரெனத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# இரணைமடுவில் இருந்து தண்ணீர் கொடுக்க எமக்கு விருப்பமே; ஆனால் குடாநாட்டு நீர்நிலைகள் குறித்து கவனிக்காதது ஏன்?

### கிளிநொச்சி மக்கள் கேள்வி எழுப்புவதாக யாழ்.அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், நவ.4

இரணைமடுவில் இருந்து யாழ்.குடாவுக்கு குடிதண்ணீர் வழங்குவதற்கு கிளிநொச்சி மக்களும் விவசாயிகளும் விருப்பம் தெரிவிக்கின்றனர்.

எனினும் யாழ்.குடாவில் இதுவரை பயன்படுத்தப்படாத நீர் நிலைகள் தொடர்பாகவும், ஏற்கனவே பயன்பாட்டில் இருந்து தற்போது விடுபட்டுள்ள நீர்நிலைகள் தொடர்பாகவும் நீர்வள முகாமைத்துவ சபை ஏன் மௌனமாக இருக்கின்றது? மக்களும் இது தொடர்பாக ஏன் விழிப்படையாது இரணைமடு தண்ணீரைத் தா எனக் கேட்கிறார்கள் என்று கிளிநொச்சி மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இவ்வாறு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபை செயலாளர் உள்ளூராட்சி உதவியாளர்களுக்கான இடர் முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வு நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் தலைமையுரை நிகழ்த்திய அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டத்தில் உள்ள பல நீர்நிலைகள் முகாமை செய்யப்படவில்லை. நிலத்தடி நீர் மாசடைந் துள்ளது. மலக்கழிவு நீரில் கலந்துள்ளது. மக்கள் குடிதண்ணீரைப் பெறமுடியாதுள்ளது என்பது உண்மை தான்.

எனினும் இங்குள்ள நீர் நிலைகளைஒருங்கிணைந்த ரீதியில் ஆராய வேண்டும். குறிப்பாகத் தீவகம் குடி தண்ணீருக்காக கஷ்டப்படுகின்றது. இதற்காக வறட்சி நிவாரணம் வழங்குகின்றோம்.

ஆனால் அங்கு நன்னீர் ஊற்று உள்ளது என்றும் அங்குபோத்தல்தண்ணீரை உற்பத்தி செய்யலாம் என்ற வகையில் ஒரு முன் மொழிவு எனக்குக் கிடைத்துள்ளது. இந்த விடயம் தொடர் ஆய்வில் உள்ளது. எனவே இன்று உள்ளூராட்சிசபைகளுடன் இணைந்த வகையில்தான் நாம் அபிவிருத்தியை முன்னெடுக்கவுள்ளோம்.

ஒரு பிரதேச அபிவிருத்திக்கு உள்ளூராட்சி சபையும் பிரதேச செயலகமும் ஒருங்கிணைந்த ரீதியில் செயற்பட்டால் நல்ல திட்டங்களை உள்வாங்கி, உபசாரத்திட்டங்களைப் பெற்று பிரதேச அபிவிருத்தியை முன்னெடுக்கலாம். இதற்குஉபதிட்டமுன்மொழிவுகளைத் தயாரிக்க சபைகள் முன்வரவேண்டும்.

மேலும் மலக்கழிவுகள், திண்மக்கழிவுகளால் சூழல் மாசு, நோய் அபாயம் தொடர்பாகப் பேசப்படுகின்றது. இதற்கு விரைவில் நிரந்தர தீர்வினை வழங்கவேண்டும் - என்றார் அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் சங்கரப்பிள்ளை ரவி பேசுகையில்; கிராமிய மட்டத்தில் இடர் முகாமைத்துவகுழு உருவாக்கப்பட்டுள்ளது. பெரும் போக மழையின் பாதிப்புக்களைக் கருத்திற்கொண்டு 10 பெரிய நலன்புரி நிலையங்களை உருவாக்கியுள்ளோம். இதற்கான மலசலகூட வசதி, குடிதண்ணீர் வசதி, சமைப்பதற்கான பாத்திரங்கள் என்பவற்றை தயார் நிலையில் வைத்துள்ளோம்- என்றார்.

இதில் கலந்துகொண்ட நல்லூர் பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் ஈ.சுரேந்திரநாதன், காணிவள பயன்பாட்டு அதிகாரி எஸ்.திவாகரன் ஆகியோரும் கருத்துக்களை முன்வைத்து உரையாற்றினர்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபை செயலாளர்கள், உள்ளூராட்சி உதவியாளர்கள் ஆகியோரும் கருத்தமர்வில் கலந்து கொண்டனர். (ஓ-41)

# தடைவிதித்த இரசாயனங்கள் மீண்டும் நாட்டுக்குள் பாவனை

## விவசாய அமைப்புக்கள் குற்றச்சாட்டு

கொழும்பு.நவ.4



சிறுநீரக நோய் ஏற்படுவதற்குக் காரணமான நான்கு வகையான விவசாய இரசாயனங்களை நாட்டுக்குள் இறக்குமதி செய்ய அரசு தடை விதித்தாலும், அவை பல்வேறு பெயர்களில் இன்னமும் வர்த்தகச் சந்தையில் விற்பனைக்கு வருகின்றன.

இவ்வாறு விவசாய அமைப்புக்கள் குற்றம்சாட்டியுள்ளன.

இந்த விவசாய இரசாயனங்களை இறக்குமதி செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டால் அது குறித்து சுங்கப் பகுதிக்குத் தெரியப்படுத்த வேண்டும். எனினும் அந்த அறிவிப்பு இதுவரை விடுக்கப்படவில்லை என்றும் விவசாய அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

நான்கு விவசாய இரசாயனங்களின் இறக்குமதிக்கு தடைவிதிப்பதற்கு நான்கு மாதங்களுக்கு முன்னரே விவசாய அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

எனினும் அவை இன்னமும் வேறு பெயர்களில் நாட்டில் விற்பனை செய்யப்படுகின்றன என்று விவசாய அமைப்புக்கள் கூறுகின்றன.

நான்கு விவசாய இரசாயனங்கள் சிறுநீரக நோய் ஏற்படுவதற்குப் பிரதான காரணியாகும் என்று உலக சுகாதார அமைப்பின் அறிக்கைகள் தெரிவித்திருந்தன.

அதனையடுத்து விவசாய அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன இரசாயனங்களின் இறக்குமதிக்குத் தடைவிதிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

எனினும் தற்போது அவை அரசின் அனுசரணையுடனேயே இறக்குமதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன என்று விவசாய அமைப்புக்கள் குற்றம் சாட்டுகின்றன.

இத்தகைய விவசாய இரசாயனங்களின் பாவனையால் சிறுநீரக நோயாளர்கள் அதிகரித்துள்ளனர்.

அத்தகைய நோயாளர்களின் உயிர்களை காப்பதற்கு முறையான செயற்றிட்டத்தை அரசு கட்டமைக்கவில்லை என்று குறை கூறப்படுகின்றது.

விவசாய இரசாயனங்களின் இறக்குமதிக்கு தடைவிதிப்பதற்குப் பதிலாக அரசு வேறு உபாயமார்க்கங்களில் அவற்றை இறக்குமதி செய்வதற்கு நிறுவனங்களுக்கு அனுமதிகளை வழங்கியுள்ளதாகத் தெரியவருகிறது. (ச)

வெளிநாடு செல்லும்

# ஆண்கள் தொகை அதிகரித்துள்ளது



கொழும்பு. நவ.4

இந்த ஆண்டில் இதுவரையான 9 மாத காலத்தில் வெளி நாட்டு வேலை வாய்ப்புக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் ஆண்களின் எண்ணிக்கை அதிகரித் துள்ளது.

கடந்த 9 மாத காலத்துள் 1,30,755 ஆண்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக சென்றுள்ள பெண்களின் தொகை 92,122 ஆகும்.

அதற்கமைய பெண்களுடன் ஒப்பிடும்போது ஆண்களே அதிகளவில் வெளிநாட்டு வேலை வாய்ப்பை நாடிச் செல்கின்றனர் என்று வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் மேம்பாடுகள் மற்றும் நலனோம்பு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார். (ச-22)


## இறக்குமதியாகும் பால்மா தொகை குறைவடைந்தது

கொழும்பு.நவ.3

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பால்மா வகைகளின் தொகை குறைவடைந்துள்ளது.

அதனால் தேசிய பால்மா உற்பத்தியை உயர்த்துவதற்கு விசேட செயற்றிட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த கால்நடை வளங்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

தற்போது நாளொன்றுக்கு இரண்டு லட்சம் லீற்றர் பால் இங்கு உற்பத்தி செய்யப்படுகிறது.



அதை நான்கு லட்சம் லீற்றர்கள் வரை அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்று கால்நடை வளங்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-22)



புதிதாக உருவாக்கப்பட்ட சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் செயலர் மேஜர் ஜெனரல் நந்த மல்லவராய்ச்சி புதன்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்துக்கு வருகைதந்தபோது அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

# மூவின மாணவர்களும் கற்க கலவன் பாடசாலை

## திட்டமிடுகிறது கல்வி அமைச்சு

கொழும்பு.நவ.4

இனங்களுக்கு இடையிலான சகவாழ்வை ஏற்படுத்த சிங்கள, தமிழ், முஸ்லிம்கள் என்ற அனைத்து மாணவர்களும் ஒருங்கிணைந்து கல்வி கற்க, ஒவ்வொரு மாகாணங்கள் தோறும் இரு கலவன் பாடசாலைகள் வீதம் அமைப்பதற்கு கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

அதற்கமைய மாகாணம் ஒன்றில் இரு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு அனைத்து மாணவர்களும் கற்கும் வகையில் முன்னோடித் திட்டம் நடை முறைப்படுத்தப்படும்.


**"பல்வேறு இனச் சமூகங்கள் கற்கும் வகையில் கலவன் பாடசாலைகளுக்கு அனுசரணை வழங்கும் கொள்கை அரசுக்கு இருக்க வேண்டியுள்ளது."**

பல்வேறு இனச் சமூகங்கள் கற்கும் வகையில் கலவன் பாடசாலைகளுக்கு அனுசரணை வழங்கும் கொள்கை அரசுக்கு இருக்க வேண்டியுள்ளது என்று கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தனது அறிக்கையில் ஏற்கெனவே பரிந்துரைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-22)

# 10 லட்சம் செவ்விளநீர் தேங்காய்கள் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி

## திட்டமிடுகிறது தெங்கு ஆராய்ச்சி நிலையம்

வருடாந்தம் 10 லட்சம் செவ்விளநீர் தேங்காய்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்று தெங்கு ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது. இந்த ஏற்றுமதி மூலம் 10கோடி ரூபா வரையான வெளிநாட்டு செலாவணியைச் சம்பாதித்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது என்று அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது. இலங்கையிலிருந்து கொரியா, ஜப்பான், பிரிட்டன் போன்ற நாடுகளுக்கு செவ்விளநீர்த் தேங்காய்களை ஏற்றுமதி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் தென்னைப் பயிர்ச் செய்கையாளர்களை ஊக்குவித்து முறையாக செவ்விளநீர், பயிர்ச் செய்கையில் ஈடுபடுத்துவதற்கு தெங்கு ஆராய்ச்சி நிலையம் திட்டமிட்டுள்ளது. (ச-22)



# பாதுகாப்புக் குறைபாட்டால் எங்களுக்கு பெரும் சிக்கல்

## சிறை அதிகாரிகள் கவலை

கொழும்பு.நவ.4

பொலிஸ் பாதுகாப்பு வழங்கும் விடயத்தில் காணப்படும் குறைபாடுகளால் பாதாள உலகக் குற்றங்களுடன் சம்பந்தப்பட்டுள்ள சந்தேக நபர்களை நீதிமன்றங்களுக்கு இட்டுச் செல்லும்போது சிக்கல்களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது என்று சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கைதிகளை நீதிமன்றத்துக்கு ஏற்றிச் செல்லும்போது இதுவரை காலமும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரி-56 துப்பாக்கிகள் மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

அதற்குப் பதிலாக, பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் பொலிஸாரின் பாதுகாப்பு உரிய வேளையில் கிடைப்பதில்லை என்று சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த சந்தேகநபர்களை ஏற்றிச் செல்வதற்கு முன்னர் பொலிஸ் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.



சில சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களுக்கு அண்மையில் சந்தேகநபர்களுடன் பஸ்களை நிறுத்தி வைத்திருப்பது தொடர் நிகழ்வாகிவிட்டது.

அதனால் குறித்த நேரத்துக்கு சந்தே கநபர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த முடியாத சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றன என்று அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அத்தகைய சந்தர்ப்பங்களில் சிறைச்சாலை உத்தியோகத்தர்களே கண்டனங்களுக்கு உள்ளாகின்றனர் என்றும் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (ச-22)

# பிரிட்டன் செல்வதற்கான விதிமுறைகளில் தளர்வு

## 3,000 பவுண்ஸ்கள் செலுத்த வேண்டும் என்ற கட்டாயத் திட்டம் அந்நாட்டு அரசால் நீக்கம்

கொழும்பு, நவ.4

ஆறு ஆபத்தான நாடுகளில் இருந்து பிரிட்டனுக்குப் பயணம் செய்வோர் மூவாயிரம் பவுண்ஸ்களை பிணைப் பணமாக செலுத்த வேண்டும் என்ற கட்டாய திட்டம் இரத்துச் செய்யப்படுகின்றது என பிரிட்டன் உள்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், கானா, நைஜீரியா ஆகிய நாடுகளிலிருந்து பிரிட்டனுக்கு பயணம் செய்வோருக்கு ஆறு மாத கால விசாவை வழங்க பணத்தை வைப்புச் செய்யும் திட்டம் ஒன்றை பிரிட்டன் அரசு கடந்த ஜூன் மாதம் முன்வைத்திருந்தது டன் அது நவம்பர் மாதம் நடைமுறைப்படுத்தப்படும் என உள்துறை அமைச்சர் தெரேசா தெரிவித்திருந்தார்.

6 மாத கால விசா வழங்கப்படும் நபர்கள் அந்த அனுமதி காலத்தின் பின்னர் பிரிட்டனில் தங்கியிருந்தால் வைப்

> "இலங்கை, இந்தியா, பாகிஸ் தான், பங்களாதேஷ், கானா, நைஜீரியா ஆகிய நாடுகளி லிருந்து பிரிட்டனுக்கு பயணம் செய்வோருக்கு

புச் செய்த அந்த பணத்தை அரசு பறிமுதல் செய்யும் என அந்த திட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

விசா காலம் முடிந்து தொடர்ந்தும் பிரிட்டனில் தங்கியிருப்போர் அங்கு தங்கியிருப்பதைத் தடுக்கும் வகையில் இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவது குறித்து அரசு பரிசீலித்து வந்தது என உள்துறை அலுவலகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். இந்நிலையில் அதனைத் தொடர வேண்டும் என்று இன்னமும் முடிவு செய்ய வில்லை என்றும் அவர் கூறினார்.

ஆரம்பத்தில் இது ஆயிரக் கணக்கான பயணிகளைப் பாதிக்கும் என்றாலும் நூற்றுக் கணக்கானவர்களே அதற்கான இலக்கு என ஜூன் மாத அறிக்கைகள் தெரிவித்தன.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த இடமளிக்க போவதில்லை என துணைப் பிரதமர் நிக்கிளாக் அழுத்தங்களை கொடுத்ததையடுத்தே அரசு இந்தத் திட்டத்தை கைவிட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையிலிருந்து பிரிட்டனுக்கு செல்வோர் பிணைப் பணமாக 3 ஆயிரம் பவுண்ஸ் செலுத்த வேண்டுமென்பதை நீக்குமாறு இலங்கை அரசு கோரிக்கை ஒன்றை விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (சி)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இனியும்

காட்சி நிறுவனம் வெளியிட்டுள்ளது. இதில் காண்பிக்கப்பட்ட காட்சிகள் கொடூரமானவையாக இருந்தன. எந்தச் சமூகமும் இதை ஏற்றுக் கொள்ளாது.

மனித உரிமை மீறல்கள் இடம்பெறவில்லை என்று இலங்கை அரசு தொடர்ச்சியாக கூறிவருகின்றது. ஆனால், அங்கு மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளன என்பதற்கு இசைப்பிரியா பற்றிய காணொலி வலிமையான ஆதாரமாகும்.

இசைப்பிரியா தமிழர் என்பது ஒரு புறமிருக்கட்டும். ஒரு பெண்ணை இவ்வாறு நிர்வாணமாக்கி கொலை செய்வது மன்னிக்க முடியாத மனித விரோத நடவடிக்கையாகும்; குற்றமாகும். இந்தக் குற்றத்தைப் புரிந்தவர்கள் மீது இலங்கை அரசு விசாரணை மேற்கொண்டு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேவேளை, இலங்கையில் நடைபெறும் பொது நலவாய மாநாடு தொடர்பில் இந்திய மத்திய அரசு இன்னும் எவ்வித முடிவுகளையும் எடுக்கவில்லை. மாநாட்டில் கலந்துகொள்ள பிரதமர் மன்மோகன் சிங்குக்கு காங்கிரஸ் மத்தியக்குழு ஒப்புதல் வழங்கியுள்ளது என்று வெளியான செய்திகள் தவறானவையாகும். கொழும்பு மாநாட்டில் பங்கேற்க வேண்டாம் என தமிழக முதல்வர் பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார். கலைஞர் கருணா நிதியும் மாநாட்டுக்கு போக வேண்டாம் என கோரிக்கை விடுத்துள்ளார். இதற்கு புறம்பாக தமிழக காங்கிரஸ் தலைவரும் பிரத மரிடம் இதை வலியுறுத்தி யுள்ளார்.

மத்திய அமைச்சர்களான சிதம்பரம், வாசன் ஆகியோரும், நானும் தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் முடிவெடுக்குமாறு பிரதமரிடம் வலியுறுத்தியுள்ளோம்.

பொதுநலவாய மாநாடு நடைபெறுவதற்கு இன்னும் நாள்கள் இருக்கின்றன. எனவே, மத்திய அரசு பிரதமரின் பங்கு பற்றல் தொடர்பில் இன்னும் இறுதிமுடிவை எடுக்கவில்லை அது இன்னும் பரிசீலனை மட்டத்திலேயே இருக்கின்றது. எதுஎப்படியிருந்த போதிலும், தமிழகத்தினதும் இலங் கைத் தமிழர்களினதும் உணர் வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையிலேயே பிரதமர் மன்மோகன் சிங்கின் முடிவு அமையும்" என்றார். (ங-சி)

### காணொலியைக்

உண்மையென நிரூபிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட வர்களுக்கு கடுமையான தண்டனை கிடைத்தே தீரும். இவ்விடயத்தில் அரசு ஒரு போதும் பின்நிற்காது" என்றும் அவர் தெரிவித்தார்.

"இசைப்பிரியா உயிருடன் பிடிக்கப்பட்டு சித்திரவதைப்படுத்தி படுகொலை செய்யப்படும் காணொலி உண்மையானதே என்றும் மிகக் கொடூரமான இச்செயல் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும்" என்றும் இந்திய மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் பகிரங்கமாகக் கண்டனம் தெரிவித்திருந்தார்.

இதுதொடர்பில் அமைச்சர் வாசுவிடம் வினவியபோது அவர் மேலும் தெரிவித்ததாவது-

"நாட்டில் பொதுநலவாய மாநாடு நடைபெறவுள்ள நிலையில், இசைப் பிரியா உயிரோடு பிடிக்கப்பட்டு இலங்கை இராணுவத்தினரால் இழுத்துக் கொண்டு செல்லப்படுகின்ற வீடியோ காட்சியானது தமிழர்களின் மனங்களை குழப்பும் விதமாகவே காணப்படுகிறது. இது சனல் - 4 தொலைக் காட்சியின் திட்ட மிட்ட ஒரு செயலாகும்.

ஏற்கனவே இந்தியத் தமிழர்கள் பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடைபெறுகின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்ற நிலையில், இவ் வீடியோவானது அவர்களை மேலும் தூண்டச் செய்யும் ஒரு செயலாகவே கருதப்படுகிறது.

ஆனால், இவ்வீடியோ மூலம் பொதுநலவாய மாநாட்டுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என கூறமுடியும். அதிலும் இந்த வீடியோ ஒன்றை மட்டுமே காரணம் காட்டி பொது நலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்காது என்றும் எம்மால் உறுதியாகக் கூற முடியும். காரணம், இந்தியா தென்னகத் தமிழர்களை மட்டும் பிரதிநிதித்து வப்படுத்தவில்லையே. அவர்களின் கருத்துகளுக்கு மட்டும் செவிசாய்க்கக் கூடாது.

உண்மையை முழுமையாக உணர்ந்து கொள்ள வேண்டும். ஆகையால் இந்த இசைப்பிரியாவின் வீடியோவை காரணமாக எடுக்காது. முழு தெற்காசிய நாடுகளையும் கவனத்தில் கொண்டு பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்க வேண்டும். தெற்காசிய நாடுகளுடனும் ஒன்றித்து செயற்பட்டாலே இந்தியாவின் பலம் அதிகரிக்கும் என்பதை இந்தியா புரிந்துகொள்ள வேண்டும்.

சனல் - 4 தற்போது வெளியிட்டுள்ள வீடியோவில் இருப்பது இசைப் பிரியாதான் என்றும், அவரைக் கொடூரமாக் கொலை செய்தது இலங்கை இராணுவம்தான் என்றும் உறுதிப்படுத்தப்படுமாயின் சம்பந்தப்பட்டோருக்கு கடும் தண்டனை வழங்கப்படும். இந்த விடயத்தில் அரசு ஒருபோதும் வேடிக்கை பார்த்துக் கொண்டிராது" என்றார்.

### இசைப்பிரியா தொடர்பில்

இசைப்பிரியா கைது செய்யப்பட்டு, பின்னர் படுகொலை செய்யப்பட்டிருப்பதாக தற்போது வெளியாகியிருக்கும் செய்திகள் தொடர்பில் சுயாதீனமான விசாரணை நடத்தப்பட்டு உண்மையைத் தெளிவுபடுத்த வேண்டும். சுயாதீனமான விசாரணை நடத்தப்பட்டு, குற்றவாளிகள் அடையாளம் காணப்படின் நீதியின் முன் நிறுத்தப்பட்ட வேண்டும்.

அதுவே இறுதி போர் தொடர்பாக தமிழ் மக்களிடம் எழுந்திருக்கும் படுகொலைகள் தொடர்பான அச்சங்களுக்கும் சந்தேகங்களுக்கும் விடை காண்பதாக அமையும். இதனால் மக்களிடையே இருக்கும் சந்தேகங்களுக்கும் அச்சங்களுக்கும் நியாயமும் பரிகாரங்களும் காணப்பட வேண்டும்.

எமது கோரிக்கைக்கு ஜனாதிபதி உரிய நடவடிக்கை எடுத்து விரைவில் உண்மையை வெளி உலகிற்கு தெரியப்படுத்துவார் என எதிர்பார்க்கின்றோம்-என்றுள்ளது.

வடமாகாண சபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கைக்கு வந்த நிலையில் ஈ.பி.டி.பி. கட்சி முதற்தடவையாக அரசுக்கு நீதி விசாரணை கோரி கடிதம் எழுதியி ருப்பதாகவும், இதுவரை காலமும் அரசுப்பக்கம் நின்று இவர்கள் இனப் படுகொலைகளை மூடிமறைக்கும் முயற்சியிலேயே ஈடுபட்டு வந்ததாகவும் ஆர்வலர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (ஐ)

### ஐ.தே.க.

மற்றும் சஜித் பிரமதாஸ போன்றோர் இன்று காலை தங்களுக்குள் ஓர் இணக்கப்பாட்டை உருவாக்கிக் கொள்வதற்காக திம்பிரி கஸ்யாய அலுவலகத்தில் இன்று சந்திப் பொன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

இவர்களின் இச்சந்திப்பில் எடுக்கப்படும் இறுதி முடிவுகள் செயற்குழு கூட் டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு கலந்தாலோசிக்கப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த முதலாம் திகதி மாலை ரணில் விக்கிரமசிங்க, கரு ஜயசூரிய, சஜித் பிரமதாஸ சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இதன்போது சஜித் பிரமதாஸ கட்சியின் தலைமைத்துவத்திலிருந்து ரணில் விக்கிரமசிங்க விலகியே ஆக வேண்டும் என வலியுறுத்தியிருந்தார்.

இதனால், இன்று இவர்களின் சந்திப்பானது கட்சிக்குள் மிக முக்கிய மான ஒன்றாகக் கருதப்படுகிறது. இவர் களுக்குள் இருக்கும் கருத்து வேறுபாடுகள் தொடர்பாக முடிவெடுக்கும் ஒரு சந்திப்பாகவும் இது அமையும் என ஐ.தே.க. உறுப்பினர்கள் நம்பிக்கை வெளி யிட்டுள்ளனர்.

அத்தோடு, கட்சியின் தொடர் தோல்விகள், கட்சி உறுப்பினர்களுக்கிடையில் காணப்படும் சர்ச்சைகள் மற்றும் தலைமைத்துவப் பிரச்சினைப் போன்றவற்றுக்கு ஒரு சிறந்த தீர்வொன்று இச்செயற்குழுக் கூட்டத்தில் கிடைக்கும் எனஎதிர்பார்க்கப்படுகிறது

### இசைப்பிரியா பற்றிய

மற்றும் சனல்- 4 வீடியோ விவ காரம் ஆகியன தொடர்பில் கருத்துவெளியிட்ட அவர் மேலும் கூறியதாவது:

"பொதுநலவாய மாநாட்டில் பிரிட்டன் பிரதிநிதிகள் பங்கேற்பது தொடர்பில் நாம் அவர்களுடன் பேச்சு நடத்தினோம். கடிதங்களை எழுதினோம். தற்போதும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

எனினும், தங்களின் பங்கு பற்றல் அவசியம் என பிரிட்டன் அதிகாரிகள் கருதுவதால் கொழும்பு மாநாட்டில் அவர்கள் பங்கேற்பார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் வைத்து மனித உரி மைகள் தொடர்பில் இலங்கையிடம் கேள்வி எழுப்பப்படும் என்று பிரிட்டன் பிரதிநிதிகள் கூறினார்கள். எனவே, இசைப்பிரியா தொடர்பிலும் அவர்கள் கேள்வி தொடுப்பர் என்ற நம்பிக்கை உள்ளது.

அதேவேளை, இனப்படுகொலை சாட்சிகள் தற்போது வெளிவந்த வண்ணமுள்ளன. இவற்றை மறைப்பதற்கு இலங்கை அரசு முயற்சிக்கின்றது. இவற்றை ஒருபோதும் மறைக்கவும் முடியாது மறுக்கவும் முடியாது. நாம் மறக்கவும் மாட்டோம். தொடர்ந்து போரா டுவோம். அனைத்துலக விசாரணை மூலம் நீதி கிடைக்கும் வரை ஓயப் போவதில்லை. இதர புலம்பெயர் அமைப்புகளுடன் இது விடயத்தில் எம்முடன் இணைந்துச் செயற்பட வேண் டும்" என்றார்.

### வலி.வடக்கு

சமர்ப்பிக்கவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

"குறித்த காணிகளை பாதுகாப்பு காரணங்களுக்காக சட்டப்படி பெற்றிருப்பதாக இராணுவம் தெரிவித்திருந்தபோதிலும் காணிகளின் உரிமையாளர்கள் அதனை மறுத்து வருகிறார்கள். காணி உரிமையாளர்கள் தரப்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் நீதிமன்றத்தில் முன்னிலையாகி வாதாடி வருகின்றது. இந்தப் பிரச்சினைக்கு முழுப்பொறுப்பையும் அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று சங்கத்தின் தலைவர் உபுல் ஜயசூரிய கூறியுள்ளார். (ப)

### வடக்கே

நலவாய மாநாட்டுக்கு வரும் தமது நாட்டுக் குழுவினர், வடக்குக்குச் செல்ல விரும்புகின்றனர் என எந்த நாடும் இதுவரை கோரிக்கை விடுக்கவில்லை என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட இலங்கை வெளிவிவகாரச் செயலர் கருணாதிலக அமுனுகம,

பொதுநலவாய மாநாட்டுக்கு வரும் தமது நாட்டின் தலைவர் அல்லது உயர்நிலைப் பிரதிநிதிகள், வட பகுதிக்குச் செல்ல விரும்புவதாக எந்தவொரு நாடும் இதுவரை கோரிக்கை விடுக்கவில்லை. ஆனால் அவர்கள் அத்தகைய கோரிக்கையை முன் வைப்பார்களேயானால், அதற்கான வசதிகளை நாம் ஏற்படுத்திக் கொடுக்கத் தயார். என்று அவர் தெரிவித்துள்ளார். (சி)

Best Wishes
மு/உண்ணாப்புலவு தமிழ் வித்தியாலயம்
பொன்னகர், முள்ளியவளை
பாராட்டி வாழ்த்துகின்றோம்



2013 தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 154 புள்ளி பெற்று சித்தியடைந்த மாணவன்
செல்வன் சயந்தகுமார் கோகிலப்பிரியன்
அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மேலும் 100 புள்ளிகளுக்கு மேற்பெற்ற மாணவர்கள்
செல்வி ச. அஜித்தா - 150    செல்வி க. சாகுஜா - 149
செல்வன் வி.கிசாளன் - 142    செல்வி ர.டிலக்சனா - 123

ஆகிய மாணவர்களையும் வாழ்த்துவதோடு இவர்களுக்கு கல்வி புகட்டிய அதிபர், உப அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

பொன்னகர், முள்ளியவளை.    (39734(10.6)    வாழ்த்துவோர்: பொன்னகர் வாழ் மக்கள்,
Best Wishes

# பற்றிக்ஸ் கல்லூரிக்கு நேற்று வந்தார் சங்ககார



சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நேற்று இடம்பெற்ற முரளிக் கிண்ணத்துக்கான '20 /20' கிரிக்கெட் ஆட்டங்களைப் பார்வையிட யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்தார் இலங்கைகிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், இலக்குக் காப்பாளருமான குமார் சங்ககார. இதன்போது அவருக்கு பற்றிக்ஸ் கல்லூரி சமூகத்தாலும் கிரிக்கெட் ரசிகர்களாலும் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் ஜெறோம் செவ்வாநாயகம் அடிகளால் குமார் சங்ககார அழைத்துவரப்பட்டார். பின்னர் வீரர்களோடும் ரசிகர்களோடும் கலந்துரையாடினார். அதன் பின்னர் நடைபெற்ற கிரிக்கெட் ஆட்டங்களையும் சங்ககார விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் அமர்ந்திருந்து கண்டுகளித்தார். (ஙு-23)





# 'புனிதர்களின் போர்' முடிவுகள்

'புனிதர்களின் போர்' உதைபந்தாட்டத்தில் 14, 20 வயதுப் பிரிவுகளில் புனித பத்திரிசியார் கல்லூரியும், 16, 18 வயதுப் பிரிவுகளில் புனித ஹென்றியரசர் கல்லூரி அணியும் வாகை சூடியது.

யாழ்.மாவட்டத்தில் 'புனிதர்களின் போர்' என வர்ணிக்கப்படும் இளவாலை ஹென்றியரசர் கல்லூரிக்கும் , யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரிக்கும் இடையேயான மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி கடந்த புதன்கிழமை ஹென்றியரசர் மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 14, 20 வயதுப் பிரிவுகளில் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியும், 16,18 வயதுப் பிரிவுகளில் புனித ஹென்றியரசர் கல்லூரி அணியும் வெற்றிவாகை சூடியுள்ளன.

14 வயதுப் பிரிவில் புனித பத்திரிசியார் கல்லூரி அணியை எதிர்த்து புனித ஹென்றியரசர் கல்லூரி அணி மோதியது. ஆட்டம் தொடங்கிய போது இரு அணி வீரர்களும் மிகவும் வேகமாக ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இரு அணிகளும் சமமான பலத்துடன் இருந்தமையால் வெற்றி தோல்வியை நிர்ணயிக்க முடியாது இருந்தது. இருந்தபோது முற்பாதியாட்டம் புனித ஹென்றியரசர் கல்லூரி அணிக்குச் சாதகமாக அமைந்த போதும் அவர்கள் கோல் போடத் தவறிவிட்டனர். இதனால் இடைவேளைக்கு முன்னர் கோல் எதனையும் போடாமல் ஆட்டம் சமனிலையில் இருந்தது.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொர்டங்கியபோது பிற்பாதியாட்டம் புனித பத்திரிசியார் அணி பக்கம் சாய்ந்தது. இதனைச் சரியாகப் பயன்படுத்திய அந்த அணி வீரர் சதுன்சன் 98 ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் போட ஆட்டம் மேலும் விறுவிறுப்படைந்தது. அதன் பின்னர் புனித ஹென்றியரசர் கல்லூரி அணியினர் போராடிய போதும் கோல் எதனையும் போட முடியவில்லை. இறுதியில் 1:0 என்ற கோல் கணக்கில் புனித பத்திரிசியார் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

16 வயதுப் பிரிவில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதனை நிரூபித்துக் கொண்டிருந்தனர். 8 ஆவது நிமிடத்தில் புனித ஹென்றியரசர் அணி வீரர் அன்ரனிராஜ் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தி கோலாக்கினார். அதன் பின்னர் கோல் போட முடியவில்லை. இடைவேளைக்கு முன்னரும், பின்னரும் இரு அணி வீரர்களின் முன்னேற்றத்தை பின் கள வீரர்கள் தடுத்தனர். இதனால் இரு அணிகளாலும் கோல் போடும் வாய்ப்புக்கள் இழக்கப்பட இறுதியில் 1:0 என்ற கோல் கணக்கில் புனித ஹென்றியரசர் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

இளம் வீரர்களின் பலப் பரீட்சையை நிர்ணயிக்கும் போட்டியாக 18 வயதுப் பிரிவுக்கான அமைந்தது. முற்பாதியாட்டத்தில் புனித பத்திரிசியார் அணியினரே பந்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். அவர்களின் பந்துப் பரிமாற்றம் அனைவரையும் கவர்ந்தது. இதனால் 11 ஆவது நிமிடத்தில் அந்த அணி வீரர் ஜெனட் புனித ஹென்றியரசர் அணியின் பின் கள வீரர்களையும் தாண்டி கோலைப் போட்டு அசத்தினர். இதனால் இடைவேளைக்கு முன்னர் 1:0 என புனித பத்திரிசியார் அணி முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கியபோது பல நுட்ப வியூகங்களை அமைத்து புனித ஹென்றியசைர் கல்லூரி அணி மோதியது. இதனால் புனித ஹென்றியரசர் அணியின் ஆட்டத்தை கட்டுப்படுத்த முடியாமல் புனித பத்திரிசியார் அணி திணறியது. இதனால் 9ஆவது நிமிடத்தில் புனித ஹென்றியரசர் அணி வீரர் நிரோஜன் ஒரு கோலைப்போட்டு சமப்படுத்தினார். அதன் பின்னர் 13, 15 ஆவது நிமிடங்களில் அந்த அணி வீரர்கள் கௌதமன், யது ஆகியோர் அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டு புனித பத்திரிசியார் கல்லூரி அணியை நிலை குலைய வைத்தனர். இறுதியில் 3:1 என்ற கோல் கணக்கில் புனித ஹென்றியரசர் அணி வெற்றி பெற்றது.

20 வயதுப் பிரிவுக்கான போட்டியில் புனித பத்திரிசியார் கல்லூரி அணியின் வீரர் சுதர்சனின் ஆட்டம் கட்டுப்படுத்த முடியாமல் நிலை குலைந்தனர் புனித ஹென்றியரசர் அணியினர். சுதர்சனின் ஆட்டம் பார்வையாளர் அனைவரையும் கவர்ந்தது. 10 நிமிடத்தில் புனித பத்திரிசியார் கல்லூரி அணி வீரர் சுதர்சன் கோலைப் போட இடைவேளைக்கு முன்னர் 1:0 என புனித பத்திரிசியார் அணி முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின்னரும் புனித பத்திரிசியார் அணியினரே ஆதிக்கம செலுத்தினர். அந்த அணியைச் சேர்ந்த ஜனட், சுதர்சன் அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டு அசத்தினர். இதனால் ஆட்ட நேர முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் புனித பத்திரிசியார் கல்லூரி அணி வெற்றி பெற்றது. (த-422)

## அரச அதிபர் வெற்றிக்கிண்ண கரம் சுற்றுப்போட்டி இன்று

யாழ்ப்பாணம் நவ4

யாழ். மாவட்டச் செயலக நலன்புரிக் கழகத்தினால் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு இடையில் நடத்தப்படும் அரச அதிபர் வெற்றிக்கிண்ணத்திற்கான கரம் சுற்றுப்போட்டி இன்றும் நாளையும் யாழ். மத்திய கல்லூரி உள்ளரங்கில் நடைபெறவுள்ளது.

இப் போட்டிகள் ஆண், பெண் இருபாலருக்குமான குழு நிலை போட்டியாக நடைபெறவுள்ளன. ஒவ்வொரு அணியிலும் 5பேர் பங்குபற்றுவது கட்டாயம் என்றும்,


3 தனிப் போட்டி, 2 இரட்டையர் போட்டி அடங்கலாக 5 போட்டிகள் ஒரு குழுவுக்கு நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ. 4

மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் நட்சத்திர அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று திங்கட்கிழமை இடம் பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:

**பி.ப 3.30 மணி:**
**வீண்மீன் விளையாட்டுக்கழகம் எதிர் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம்**



**பி.ப 4.30மணி:**
றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக்கழகம். (ஙு-23)

## மானிப்பாய் இந்து சம்பியன்

யாழ்ப்பாணம் நவ4

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியால் அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கு இடையே நடத்தும் நட்சத்திரங்கள் உதைபந்தாட்டத்தின் இறுதியாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி மோதிக்கொண்டது. இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 4:0 என்றகோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது. மூன்றாமிடத்தை தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி பெற்றுக்கொண்டது. (ஙு-23)

# கென்யாவை வென்றது இலங்கை 'ஏ'



இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள கென்ய அணிக் கும் இலங்கை 'ஏ' அணிக்குமிடையிலான 7 போட்டிகள் கொண்ட 20/20 தொடரின் 6ஆவது போட்டியில் இலங்கை 'ஏ' அணி வெற்றி பெற்றுள்ளது.

கொழும்பு கிரிக்கெட் கழக மைதா னத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை 'ஏ' அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கென்ய அணி 20 பந்துப்பரிமாற் றங்களில் 6 இலக்கு களை இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றது.

ஓர் ஓட்டத்திற்கு முதலாவது இலக்கை இழந்த அவ்வணி, 3 இலக்குகளை இழந்து 12 ஓட்டங்களுடன் தடுமாறியிருந்தது. அதன் பின்னர் இணைப்பாட்டங்கள் பகிரப்பட்டு, அவ்வணி 131 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் கென்ய அணி சார்பாக இர்பான் கரிம் 55 பந்துகளில் ஆட்டமி ழக்காமல் 53 ஓட்டங்களை யும் றகெப் பட்டேல் 12 பந்து களில் 28 ஓட்டங் களையும் கொலின்ஸ் ஒபுயா 28 பந்துகளில் 25 ஓட்டங்களை யும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கை 'ஏ' அணி சார் பாக இஷான் ஜெயரத்ன 23 ஓட்டங் களுக்கு 2 இலக்குகளையும் லஹிரு ஜெயரத்ன 28 ஓட்டங்களுக்கு 2 இலக்கு களையும் இசுரு உதான ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

132 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை 'ஏ' அணி 19.2 பந்து பரிமாற்றங்களில் 5 இலக்கு களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. முதலாவது இலக் குக்காக 74 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, அதன் பின்னர் இடைநடுவில் சிறிது மந்த ஆட்டத்தை வெளிப்படுத்திய போதிலும், இறுதியில் வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் இலங்கை 'ஏ' அணி சார்பாக உபுல் தரங்க 45 பந்துகளில் 48 ஓட்டங்களை யும் மஹேல உடவத்த 36 பந்துகளில் 31 ஓட்டங்களையும் கித்துருவன் விதானகே 12 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 20 ஓட்டங் களையும் பெற்றனர். பந்து வீச்சில் கென்ய அணி சார்பாக ஹிரேன் வரய்யா 15 ஓட்டங்களுக்கு 3 இலக்கு களையும் நெஹேமியா ஒடி யம்போ, றகெப் அகா ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இதன்படி, 6 போட்டிகள் முடி வில் இத்தொடரில் இலங்கை 'ஏ' அணி 5 - 1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (கு)

## ஸ்ரீவாசன் மீது முறைப்பாடு

நடந்து முடிந்த ஐ.பி.எல் போட்டிகளில் சூதாட்ட விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

சூதாட்டத்தில் ஈடுபட்டதாக ஸ்ரீசாந்த் உள்பட மூன்று வீரர்கள் கைது செய்யப்பட்டனர். வீரர்கள் மட்டுமல்லாமல் ஐ.பி.எல் அணியின் நிர்வாகத்தில் உள்ளவர்கள் மீதும் புகார் கூறப்பட்டது. சென்னையில் அணியின் உரிமையாளர் ஸ்ரீனிவாசனின் மருமகன் மீதும் புகார் கூறப்பட்டது. இதனையடுத்து அவர் கைது செய்யப்பட்டு பிணையில் விடப்பட்டார்.

ஸ்ரீனிவாசனும், இந்தியக் கிரிக்கெட் சபைத் தலைவர் பதவியில் இருந்து ஒதுங்கியிருந்து தற்போது நீதிமன்றத்தின் உத்தரவுப்படி தலைவராகி உள்ளார். இந்நிலையில் கடந்த மே மாதம் 12ஆம் திகதி ஜெய்ப்பூர் சாவை மன்சிங் மைதானத்தில் ராஜஸ்தான்-சென்னை சுப்பர் கிங்ஸ் அணிகளுக்கு இடையே நடைபெற்ற போட்டியில் சூதாட்டம் நடைபெற்றதாக இந்தியக் கிரிக்கெட் சபைத் தலைவர் ஸ்ரீனிவாசன் மற்றும் அவரது மருமகன் குருநாத் மெய்யப்பன் மீது முறைப்பாடு பதிவு செய்து விசா ரணை நடத்த வேண்டும் என்று ஜெய்ப்பூரில் உள்ள ஜோதி நகர் பொலிஸ் நிலையத்துக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதனையடுத்து இருவர் மீதும் ஜோதிநகர் காவல் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளது.

# பார்சிலோனா வெற்றி



ஸ்பானியல் அணிக்கு எதிரான லா லிகா உதைபந்தாட்ட லீக் போட்டியில் பார்சிலோனா அணி வெற்றி பெற்றது. ஸ்பெயினில், உள்ளூர் அணிகள் பங்கேற் கும் லா லிகா உதைபந்தாட்டத் தொடர் நடக்கிறது. இதன் லீக் போட்டியில் பார்சிலோனா, ஸ்பானியல் அணிகள் மோதின. முதல் பாதியில் இரு அணி வீரர்களும் கோல் எதுவும் அடிக்கவில்லை.

விறுவிறுப்பான இரண்டாவது பாதியில் பார்சிலோனா அணியின் அலெக்ஸ் (68ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். இதற்கு ஸ்பானியல் அணி வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை. ஆட்ட நேர முடிவில், பார்சிலோனா அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

புள்ளிப்பட்டியலில், பார்சிலோனா அணி (34 புள்ளி) முதலிடத்தை தக்க வைத்துக் கொண்டது. அடுத்த இரண்டு இடங்களில் முறையே அத்லெட்டிகோ மாட்ரிட் (30), ரியல் மட்ரிட் (25) அணிகள் உள்ளன. (கு)

# ரோஹித் சர்மா உலக சாதனை



இந்திய மற்றும் ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையில் நடைபெற்ற ஏழாவதும் இறுதியுமான கிரிக்கெட் போட்டி யில் இந்தியா 57 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது. ரோஹித் சர்மாவின் அபார இரட்டைச் சதத்தின் துணையுடன், ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஏழாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டியில், இந்திய அணி 383 ஓட்டங்களை குவித்தது.

இந்தப் போட்டியில் சர்வதேச ஒருநாள் போட்டியில், இரட்டைச் சதம் அடித்த மூன்றாவது வீரர் என்ற உலக சாதனையை ரோஹித் சர்மா படைத்தார்.

இவருக்கு முன்பு ஒருநாள் போட்டிகளில் இரட்டைச் சதமடித்தவர்கள் இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் மற்றும் வீரேந்திர சேவாக் ஆகியோர் ஆவர். அத்துடன், ஒருநாள் போட்டியில் ஒரே இன்னிங்ஸ்சில் அதிக சிக்ஸர்கள் அடித்த வீரர் என்ற சாதனையையும் அவர் புரிந்தார். ஆஸ்திரேலியாவின் ஷேன் வொட்சனின் சாதனை இதன் மூலம் அவர் முறியடித்தார். (கு)

# மக்களின் மனம் கவர்ந்த வீரர் யார்?



இந்த விருதுக்கு இந்தியாவின் சார் பில் அணித் தலைவர் டோனி மற்றும் விராட் கோஹ்லியின் பெயர்கள் பரிந் துரை செய்யப் பட்டுள்ளன.

மக்கள் விரும்பும் கிரிக்கெட் வீரருக்கான விருதுக்கு அணித்தலைவர் டோனி, விராட் கோஹ்லியின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி)மக்கள் விரும்பும் கிரிக்கெட் வீரர் என்ற விருதை வழங்க உள்ளது.

இந்த விருதுக்கு இந்தியாவின் சார்பில் அணித்தலைவர் டோனி மற்றும் விராட் கோஹ்லி ஆகியோரின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன. இந்த ஆண்டுக்கான ஐ.சி.சி கிரிக்கெட் விருதுகள் டிசெம்பர் 13ஆம் திகதி அறிவிக்கப்பட உள்ளன.

இவர்களுடன் ஆஸ்திரேலியாவின் மைக்கல் கிளார்க், இங்கிலாந்தின் குக் மற்றும் தென்னாபிரிக்காவின் டி வில்லியர்ஸ் ஆகியோரும் இந்த விருதுக்கான பரிந்துரைப் பட்டியலில் இடம்பெற்றுள்ளதாக ஐ.சி.சி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

**திருத்துநர் தேவை**
யாழ். நகரில் தொலைபேசி விற்பனை நிலையத்துக்கு Mobile திருத்துநர் உடன் தேவை.
(Mobile Repair) (சி/13710)(6.4.3)
தொடர்பு: 077 546 3167

**Diploma in Mobile Phone Repairing**
சகல வகையான கைத்தொலைபேசிகளையும் நீங்களே திருத்துவதற்கான சுயதொழில் வாய்ப்பு கற்கைநெறி
முல்லைத்தீவு, நெல்லியடி, மானிப்பாய் ஆகிய இடங்களில் புதிய பிரிவுகள் ஆரம்பமாக உள்ளதால் இக் கற்கைநெறியில் இணைய விரும்பும் மாணவர்கள் உடன் தொடர்புகொள்ளவும். முடிவில் அரச சான்றிதழ் வழங்கப்படும். (காலம் - 2 மாதங்கள்)
இன்றுவரை என்னிடம் 2000 மேற்பட்ட மாணவர்கள் கற்றுவெளியேறி உள்ளதுடன் உரிய தொழில் வாய்ப்பையும் பெற்றுள்ளனர்.
மேலதிகவிபரங்களுக்கு :- 0777 110 862

## தொடரைக் கைப்பற்றியது பங்களாதேஷ்



பங்களாதேஷ்- நியூசிலாந்து அணிகளுக்கு இடையேயான 3 ஆவது ஒரு நாள் போட்டி நேற்று பதுல்லாவில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் களத்தடுப்பை தேர்வு செய்தது. அதனை அடுத்து நியூசிலாந்து அணியின் தேவ்சிச்- லதாம் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். இருவரும் நல்ல தொடக்கம் கொடுத்தனர்.

தேவ்சிச் 46 ஓட்டங்களிலும், லதாம் 43 ஓட்டங்களிலும் ஆட்டம் இழந்தனர். அதன்பின் டெய்லரும், முன்ரோவும் ஜோடி சேர்ந்தனர். இருவரும் பங்களாதேஷ் அணியின் பந்து வீச்சை நாலா புறமும் விளாசித் தள்ளினர். டெய்லர் 107 ஓட்டங்களும், முன்ரோ 85 ஓட்டங்களும் எடுத்து ஆட்டம் இழந்தனர். இவர்கள் இருவருடைய சிறப்பாட்டம் காரணமாக நியூசிலாந்து 307 ஓட்டங்களைக் குவித்தது.

308 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் பங்களாதேஷ் களம் இறங்கியது. தொடக்க வீரர் சம்சுர் ரஹ்மான் 96 ஓட்டங்களையம் நமீம் இஸ்லாம் 63 ஓட்டங்களையம் எடுத்தனர். இறுதியில் நசீர் ஹொசைன் அதிரடியாக விளையாடி 44 ஓட்டங்களை எடுத்து வெற்றிக்கு வழி வகுத்தார். பங்களாதேஷ். 49.2 பந்துப்பரி மாற்றங்களில் 6 இலக்குகள் இழப்புக்கு 309 ஓட்டங்கள் எடுத்து 4 இலக்குகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை பங்களாதேஷ் 3-0 என வென்று நியூசிலாந்தை 'வெள்ளை அடித்தது'. இந்த போட்டியின் ஆட்ட நாயக பங்களாதேஷ் அணியைச் சேர்ந்த ஷம்சுர் ரகுமானும் தொடர் ஆட்ட நாயகனாக அதே அணியைச் சேர்ந்த ரஷீமும் தெரிவ செய்யப்பட்டனர். (400)

# தரப்படுத்தலில் முதல் இடம்

இந்தியா- ஆஸ்திரேலியா அணிகள் மோதிய 7 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் இந்தியா 3-2 என்ற கணக்கில் வென்று தொடரை கைப்பற்றியது.

இந்தத் தொடரில் ஆஸ்திரேலிய அணி 300 ஓட்டங்களுக்கு மேல் இரண்டு முறை எடுத்த ஓட்டங்களை இந்தியா தாண்டி வெற்றி பெற்றது. இந்த இர ண்டு போட்டிகளிலும் விராட் கோஹ்லி சதம் அடித்து அசத்தினார். அத்தோடு மட்டுமல்லாமல் 5 போட்டிகளில் விளையாடி இரண்டு சதம் மற்றும் ஒரு அரை சதத்துடன் 344 ஓடடங்களை குவித்துள்ளார். இதில் இரண்டு போட்டிகளில் கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார். சராசரி 114.66 ஆகும்.

இந்த தொடரில் சிறப்பாக விளையாடியதால் ஒரு நாள் கிரிக் கெட் போட்டியின் தரவரிசையில் 4ஆவது இடத்தில் இருந்த கோலி, முதன் முறையாக முதல் இடத்துக்கு முன்னேறியுள்ளார். முதல் இடத்தில் இருந்த தென்ஆபிரிக்காவைச் சேர்ந்த அம்லா இர ண்டாவது இடத்துக்கு பின்தள்ளப்பட்டார். இதில் மூன்றாம் இடத்தில் ஆஸ்திரேலிய வீரர் பெய்லி உள்ளார்.

பந்து வீச்சில் முதல் இடத்தில் இருந்து ரவிந்திர ஜடேஜா 3ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார். பாகிஸ்தான் வீரர் சயீத் அஜ்மல் முதல் இடத்தை பெற்றுள்ளார். (400)

## மரண அறிவித்தல்

### கணபதி தம்பு (பெரியதம்பி)



மீசாலை மேற்கு, கேணியடி வீதியைச் சேர்ந்த கணபதி தம்பு (பெரியதம்பி) நேற்று (03.11.2013) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி செல்லம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும், நேசமணியின் அன்புக் கணவரும், கிருபாகரன், சிவகுமார், மகேஸ்வரன், கிருஷாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வராணி, சுபீனா, புஸ்பகாந்தி, நிறஞ்சன்குமார் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.11.2013) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மீசாலை

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### கந்தர் பழனி

காரைநகர் கிழக்கு, களபூமி, பிட்டியெல்லையை சேர்ந்தவரும் சங்கத்தானை சாவகச்சேரியை வசிப்பிட மாகவும் கொண்ட கந்தர் பழனி நேற்று முன்தினம் (02.11. 2013) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நாகமுத்து கந்தர்- இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும், சுந்தரியின் சகோதரனும், கந்தையா (வியாபாரி) - இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், சண்முகராஜா (டென்மார்க்), குகனேஸ்வரன் (சட்டத்தரணி, மீசாலை), குகனேஸ்வரி, தவமலர், பத்மராஜா (சுவிஸ்), உதயகுமார் (பிரான்ஸ்), தர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், இந்துமதி (டென்மார்க்), ரஜீனா (ஆசிரியை), சர்மிளா (சுவிஸ்), காலஞ்சென்ற சிவராசா மற்றும் கோவிந்தசாமி, கிருபானந்தராசா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பங்களா வீதி, மீசாலை மேற்கில் உள்ள இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (04.11.2013) திங்கட்கிழமை இறுதிக்கிரியைகள் இடம்பெற்று மு.ப. 11 மணியளவில் தகனக்கிரியைக்காக காரைநகர் கிழக்கு தில்லை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக் கொள்ளவும்.

மீசாலை மேற்கு, மீசாலை. (c.3597.14.17)

தகவல்: குகனேஸ்வரன்.
(மகன்-சட்டத்தரணி)

**மென்பனி தூவும்''''**
**கனடா தேசத்தில்**
படிக்க மாதம் மூன்று இலட்சம் வரை உழைக்க அரிய வாய்ப்பு
★மேற்படி விசா தொடர்பான சில உண்மைப் பதிவுகள்
* 6 பேர் மட்டுமே வெற்றி பெற்றுள்ளனர். இரண்டு பேர் விசா நிராகரிக்கப்பட்டுள்ளனர்.
* உரியதிகதியில் விசா வெற்றியளிக்காத காரணத்தினால் 5 பேர் இதில் இருந்து பின் வாங்கி உள்ளனர்.
* இது தங்களது கல்வித் தகைமைக்கு ஏற்றவாறு சட்ட வரம்பிற்கு உட்பட்டு நிறைவேற்றப்படுவதற்கு நியாயமான காலம் தேவைப்படும்.
இவ் விளக்கம் கௌரவ இயக்குனர் சபைக்கட்டளைப்படி பிரசுரமாகிறது
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090

**IT Diploma Courses**
* Diploma in Information Technology
* Dip. in Computerized Accounting
* Dip. in Pre-Press Desktop Publishing
* Dip.in Web Designing & Development
* Dip. in Video Production & Multimedia
* AutoCAD
* Tally Accounting
புதிய பிரிவுகள் ஆரம்பம்
* JAVA
* .VBNET
* PHP
* C, C++
Diploma in Hardware Engineering
PC & LapTop
COURSE FEES RS. 3 400.00
முழுமையானதும் தரமானதுமான கணினிக்கல்வி
இலங்கை அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம். (TVEC Reg.No. P25/0056)
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம்: No.113, கஸ்தூரியார் வீதி, Tel.: 021-222 4403
நெல்லியடி: M. M. V. வீதி, Tel.:021-226 2470
சாவகச்சேரி: கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0775
சுன்னாகம்: 130, கே.கே.எஸ். வீதி, (NSB வங்கி அருகில்) Tel.:021-224 1970

**மணல் விற்பனைக்கு**
கட்டட வேலைகளுக்கும் பூச்சு வேலைகளுக்கும் சிறந்த மணல் மண் விற்பனைக்கு உண்டு.
4 ½ ரக்ரர் 17500/=
தொடர்பு : கண்ணா
077 6766499, 0777 590792 (39723) (3.4.6)

**SPOKEN ENGLISH WITH DIPLOMA CERTIFICATE**
இம்முறை A/L எழுதியோர், தொழில் புரிவோர், இளைஞர் யுவதிகள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
"எமது 3 மாத பயிற்சி நிறைவில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பிவழங்குவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்"
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 09.11.2013 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. மாலை 01.00-03.00
4. மாலை 03.00-05.00
வாரநாள் (செவ்வாய், வியாழன்) பிரிவுகள் ஆரம்பம் 07.11.2013
1. காலை 09.00-11.00
2. காலை 11.00-01.00
SAAMSON Language School
யாழ்நகர். 077 621 4567

**பொன்னான சந்தர்ப்பம்**
புத்தம் புதிய வரவு......
IT டிப்ளோமாதாரிகள் ஆஸ்திரேலியாவில் படிக்க உழைக்க தாமாக நிரந்தரக் குடியுரிமை 2 வருடத்தில் பெற அரிய வாய்ப்பு.
இது தொடர்பான சகல சட்ட ஆவணங்களையும் எமது அலுவலகத்தில் பார்வையிடலாம்
விசா துணைவகுப்பு 457
நிபந்தனைகள்:-
* ITதுறையில் ஆங்கில மொழி மூலமான டிப்ளோமா. 40 வயதுக்கு கீழ்.
* குடும்பமாக சென்று 2 வருடத்தில் நிரந்தர குடியுரிமை பெற சட்டரீதியாக வாய்ப்பு.
குறிப்பு:- மேற்படி துணை வகுப்பு 457 நிபந்தனைகளை சுயமாக இணையத்தில் ஆய்வு செய்த பின்னர் திசைகாட்டிக்கு ஆலோசனைக்கு வருவது மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும். (39733)
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.